
# ஒளியருவி



**லைசியம் கல்வி நிலையம்**
**காக்காச்சிவட்டை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## லைசியம் கல்வி நிலையம்

# ஒளியருவி

காக்காச்சிவட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | - | ஒளியருவி |
| நூல் வகை | - | சஞ்சிகை |
| அளவு | - | B5 |
| பக்கங்கள் | - | xxiv + 108 |
| பதிப்பு | - | முதலாம் பதிப்பு 2024 கார்த்திகை 03 |
| அச்சுப்பதிப்பு | - | துர்க்கா அச்சகம், மட்டக்களப்பு - 0652053060 |
| வெளியீடு | - | லைசியம் கல்வி நிலையம், காக்காச்சிவட்டை |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஒளியருவியை அலங்கரிப்பவைகள்


| | | |
|---|---|---|
| 01. | கல்வி நிலையத்தின் சுருக்க வரலாறு | - 01 |
| 02. | உன் பெயர் லைசியம் | - 09 |
| 03. | நீரின்றி அமையாது உலகு | - 10 |
| 04. | எமது சமூகத்தின் வளர்ச்சியை நோக்கிய பயணம் - ஓர் கண்ணோட்டம் | - 11 |
| 05. | காலக் கணிதன் | - 14 |
| 06. | இடர்பாடுகளும் இடைவிலகலும் | - 16 |
| 07. | மனிதா உனக்கு | - 18 |
| 08. | மும்மொழித் தேர்ச்சியின் அவசியம் | - 20 |
| 09. | Importance of learning English Language | - 25 |
| 10. | என் இனிய தலைமுறையே | - 27 |
| 11. | உடல் உறுப்பு கடிகாரம் | - 31 |
| 12. | பாடசாலைக் கல்விமுறையில் பரதக்கலை | - 33 |
| 13. | 21ம் நூற்றாண்டில் கல்வித் துறையில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தின் முக்கியம் | - 35 |
| 14. | லைசியம் (L.E.C) | - 36 |
| 15. | நான் ஒரு பறவையானால் | - 38 |
| 16. | இந்துமதம் கண்ட அறிவியல் | - 39 |
| 17. | பொது அறிவு | - 43 |
| 18. | எது முதலீடு | - 45 |
| 19. | தாய் தந்தையின் சிறப்பு | - 47 |
| 20. | நீதான் உனக்கு எதிரி | - 48 |
| 21. | அவனுக்கே அவன் அந்நியமானவன் | - 50 |
| 22. | தாய்மையின் உயர்வு | - 51 |
| 23. | பல்கலைக்கழக சிறப்பு | - 52 |
| 24. | சர்வதேச கிரிக்கெட் | - 54 |
| 25. | லைசியத்தின் கனவுக் கவிகள் | - 57 |
| 26. | என் இளமை பொற்காலம் | - 58 |
| 27. | மாணவர் மற்றும் குடும்ப சீர்கேடுகளால் மாணவர் மனநிலையின் சீரழிவுகள் மற்றும் எதிர்கொள்ளும் சவால்கள் | - 59 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

28. வெற்றியின் அடிக்கல், நன்மையை நாடுங்கள் - 62
29. காகமும் அன்னப்பறவையும் - 63
30. විශ්වාසය හා උත්සාහය - 64
31. சவால்களை முறியடித்து சரித்திரம் படைப்போம் - 65
32. கல்வியின் சிறப்பு - 67
33. எமது உடல் பற்றி சிறிது அறிந்து கொள்வோம் - 69
34. ஒரு கல்லூரியின் கல்வி - 70
35. பெற்றோர் தியாகம் - 71
36. ගුරුවරයා - 72
37. பள்ளிக்கூட கல்வியின் இழையோடல் - 73
38. என் அப்பா - 75
39. நான் யாருமற்ற தீவில் விடப்பட்டபோது - 76
40. கல்வி, அன்னை - 78
41. செய்வன திருந்தச் செய் - 79
42. எண்ணெய்ச்சிந்து பாடலும் கல்வியில் அதன் தாக்கமும் - 80
43. மாணவர் அடைவுமட்ட பகுப்பாய்வுகள் - 93
44. லைசியம் கல்வி நிலைய ஆசிரியர் விபரம் - 106
48. லைசியம் கல்வி நிலைய நிருவாக உறுப்பினர்கள் - 107
49. அனுசரணையாளர்கள் - 108




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்வெளியீட்டுக் குழு

**01. தலைவர்** - திரு மு.கோவிந்தராசா

**02. நூலாசிரியர்கள்** - திரு சு.பாஸ்கரன்
திரு சா.மோகன்ராஜ்

**03. செயலாளர்** - திரு த.ஐங்கரன்

**04. பொருளாளரும் ஆலோசகரும்** - திரு ம.சுரேஸ்

**05. உறுப்பினர்கள்** - திருமதி சு.கோவிந்தராசா
திரு யோ.சஞ்சீவ்
திரு கி.சதீஸ்வரன்
திரு ர.மோகப்பிரசன்னா
திரு சு.திலீப்குமார்
திரு கோ.நவநீதன்
திரு த.சிவாகரன்
செல்வி இ.வினித்தா
செல்வி கு.திஷாயினி
செல்வி சோ.சசிகலா
செல்வன் சு.ஜனிஸ்ரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மகுட வாசகம்

'சிறந்த கல்வி நற்சமூகம்'

## தூரநோக்கு

'சவால்களை வெற்றிகொள்ளும்

ஆளுமையுள்ள நற்சமூகம்''

## பணிக்கூற்று

''பூரண விருத்தி பெற்ற ஒழுக்கமுள்ள

பிள்ளைகளை உருவாக்குவதனூடாக

அறிவு, திறன் மனப்பாங்கோடு தொழில்


நுட்பத்தேர்ச்சி பெற்ற நற்சமூகத்தைக்

கட்டியெழுப்புதல்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தமிழ் மொழி வாழ்த்து



வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே !
வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே !


ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே !

சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே !

வாழ்க தமிழ் மொழி ! வாழ்க தமிழ் மொழி !!
வாழ்க தமிழ் மொழியே !!
வானம் மறிந்த தனைத்து மறிந்து
வளர்மொழி வாழியவே !

**மகாகவி பாரதியார்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# ஆசிச் செய்தி

**RAMAKRISHNA MISSION**
(ASHRAMA AND CHILDREN'S HOMES)
Ramakrishnapuram, Batticaloa - 30000
0094-65-2222752 | 0759445309 | batticaloa@rkmm.org | rkmbatticaloa.org

மண்டூர் காக்காச்சிவட்டை லைசியம் கல்வி நிலையமானது தனது பிரதேச மக்களின் கல்வி மேன்மை கருதி 13 ஆண்டுகளாகப் பணியாற்றி வருகின்றது என அறிந்தோம். இக்கல்வி நிலையத்தினால் ஆசிரியர் தினம், சிறுவர் தினம், பரிசளிப்பு விழா ஆகிய நிகழ்வுகளை இணைத்து நடாத்திவரும் முப்பெரும் விழாவில் வெளியிடவிருக்கும் " ஒளியருவி" சிறப்பு மலருக்கு ஆசிச்செய்தியினை வழங்குவதில் மிக்க மகிழ்சியடைகிறோம்.

"கல்வி என்பது மனிதனிடம் ஏற்கனவே இருக்கின்ற பூரணத்துவத்தை வெளிப்படுத்துவது" என்கிறார் சுவாமி விவேகானந்தர். அத்துடன் "எல்லா ஆற்றல்களும் உங்களுக்குள் இருக்கிறது. உங்களால் எதையும் செய்ய முடியும் என்பதை நம்புங்கள். நீங்கள் பலவீனர்கள் என்று எண்ணாதீர்கள்! உங்கள் உள்ளிருக்கும் தெய்வீகத்தை வெளிப்படுத்துங்கள்" என்றும் கூறுகிறார்.

இன்றைய சூழ்நிலையில் மாணவர்களுக்கு கல்வி கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்களின் பொறுப்பு அளப்பெரியது! நமது சமுதாயத்தைப் பலப்படும்மும் விதமாக நல்லொழுக்கத்திலும் கருணையிலும் பயிற்சியளிக்க வேண்டும். மாணவர்களுடைய மனத்தை மனிதநேயத்திலும் தொண்டிலும் வளப்படுத்துவோம். ஆளுமை வளர்ச்சியின் முக்கியமான பகுதி இந்த தொண்டு உள்ளமே.

இம்முறை நடைபெறவிருக்கும் முப்பெரும்விழா மற்றும் "ஒளியருவி" சிறப்பு மலர் வெளியீடு என்பன இனிதே நடைபெற வாழ்த்துகிறோம். அத்துடன் மலர் வெளியீட்டில் அர்ப்பணிப்போடு செயற்படும் இக் கல்வி நிலையத்தின் பணிப்பாளர், ஆசிரியர்கள், மலர்க்குழு, மாணவர்கள், அனைவருக்கும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் அன்னை ஸ்ரீ சாரதா தேவியார், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் நல்லாசிகளையும் வேண்டிக் கொள்கின்றோம்.

- நன்றி -

இறைபணியில்,

[signature]

(சுவாமி நீலமாதவானந்தர்)
பொது முகாமையாளர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# ஆசிச் செய்தி

விரிந்து பரந்த நீர், நிலம் பண்பாட்டு வளம் நிறைந்த காக்காச்சிவட்டைப் பகுதியில் கல்விப்பணியாற்றும் லைசியம் வாழ வாழியவே...

எங்கள் பகுதியில் ஒழுக்கமும் கல்வியும் சிறந்தோங்க செயற்பட்டுவரும் கல்வி நிலையமும் அதன் பொறுப்பாசிரியர் மற்றும் ஏனைய ஆசிரியர்கள் அனைவரும் கண்ணியத்துக்குரியவர்கள் அந்த வகையிலே வருடம் தோறும் இடம்பெற்று வருகின்ற முப்பெரும் விழாவோடு இவ்வருடத்தில் ஒளியருவி என்னும் நூலும் வெளியிடப்படவுள்ளதை அறிந்து மனம் களிப்படைகின்றேன்.

எமது பிரதேச மாணவர்களின் எதிர்கால வளர்ச்சிக்காக நல்லதொரு பாலம் அமைந்திருக்கிறது. சிறந்த வித்துவான்கள் உள்ளார்கள் இதனைப் பயன்படுத்தி எமது பிரதேசம் சுபீட்சமான கல்வியாறு பெருக்கெடுத்துப் பாய எல்லாம்வல்ல மாரித்தாயை பணிந்து ஆசியுரைக்கின்றேன்.

"கொம்பு சுழிகோணாமல்
கொண்ட பண்டி வாடாமல்
தம்பி நீ எழுதினால் வாழ்வாய்
எழுதாவிட்டால் அழுதழுது
மண் சுமப்பாய் அறி"'

மாவடிமுன்மாரி ஸ்ரீ மகா விஸ்ணு ஆலயம்
ஸ்ரீ சிவமுத்துமாரியம்மன் ஆலய பிரதம குரு
தற்புருஷ சிவாச்சாரியார்
சிவஸ்ரீ. க. கு. மகேஸ்வரன் குருக்கள் (ராசா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# வாழ்த்துச் செய்தி

## காக்காச்சிவட்டை குடியேற்றக் கிராமத்தில் "லைசியம்" கல்வி நிலையமும் அதன் சாதனைகளும்

மண்டூர், வெல்லாவெளி, கோவிற் போரதீவு மற்றும் பழுகாமம் ஆகிய பழங்கிராமங்களுக்கு மேற்குப் புறத்தே கல்லோயா குடியேற்றத் திட்டத்தின் பேறாக உருவாகிய பல குடியேற்றக் கிராமங்களுள் ஒன்று காக்காச்சிவட்டை எனும் கிராமம். இக்கிராமங்களின் இட அமைவு காரணமாக சுமார் ஆறு தசாப்தங்களுக்கு மேற்பட்ட காலம் இக்கிராமங்களின் பெருவாரியான மாணவர்கள் ஆரம்பக் கல்வியோடு கல்விக்கு முழுக்குப் போடும் நிலையே காணப்பட்டது. இவைக்கும் ஒருபடி மேலாக 1980 களில் ஆரம்பமான கொடிய யுத்தமும் இப்பகுதி மக்களின் வாழ்க்கையை மேலும் சூனியமாக்கியது.

போக்குவரத்து,குடிநீர், மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகளின்மை, மக்களின் வறுமைநிலை இளம் சிறார்கள் தொலைதூர நகர்ப்புற பாடசாலைகளுக்குச் சென்று படிப்பதற்கு சவாலாக அமைந்தது. அதேவேளை போதிய நல்ல போக்குவரத்து வசதி , பகலுணவைப் பெறும் வசதியின்மை அதேபோல விடுதி வசதிகளின்மை என்பன நகர்ப்புற ஆசிரியர்கள் இப்பகுதிப் பாடசாலைகளில் கற்பித்தலுக்கும் மேலதிக வகுப்புக்கள் நடாத்தவும் சவாலாக இருந்தது. இதனால் இப்பகுதி மாணவர்களின் கல்வி அடைவு மட்டத்தில் குறிப்பிடத்தகு முன்னேற்றத்தை கொண்டிருக்கவில்லை.

இவ்வாறான ஒரு நிலையில்தான் காக்காச்சிவட்டை விஸ்ணு மகா வித்தியாலயத்தின் அப்போதைய அதிபராக இருந்த திரு ச. கணேசமூர்த்தி அவர்களின் வழி நடத்தலில் திரு மு.கோவிந்தராசா ஆசிரியரால் தரம் 5 மாணவர்களின் புலமைப்பரிசில் பரீட்சையை இலக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட பிரத்தியேக வகுப்பு காரணமாக முதன்முதலாக தி.டிலக்சன் எனும் மாணவர் 184 புள்ளிகளைப் பெற்று கோட்ட மட்டத்தில் முதலாவது நிலையில் சித்தியெய்தினார். இப்பெறுபேறுதான் இப்பகுதி மக்களிடையே பிரத்தியேகக் கற்பித்தலின்பால் ஒரு ஆர்வத்தை ஏற்படுத்தியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அந்நாட்களில் காக்காச்சிவட்டையிலிருந்து களுவாஞ்சிகுடிக்கு பிரத்தியேக வகுப்புக்களுக்கு மாணவர்கள் சென்று வருவது முடியாத காரியமாக இருந்தது. இதனால் இப்பிரதேச மக்களின் கோரிக்கையின்படி இப்பகுதியில் கற்பிக்கும் ஆசிரியர்கள் சேர்ந்து **"லைசியம்"** எனும் பெயரில் **22.05.2012** இல் ஒரு கல்வி நிலையத்தை ஆரம்பித்து பின்னேரங்களிலும் சனி, ஞாயிறு நாட்களிலும் இங்கு வந்து கற்பிக்கத் தொடங்கியதன் பயனாக ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த சா/தரம், க.பொ.த உ/தரம் என எல்லா வகையான பரீட்சைகளிலும் மாணவர்கள் மிகநல்ல பெறுபேறுகள் பெற்று பல மாணவர்கள் தேசிய கல்வியியற் கல்லூரி, பல்கலைக்கழகங்களுக்கு அனுமதி பெற்றுள்ளனர். குறிப்பாக இப்பிரதேசத்தில் இருந்து சட்டத்துறை, வைத்தியத்துறை, பொறியியல் துறை போன்ற துறைகளுக்கும் மாணவர்கள் தெரிவாகியுள்ளமை பாராட்டுக்குரியதாகும். இவைக்கு இக்கல்வி நிறுவகம், அதில் கற்பிக்கும் ஆசிரிய குழாம், இங்கு கல்வி கற்ற பழைய மாணவர்கள், பெற்றோர்கள், ஆலயங்கள் , சங்கங்கள், கழகங்கள், இப்பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள் போன்றோரின் ஊக்குவிப்பு, ஒத்தாசை, ஆலோசனைகள் இக்கல்வி நிறுவனம் தொடர்ந்து இயங்குவதற்கும் அதனூடாக பெருவாரியான மாணவர்கள் நல்ல பெறுபேறுகளைப் பெறவும் இதன் காரணமாக இப்பிரதேசத்தில் இன்னும் ஐந்து பத்து ஆண்டுகளில் சமூக மறுமலர்ச்சி ஏற்படவும் வழிகோலும் என்பது திண்ணம்.

எனவே இந்த ஒற்றுமை, இதே அர்ப்பணிப்பு, நல்ல கற்பித்தல், நல்ல ஒழுக்க விழுமியங்கள், பழைய மாணவர்களதும் பெற்றோரதும் கவனிப்பு இவையெல்லாவற்றுக்கும் மேலாக இறைவனின் அருளால் இப்பிரதேச மாணவர்கள் "கல்வி" எனும் செல்வத்தைப் பெருக்கி சமூக மறுமலர்ச்சி பெற்று சிறப்புற வாழ்ந்திட சிறப்பான கல்விச் சேவையாற்றிடும் **"லைசியம்"** கல்வி நிலையத்தாரையும் அதன் பழைய மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதில் மகிழ்வுறுகின்றேன். உங்கள் சீரிய இக்கல்விச் சேவை இன்னும் வளர்ந்திட தொடர்ந்திட இறைவனை வேண்டுகிறேன்.

சட்டத்தரணி மு. கணேசராசா
(வருகை விரிவுரையாளர்- கிழக்குப் பல்கலைக்கழகம்,
இறைவரி பிரதி ஆணையாளர் நாயகம்( ஓய்வு),
ஆளுநர் சபை அங்கத்தவர் - ICST )


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# வாழ்த்துச் செய்தி

நல்ல குருவை அடைந்தவர்களே சமூகத்தில் உயர்ந்த நிலையை அடைவர். “மாதா, பிதா, குரு, தெய்வம்” என்பதற்கிணங்க நமது பெற்றோருக்கு அடுத்தபடியாக நம்மை வழிநடாத்துபவர்கள் ஆசிரியர்களே. அடிப்படை வசதிகளற்ற ஒரு பிரதேசத்தில் பதின்மூன்று வருடங்களுக்கும் மேலாக பிள்ளைகளை வழிநடத்தி கல்வியில் மட்டுமல்லாது புறக்கிருத்திய நடவடிக்கைகளிலும் சாதனைகள் படைக்கத் தூண்டியிருப்தென்பதென்பது சாதாரண விடயமல்ல.

திரு மு.கோவிந்தராசா அவர்களால் 16 மாணவர்களுடன் தனது சொந்த வீட்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் அருஞ்செயலானது, 2024ல் ஒரு பெரும் கல்வி நிறுவனமாக 275 மாணவர்களுடன் திகழ்கின்றதென்றால், அதற்கு ஒரு சமூகப்பெறுமானமிருக்கின்றதென்றே பொருள். 15 ஆசிரியர்களுடன் பிரக்ஞை பூர்வமாகச் செயற்படும் இக்கல்வி நிறுவனம் மாணவர்களது வாழ்வில் அறிவொளியினை ஏற்றி உயர்ந்த பண்புகளைப் பெற்று, சிறந்த மனிதர்களாக மாற்றம் பெற்று விளங்க, ஒவ்வொரு செயலையும் சிந்தித்து செயற்படுத்துகின்றது. பாடம்சார் கற்பித்தல், பரீட்சைகள் என்பவற்றுக்கு அப்பால், சிறுவர்தினக் கொண்டாட்டங்கள், ஆசிரியர் தினக் கொண்டாட்டங்கள், வாணி விழா நிகழ்வுகள், பரிசளிப்பு விழாக்களென ஆற்றல் விருத்திக்கான ஊக்கத்தினையும் ஆளுமை விருத்திக்கான சூழலையும் வழங்கி நிற்கின்றது.

அதிகரித்திருக்கும் கைப்பேசிப் பாவனையும் காணொளி விளையாட்டுக்களும் சிறார்களின் கற்பனையை, சிந்தனையை தின்றுவிடும் காரியத்தை மிகவேகமாக நிகழ்த்தி வருகின்றன. அதனை எதிர்கொள்ளத் திராணியற்றவர்களாக இன்றைய பெற்றோர்களும் ஏன் ஆசிரியர்களும் திண்டாடுகின்றனர். ஆனால் அதனை எதிர்கொள்வதென்பதும் மாணவர்களை நேர்வழியில் மடைமாற்றம் செய்வதென்பதும் சாத்தியமானதொன்று என்பதை நிரூபித்துக் காட்டியிருக்கிறது இந்தக் கல்வி நிறுவனம்.

வகுப்பறைச் சூழலின் தார்ப்பரியம் உணர்ந்து, அதற்குரியதாக மாணவர் விரும்பும் வகையில் வடிவமைப்புச் செய்திருப்பது, இவற்றை தவறாது பயன்படுத்திக் கொள்ளுங்கள், எல்லா நிகழ்வுகளிலும் தயக்கமின்றி பங்குபெறுங்கள், கிடைக்கும் வாய்ப்புகளை உங்களுக்கு உரியதாய் மாற்றிக் கொள்ளுங்கள் எனும் செய்தியை மாணவர்களின் மனதில் ஆழமாகப் பதியவைக்கின்றது.

“தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத் தூறும் அறிவு”




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

என்கிறார் வள்ளுவர். ஒவ்வொரு மனிதனின் வாழ்விலும் மறக்கமுடியாத பருவமாக அமையும் மாணவப் பருவத்தில் கற்றல் செயற்பாடுகளோடு, பலவகையான வாழ்க்கைப் பாடங்களையும், அனுபவங்களையும் அள்ளி வழங்கும் இக்கல்வி நிறுவனத்தின் தூர நோக்குள்ள செயற்பாடுகளையும் அதன் ஆசிரியர்களையும் வாயார வாழ்த்துவதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

க.மோகனதாசன்,
சிரேஸ்ட விரிவுரையாளர்,
சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# வாழ்த்துச் செய்தி

காக்காச்சிவட்டை "லைசியம்" கல்வி நிலையத்தின் 13வது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு வெளியீடு செய்யப்படுகின்ற **"ஒளியருவி"** எனும் நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன். காக்காச்சிவட்டை கிராமம் என்பது கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் என யாவற்றிலும் மிகவும் பின்தங்கிய ஒரு விவசாயக் கிராமமாகும். இவ்வாறான ஒரு பிரதேசத்தின் கல்வி முன்னேற்றத்திற்காக கடந்த 13 ஆண்டுகளாக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்ற ஒரு கல்வி நிலையத்தின் சாதனைப் பேழை ஒன்றிக்கான வாழ்த்துரை என்பதையிட்டே நான் இவ்வாறு மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்.

காக்காச்சிவட்டை விஷ்ணு மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் தமது பிரத்தியேகக் கற்றலை மேற்கொள்வதற்காக எதிர் நோக்கிய குறைபாட்டினை கடந்த 13 வருடங்களாக நிவர்த்தி செய்து வருகின்ற இக்கல்வி நிலையமானது இதுவரையிலும் பல சாதனைகளைப் புரிந்திருப்பது போற்றுதற்குரியதாகும். அந்தவகையில் பிரதேச மாணவர்களிடையே கல்விசார் விழிப்புணர்வை ஏற்படுத்தி தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை, க.பொ.த. உயர்தரப் பரீட்சை என்பவற்றில் மாணவர்களின் அடைவு மட்டத்தை அதிகரிக்கச் செய்து அவர்கள் பல்கலைக்கழகங்களிலும் கல்வியல் கல்லூரிகளிலும் தொழினுட்பக் கல்லூரிகளிலும் சென்று கற்பதற்கான வாய்ப்பினை வழங்கியிருப்பதானது மாபெரும் கல்விச் சேவையாகவே நோக்கப்படுகிறது.

அண்மைக் காலமாக காக்காச்சிவட்டைப் பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்கள் பட்டிருப்பு தேசிய பாடசாலை, கல்முனை கார்மேல் பற்றிமாக் கல்லூரி போன்ற முன்னணித் தேசிய பாடசாலைகளில் உயர்தரக் கல்வியைக் கற்று மருத்துவம், பொறியியல், சட்டம், முகாமைத்துவம் போன்ற முதன்மைப் பீடங்களுக்கு தெரிவாகி வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது. இதன் பின்னணியில் குறித்த பிரதேசப் பாடசாலையான விஷ்ணு மகா வித்தியாலயத்துடன் "லைசியம்" கல்வி நிலையத்தின் பங்களிப்பும் இணைந்திருப்பதை அறிய முடிகின்றது. இதனையிட்டு நாம் பெருமை கொள்கின்றோம்.

பின்தங்கிய பிரதேசமொன்றிலே இவ்வாறு மகத்தான கல்விச் சேவையை வழங்கி வரும் "லைசியம்" கல்வி நிலையத்தின் நிறுவனரும் இதன் முகாமையாளருமான திரு மு.கோவிந்தராசா அதிபர் அவர்களுக்கு எனது விசேடமான பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பல்வேறு சவால்கள், சிரமங்களுக்கு மத்தியில் இங்கு வருகைதந்து அர்ப்பணிப்புடன் கற்பிக்கின்ற அனைத்து ஆசிரியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியையும் பாராட்டினையும் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன், உயர்கல்வி கற்ற இப்பிரதேச மாணவர்களையும் இக்கல்வி நிலையத்துடன் இணைத்துக் கொண்டு எமது எதிர்கால சந்ததியினருக்கு சிறந்த கல்வியை வழங்க வேண்டுமென்றும் இதன் நிருவாகத்தினரை வேண்டிக் கொள்கின்றேன்.

மாணவர்களின் எழுத்தாக்கத்திறனை ஊக்குவிக்கும் நோக்குடனும் இதுவரையிலும் அடையப்பட்ட சாதனைகளை வெளிப்படுத்துவதற்காகவும் ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் ஆக்கங்களை உள்ளடக்கியதாக இந்த 13வது ஆண்டு நிறைவு விழாவின் போது வெளியீடு செய்யப்படுகின்ற **"ஒளி யருவி"** எனும் இந்நூலானது அனைவரினதும் கரங்களுக்கும் பார்வைக்கும் சென்று பயனுற வேண்டுமென இறையாசியை வேண்டுவதுடன் எனது வாழ்த்தினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

*சைவப்புரவலர், வினாயகமூர்த்தி ரஞ்சிதமூர்த்தி,*
*தலைவர், மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கம்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# வாழ்த்துச் செய்தி

மட்டக்களப்பு – காக்காச்சிவட்டை “லைசியம்” கல்வி நிலையத்தின் முத்தாய்ப்பான முதன் முகிழ்ப்பான ‘ஒளி யருவி ’சஞ்சிகைக்காக வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் மட்டில்லா மகிழ்ச்சி அடைகின்றேன்.

‘‘கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே” என்ற ஔவை கூற்றுக்கு பெறுமானமூட்டுமுகமாக கல்விப்பணியை அறப்பணியாக்கி அருவியாய் தோன்றி கங்கையாய் பிரவாகம் பெற்றுள்ள லைசியம் கல்வி நிலையம் ஒளியருவியை வெளியிடுவதன் மூலம் தனது சேவைகளால் காலச்சுவடொன்றை வரலாற்றுப் பதிவாக்குகிறது. 2011ம் ஆண்டில் மட்/பட்/ காக்காச்சிவட்டை விஸ்ணு வித்தியாலயத்தில் தரம் 05ல் கல்விகற்றுக்கொண்டிருந்த 16 மாணவர்களின் பெற்றோர் விடுத்த கோரிக்கையின் பேரில் வெல்லாவெளி பூசகர் வளவை வாழ்வகமாகக் கொண்டிருந்த திரு மு.கோவிந்தராசா ஆசிரியரின் இல்லத்தில் அப்பதினாறு மாணவர்களுக்காக இது கால்கோள் கொண்டது.

அது 2012ம் ஆண்டில் தரம் 6 மாணவர்களின் பெற்றோர் ஒத்துழைப்புடன் மாணவியொருத்தரின் தந்தையின் காக்காச்சிவட்டை வளவினுள் கொட்டகை அமைக்கப்பட்டு “லைசியம்” எனும் நாமகரணம் சூட்டப்பட்டு தரம் 3,4 மற்றும் தரம் 6க்கான வகுப்புக்களை, 2009 முதல் 2013 வரை காலகட்டத்தில் மேற்படி காக்காச்சிவட்டை விஸ்ணு வித்தியாலய அதிபராகப் பணிபுரிந்த எனது தலைமையில் 06.06.2012ல் நடந்த கொட்டகைத் திறப்பு விழாவுடன் கூடிய அறிவூட்டல் பயணமாகப் பரிணாமம் பெற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. இவ்வறிவகத்தின் பிதாமகராக திரு மு.கோவிந்தராசா ஆசிரியர் திகழ திரு ம.சுரேஸ் ஆசிரியரும் இதன் அத்திபாரமாயமைந்தார்.

தரம் 3,4 மற்றும் 6ல் ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு ஆகிய பாடங்களுக்கு வகுப்புக்களை ஆரம்ப கட்டங்களில் வழங்கிய லைசியம் இன்று பாலர் கல்வி முதல் தரம் 11 வரை வகுப்புகளுக்கு தமிழ், கணிதம், வரலாறு, விஞ்ஞானம், ஆங்கிலம், நடனம், I.C.T ஆகிய பாடங்களை வழங்குவதனூடாக ஒரு அரச கல்வி நிறுவனம் போன்று விசாலித்து பெருமை பூண்டுள்ளது. மேலும் இதில் பணியாற்றப்புகுந்த திரு மு.கோவிந்தராசா ஆசிரியருடன் கைகோர்த்த திரு ம.சுரேஸ் ஆசிரியர் வழித்தடத்தில் இப்போது 13 ஆசிரியர்களும் 3 ஆசிரிய உதவியாளர்களும் இவ் லைசியக் கல்விநிலைய விசாலிப்பில் இணைந்து பணிசெய்கின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கல்விப்பணிதவிர பண்பாடு, கலை, கலாசார விழுமியங்களை அடுத்த சந்ததிக்குக் கடத்தும் பாத்திரத்தினையும் கையேற்ற லைசியம் வருடந் தோறும் சரஸ்வதிபூசை, சிறுவர்தினம், ஆசிரியர் தினம், பரிசளிப்புவிழா, பிரியாவிடை மற்றும் லைசிய ஆண்டு நிறைவு விழா என்பவற்றையும் தன்னகத்தே உள்வாங்கியது. 2015 – 2017 வரை பாராட்டு விழாக்களைக் கொண்டாடிய லைசியம் 2018 – 2023 வரை சிறுவர் தினம் மற்றும் ஆசிரியர் தினத்தை இணைத்து முப்பெரும் விழாவாக கொண்டாடியும் உள்ளது.


2011 – 2023 வரை காலப்பகுதியில் லைசியத்தில் கற்று புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 24 மாணவர்களில் 17 பேர் 2015 – 2024 வரை காலப்பகுதியில் நடைபெற்ற பாராட்டு விழாக்களில் பாராட்டிப் பரிசளித்துக் கௌரவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தவிரவும் இக்கல்வி நிலையத்தில் கற்று O/L பரீட்சையில் 9 பாடங்களிலும் சித்திபெற்ற 84 மாணவர்கள் இதுவரை பாராட்டிப் பரிசளித்துக் கௌரவிக்கப்பட்டமையும் லைசிய சேவைக்குச் சான்று.

அவ்விதமாகவே லைசியத்தில் கற்று வெளியேறி பல்கலைக்கழகம் சென்றவர்களும் பிரதேசம் சார்பாக பல்கலைக்கழகம் சென்றவர்களுமான 32 பேர் லைசியத்தால் பாராட்டப்பட்டுள்ளமையும் கல்வியியற்கல்லூரிகளுக்குத் தெரிவான 4 பேர் இதன்மூலம் பாராட்டப்பட்டுள்ளமையும் குறிப்பிடக்கூடிய ஒன்றாவதோடு இணைபாடவிதான முள்ளிட்ட போட்டிகளில் வெற்றிபெற்று மாகாணமட்டம், தேசியமட்டம் வரை சென்றவர்களும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்ட லைசிய வெளியீடுகளேயாவர்.

இவ்வாறான பெருஞ்சேவைகளுக்கெல்லாம் சொந்தம் கொண்டாடும் லைசியத்தின் 2011ம் ஆண்டின் 16 மாணவர்களுடன் ஒப்பிடும்போது 2024ல் மாணவர் எண்ணிக்கை 275 என இமாலயவளர்ச்சியைப் பதிவாக்கியுள்ள லைசியம் "ஒளியருவி" சஞ்சிகையை தனது தலை ஓச்சுதலின் மிடுக்குடன் வெளியிட்டு வைப்பது மெச்சுரைக்கத்தக்கதே.

திரு.ச.கணேசமூர்த்தி (அதிபர்)
மட்/மட்/விபுலானந்தா கல்லூரி, கருவேப்பங்கேணி
14.10.2024


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# வாழ்த்துச் செய்தி

பணிகளிலே உயர்ந்த பணி கல்விப் பணியாகும். படுவான்கரையில் வளர்ந்து வரும் சமூகத்திற்கு அறிவை ஊட்டி அவர்களின் வாழ்கையில் ஒளித்தீபமேற்றி உத்தமர்களாக மாற்றுவது கல்விப் பணியாகும்.

இப்பணியினை கடந்த 13 வருடகாலமாக "லைசியம் " கல்வி நிலையம் வழங்கி வருவது பாராட்டத்தக்க விடயமாகும். மாணவர்களின் அறிவையும் ஆற்றலையும், அனுபவத்தினையும் வளர்ப்பதில்இக்கல்வி நிலையம் பெரும் பங்கினை வகிக்கிறது. அது மட்டுமல்லாமல் மாணவர்களின் திறமைகளையும், சாதனைகளையும் அடுத்து வரும் சந்ததியினருக்கு புடம் போட்டுச் சொல்வதற்காக " ஒளி யருவி" எனும் நூலை வெளியிடுவது சமூகத்தின் இருப்புக்கான ஒரு தடயமாகும்.

இங்கே கல்விப்பணி மாத்திரமல்லாமல் சுற்றுலா, களப்பயணம், அறநெறிக்கல்வி, ஒழுக்க விழுமியங்கள் சார்ந்த விடயங்களும் முன்னெடுக்கப்படுவது சிறப்பான அம்சமாகும்.

இன்றைய காலகட்டத்திலே பாடசாலைக் கல்வி மாத்திரம் போதாமையினாலும், போட்டியினாலும் தனியார் கல்வியை நாடவேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இவ்வாறான நிலையில் மாணவர்கள் எழுவான் கரைக்கு வந்து கல்வியைத் தொடர்வதில் பாரிய சிக்கல்களுக்கு முகம் கொடுக்கும் நிலையை உணர்ந்து அப்பிரதேசத்திலேயே மக்களுக்கு காலடியில் கல்விச் சேவையை வழங்குவது சிறப்பானது. இதனால் கல்வியின் அடைவு மட்டம் அதிகரிப்பதற்கும் மாணவர் இடைவிலகல் குறைவதற்கும் காரணமான இக்கைங்கரிய சேவையை வழங்கும் லைசியம் கல்வி நிலைப் பணிப்பாளர் செயலாளர். பொருளாளர், உறுப்பினர்கள் அனைவரையும் மனதாரப் பாராட்டுகின்றேன்.

ஒரு நிறுவனத்தின் நிலைப்பானது சமூகத்தின் பங்களிப்பிலேதான் தங்கியுள்ளது. அந்த வகையில் காக்காச்சிவட்டை, பலாச்சோலை சமூகம் இச் செயற்பாட்டிற்கு பங்களிப்பினை நல்குவது வரவேற்கத்தக்கது. இந்நிறுவனத்தின் தோற்றம் பாடசாலையின் அடைவிலும் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளதை மறுக்கலாகாது.

எனவே இப்பணியானது எதிர்காலத்தில் மென்மேலும் விரிவடைந்து மேன்மையடைந்து தொடரவேண்டும் என்றும் அதற்கான ஆசியை இறைவன் என்றென்றும் நல்குவார் எனக்கூறி வாழ்த்துகின்றேன்.

– நன்றி –

**"அருவினை யென்ப உளவோ கருவியாற்**
**காலமறிந்து செயின்"**

திரு. வே.குணாளன் அதிபர்
மட் /பட்/காக்காச்சிவட்டை விஷ்ணு ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# வாழ்த்துச் செய்தி

படுவான் மண்ணிலே ஊற்றெடுத்து பாமர மக்களது மழலைச் செல்வங்களின் கல்விப்பசி போக்கும் லைசியம் கல்வி நிலையமானது அதன் ஆரம்பகாலம் தொட்டு இன்று வரை மிகக் கடினமான பாதைகளிலெல்லாம் பயணித்து பல்வேறு சாதனைகளைப் படைத்து இன்று தனக்கென தன்னிகரற்ற மிடுக்கோடு பயணிக்கும் பாதைதனை நான் நன்கு அறிவேன்.

இதைத் தோற்றுவித்து வளர்த்தெடுத்து இன்று வெற்றி நடை போடுவதற்கு அடித்தளமிட்ட என்னுடைய நண்பர் திரு மு.கோவிந்தராசா அவர்கள் நான் மட்/பட்/ காக்காச்சிவட்டை விஸ்ணு மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக, அதிபராக செயற்பட்டது முதல் இன்றுவரை இக்கல்வி நிலைய மாணவர்களது கல்வி, சமய ஒழுகலாறுகள் கல்விச் சுற்றுலா போன்ற இணைப்பாட விதானச் செயற்பாடுகளுக்காக அயராது பாடுபடுபவராவார்.

இந்நிலையில் இன்று “ ஒளியருவி” எனும் சஞ்சிகையானது ஆசிரிய , மாணவ ஆக்கங்களையும் அவர்களது சாதனைகளையும் தாங்கி வெளிவருவதையிட்டு பெருமைய டைவதோடு இச்செயற்பாடுகள் அனைத்தும் எதிர்காலத்தில் இன்னும் பல்கிப் பெருக வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

திரு பூ. சண்முகநாதன்
( அதிபர் )
மட்/பட்/புதுமுன்மாரிச்சோலை சக்தி வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# பொறுப்பாசிரியரின் உள்ளத்திலிருந்து

நீர் வளமும் நில வளமும் செழித்திலங்கும் காக்காச்சிவட்டை மண்ணில் கல்லோயாத் திட்டத்தின் கீழ் பல்லூர்களிலிருந்தும் வந்து குடிபுகுந்த மக்களின் கல்விப் பசிக்கு வித்திடும் முத்தான வித்தகம், அரை நூற்றாண்டு அகவை கடந்து பயணிக்கும் மட்/பட்/காக்காச்சிவட்டை விஸ்ணு மகாவித்தியாலயமாகும். அது அமைந்துள்ள கவினுறு சூழலிலே கடந்த ஒரு தசாப்தத்திற்கும் மேலாக மாரித்தாய், விநாயகர் பரந்தாமனின் திருக்கோயில்கள் சூழ்ந்திட்ட இடமதிலே அமையப்பெற்ற லைசியம் எனும் கல்வி நிறுவனமானது கடந்துவந்த 13 ஆண்டுகளில் பல்வேறு சவால்களையும் தாண்டி நூற்றுக்கணக்கான மாணவர்களை ஒழுக்கத்தோடு பற்றுக்கோடாய் கல்வியை வழங்குவதனூடாக இப்பிரதேசத்தை பாரறியச் செய்துள்ளது.

இந்நிலையில் அதன் இன்னொரு பரிணாமமாக லைசிய மாணவர்களின் ஆக்கங்களையும், அவர்களது கடந்தகால கல்விச் சாதனைகளையும் அதனோடிணைந்து ஆசிரியர்களது ஆக்கங்களையும் உள்ளடக்கி 2024.11.03 இன்று வெளிவரும் ஒளியருவி நூலுக்கு இந்நிறுவனத்தை தோற்றுவித்து இன்றுவரை வழிநடத்துபவன் என்ற முறையில் வாழ்த்துச்செய்தி வழங்குவதில் புளகாங்கிதம் கொள்கின்றேன்.

இறைவனின் நல்லாசியும், நல்லோர் மனங்களில் இருந்து வரும் மகோன்னதமான ஆசீர்வாதமும் இப்பிரதேச பொதுமக்களது (12 கிராமம்சார் மாணாக்கரின் பெற்றோர்கள்) தொடர்ச்சியான ஒத்துழைப்பும் ஆலயங்கள், சங்கங்கள், கழகங்கள், அமைப்புக்களது நல்லாதரவும் இவற்றுக்கும் மேலாக அர்ப்பணிப்பான தியாக உள்ளம் கொண்ட பழைய மாணவர்கள், பெருமதிப்பிற்குரிய ஆசிரியர்கள் எனதன்பிற்குரிய மாணவச் செல்வங்களது ஒத்துழைப்பும் பல்கிப் பெருகி இன்று இந்நிறுவனமானது ஆல்போல் தழைத்து அறுகதுபோல் வேரூன்றி மூங்கில் போல் சுற்றமும் தன்நிகரற்று வாழ்வதற்கான ஞான ஒளியை என்றும் பெற்றிலங்கும் என்பதில் ஐயமேதுமில்லை. என்பதை சுட்டி இக்கிராமத்து மாணாக்கரின் சாதனை மேன்மேலும் பல்கிப்பெருக இறையாசியை வேண்டி இந்நூலுருவாக்கம் கருக்கொண்டு கார்மேகமாக வானுயர்ந்து நல்மழையாக பொழிவதற்கு உரமூட்டிய அனைவரையும் மனதிலெண்ணி வாழ்த்துகின்றேன்.

'வாழ்க வளமுடன் வளர்க நன்மாணக்கர்கள்'

திரு மு.கோவிந்தராசா
லைசியம் கல்வி நிலையப் பொறுப்பாசிரியர்,
காக்காச்சிவட்டை.
2024.11.03



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# ஆலோசகரிடமிருந்து

நீர்வளமும் நில வளமும் மிக்க கவினுறு கிராமமான காக்காச்சிவட்டையில் அமைந்துள்ள லைசியம் கல்வி நிலையமானது வருடம் தோறும் முப்பெரும் விழாவினை நடாத்தி வருகின்றது. இருப்பினும் இவ்வருடம் 2024 இடம்பெறுகின்ற விழாவோடு இணைந்து ஒளியருவி எனும் சஞ்சிகையையும் வெளியிடுகின்றது. அந்த வகையிலே நூலாக்கக் குழுவின் ஆலோசகர் என்ற வகையில் வாழ்த்துரைப்பதில் மகிழ்வடைகின்றேன்.

எமது கல்வி நிலையத்தின் மூலம் வெளியிடப்படுகின்ற இச் சஞ்சிகையானது தாங்கி வருகின்ற படைப்புக்கள் அத்தனையும் மாணவர்களின் உயர்ச்சிக்கும், முயற்ச்சிக்கும் அடிகோலும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடம் இல்லை. மனித வாழ்க்கையில் மொழி ஒரு இணைப்பூடகமாக திகழ்கின்றது மொழியை திறம்படக் கையாளக்கூடியவன் அதிசக்திவாய்ந்தவனாவான். இதனை மாணவர்கள் மத்தியில் விதைப்பதில் வெளியிடப்படுகின்ற நூல்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அந்த வகையில் ஒளியருவி என்னும் சஞ்சிகையானது இப் பிரதேச மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் மிக முக்கியமான அழிக்க முடியாத ஆவணமாகும் இதுபோன்ற படைப்புக்கள் தொடர்ந்து வெளிவர இறைவனை வேண்டிக்கொள்வதோடு மனமார்ந்த நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- சுரேஸ்
ஆசிரியர் (ஆங்கிலம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# வாழ்த்துச் செய்தி

படுவான் கரைதனில் காக்காச்சிவட்டை எனும் அழகிய கிராமத்தில் அமைந்திருந்து பல வருடங்களாக தமது தனித்துவப் பாணியில் கல்விதனை அச்சமூகத்திற்கு போதிக்கும் லைசியம் கல்வி நிலையத்திற்கு வாழ்த்துக்களை வழங்குகின்றேன்.

இந்தக் கல்வி நிலையத்தைப் பொறுத்தவரையில் பல சாதனைகளைப் படைத்துள்ளதோடு இன்றுவரை பல மாணவர்களின் எதிர்கால இலக்குகளை வெற்றி கொள்வதற்கான ஒரு களமாகவும் காணப்படுகின்றது. பல சவால்களை எதிர்கொண்டு பல மாணவர்கள் இறக்கை உடைந்த பறவைகளாக தத்தளிக்கின்ற போது அவர்கள் இனங்காணப்பட்டு வானில் உச்சம் தொடும் பறவைகளாக சிறகடிக்கக்கூடிய செயற்பாட்டினை மாணவர்களுக்கு இக்கல்வி நிலையம் போதிக்கின்றது.

பல சவால்கள் நிறைந்த சூழ்நிலையில் தடை அதை உடை வரலாறு படை என்பதற்கிணங்க பல மாணவர்களை பல்கலைக்கழகம் வரை அனுப்பி சாதனை படைத்துக் கொண்டிருக்கும் லைசியம் கல்வி நிலையம் கடந்து வந்த பாதையினை **"ஒளியருவி"** எனும் பெயரில் நூலொன்றினை வெளியிடுவதனை இட்டு மனமகிழ்ச்சி அடைகின்றேன்.

**"ஒளியருவி"** தொடர்ந்து பிரகாசிக்க எனது வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் ஆனந்தம் அடைவதோடு என்றும் லைசியம் இன்னும் பல நூண்றாண்டுகள் சாதனை படைத்து வாழ வாழியவே !

திரு த. ஐங்கரன்
ஆசிரியர்
(வரலாறு)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# இதழாசிரியரின் இதயத்திலிருந்து

படைப்புக்களுக்கு களம் வழங்கப்படும்போது படைப்பாளிகளின் ஆற்றல்கள் வெளிக்கிளம்புகின்றன. அவற்றைப் பாருக்கு பறை சாற்றும் ஊடகமாக சஞ்சிகைகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இதனடிப்படையில் எமது கல்வி நிலையத்தின் தலைவர் அவர்களின் சிந்தைக்கேற்ப செயற்பட்டு எங்களது கல்வி நிலையத்தின் கன்னிப் படைப்பாக ஒளியருவி என்னும் சஞ்சிகையினை வெளியிட்டு வைப்பதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன்.

இச்சஞ்சிகையானது லைசியம் கல்வி நிலையத்தின் வரலாற்றினையும் ஆசிரியர்கள், மாணவர்களின் சிந்தனையில் உருவாகிய ஆக்கங்களையும் சாதனையாளர்களின் பெயர் விபரங்களையும் தாங்கி வருகின்றது. இது ஏனைய மாணவர்களின் உயர்ச்சிக்கு துணைபுரிவதோடு ஆர்வத்தையும் ஏற்படுத்தும் என்பது திண்ணம். மிகக் குறுகிய காலத்தில் இச்சஞ்சிகை வெளிவருவதற்கு தோளோடு தோள் நின்றுழைத்த ஆசிரிய நண்பர்கள், பழைய மாணவர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், அனுசரணையாளர்கள் அனைவருக்கும் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதோடு வாழ்த்துச் செய்திகள், ஆசிச்செய்திகள் மற்றும் ஆக்கங்களைத் தந்துதவிய பெருந்தகைகளுக்கு மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

குறிப்பாக குறிப்பிட்ட காலத்தில் இந்நூலினை அச்சுருவமைத்துத் தந்த மட்டக்களப்பு துர்க்கா அச்சகத்தினர், புகைப்படங்களை செப்பனிட்டுத்தந்த புகைப்படப் பிடிப்பாளர்கள் மற்றும் சகல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் மனம் நிறைந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இப்பிரதேசத்தில் சுடர்விட்டுப் பிரகாசிக்க இருக்கும் ஒளியருவியானது கூர்மையும், பெருமையும் பெற்று ஆண்டு தோறும் வெளிவர வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை சிரம்தாழ்த்தி இச்சஞ்சிகையினை வெளியிடுவதில் உளம் கனிந்த களிப்படைகின்றேன்.

திரு சு. பாஸ்கரன்
ஆசிரியர் (தமிழ்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஆசிரிய ஆளணி விபரம்

1. திரு மு.கோவிந்தராசா (பொறுப்பாசிரியர்)
2. திரு ம.சுரேஸ்
3. திருமதி சு.கோவிந்தராசா
4. திரு சு.பாஸ்கரன்
5. திரு த.ஐங்கரன்
6. திரு யோ.சஞ்சீவ்
7. திரு ர.மோகப்பிரசன்னா
8. திரு கி.சதீஸ்வரன்
9. திரு சு.திலீப்குமார்
10. திரு சா.மோகன்ராஜ்
11. திரு த.சிவாகரன்
12. திரு கோ.நவனீதன்
13. செல்வி கு.திக்ஷாயினி
14. செல்வி சோ.சசிகலா
15. செல்வன் சு. ஜனிஸ்ரன்
16. செல்வி இ.வினித்தா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




லைசியம் கல்வி நிலைய பொறுப்பாசிரியர்.



லைசியம் கல்வி நிலைய ஆசிரியர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# லைசியம் கல்வி நிலையத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

திருமூலரால் சிவபூமி என்று அழைக்கப்பட்ட இலங்கைத் திருநாட்டின் கிழக்கே மீன்பாடும் தேன்நாடு என சுவாமி விபுலானந்தரால் சிறப்பித்துக் கூறப்படும் மட்டக்களப்பின் தென்மேற்கே பட்டிருப்பு வாவி மணம் கமழும் போரதீவுப் பற்றின் வயலும் வயல்சூழ்ந்த மருதநிலப்பிரதேசம் காக்காச்சி வட்டையாகும்.

தேமா, தோடை, பலா, வாழையுடன் கன்னலோடு செந்நெல் விளையும் நீர்வளமும் நிலவளமும் மிக்க அழகிய குக்கிராமம் காக்காச்சிவட்டைதனில் அருள்மிகு சிவமுத்து மாரியம்மனின் காவலோடும் கருணை மலைப் பிள்ளையார் மற்றும் பாரளந்த பரந்தாமனின் அருள் ஜொலிக்க மிளிர்ந்து கொண்டிருக்கும் "லைசியம்" கல்வி நிலையமானது உலகறியப் புகழ்பேசப்பட்டு வரும் ஒரு கல்வி நிறுவனமாகும். கி.மு. 4ம் நூற்றாண்டு காலத்தில் சமூகத்தின் கல்விப் பசிக்கு தீனிபோடும் பொருட்டு அரிஸ்டோட்டில் எனும் கிரேக்க மெய்யியலாளரால் "லைசியம்" எனும் தனியார் கல்வி நிலையம் ஆரம்பிக்கப்பட்டு அக்கால மாணாக்கரதும் மக்களதும் கல்வித் தேவையை நிறைவேற்றி வந்தது. இதனைக் கருப்பொருளாகக் கொண்டே எமது இந்த சமகால "லைசியம்" நிலையமும் 2011ம் ஆண்டு தோற்றம் பெற்றது. இந்நிலையம் ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரையான 13 வருட காலத்தில் இங்கு பயின்ற 24 மாணவர்கள் தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்றும் 84 மாணவர்கள் க.பொ.த. (சா/த) பரீட்சையில் 09 பாடங்களில் சித்தியடைந்தும் சாதனை படைத்துள்ளதோடு 04 மாணவர்கள் கல்வியியற் கல்லூரி அனுமதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மற்றும் 38 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்று மகோன்னதமான சாதனைகளை நிலைநாட்டியுள்ளனர். அந்த வகையில் இக்கல்வி நிலையத்தில் ஆரம்பகால தோற்றமானது இறைசித்தத்தாலும் பொது மக்களது ஒத்துழைப்பாலும் பின்வரும் அடிப்படையில் கருக்கொண்டு இன்று கல்விப் பசிபோக்கும் விருட்சமாக பரிணாமம் பெற்றுள்ளது.

2011ம் ஆண்டு தரம் – 05 மாணவர்களின் பெற்றோரின் கோரிக்கைக்கமைய நிலையப் பொறுப்பாசிரியராகிய என்னால் தரம் – 05 மாணவர்கள் 16 பேரைக் கொண்டு வெல்லாவெளியில் அமைந்துள்ள எனது சொந்தவீட்டில் தரம் – 05 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பிரத்தியேக வகுப்புக்களை நடாத்தி வந்தேன். இதன் பிரதிபலனாக செல்வன் தி. டிலக்ஷன் எனும் மாணவர் 184 புள்ளிகளைப் பெற்று போரதீவுப்பற்றுக் கோட்டத்தில் முதல் நிலையைப் பெற்று மட்/ பட்/ காக்காச்சிவட்டை விஷ்ணு வித்தியாலயத்தில் 50 வருடங்களுக்குப் பின்னர் முதலாவது சித்தி பெற்ற மாணவன் எனும் பெயரைத் தனதாக்கிக் கொண்டார்.

இதனைக் கண்டு வியந்த இப்பிரதேச மக்கள் அதனை வாழ்த்தி கௌரவித்து கண்ணியப்படுத்தியதோடு எனது சேவை தொடர்ந்தும் இப்பிரதேசத்திற்கு கிடைக்க வேண்டுமென கருதி இப்பிரதேசத்திலே உள்ள அனைத்து மாணவர்களுக்கும் கல்வியைக் கற்பிக்க வேண்டுமென கேட்டுக்கொண்டார்கள். இதன் காரணமாக 2012.05.22 அன்று NEAP கட்டடத்தில் எமது கல்வி நிலைய ஆரம்பம் தொடர்பான முதலாவது கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தரம் 03,04,06 மாணவர்களின் பெற்றோர்கள் கலந்து கொண்டிருந்தனர். இக்கூட்டத்தில் கலந்து கொண்ட தரம் – 06 மாணவி க. யோகிதாவின் தந்தை திரு. வெ. கந்தசாமி அவர்கள் தனது சொந்தக் காணி ஒன்றினை கொட்டகை அமைப்பதற்குத் தற்காலிகமாக வாடகைக்கு வழங்கியிருந்தார். இதன் பிரதிபலனாக பொதுமக்களால் கொண்டு வரப்பட்ட கிடுகு, மற்றும் கம்புகளைக் கொண்டு அக்காணியில் அமைக்கப்பட்ட ஓலைக்குடிசையில் அன்றைய மட்/ பட்/ காக்காச்சிவட்டை விஷ்ணு வித்தியாலய அதிபர் திரு.ச. கணேசமூர்த்தி ஐயா அவர்களின் தலைமையில் 06.06.2012 புதன்கிழமை அன்று கல்வி நிலைய செயற்பாடுகள் "லைசியம்" கல்வி நிலையம் எனும் பெயருடன் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. நிலையப் பொறுப்பாசிரியராக திரு மு.கோவிந்தராசா ஆகிய நானும் என்னோடு இணைந்து திரு ம. சுரேஸ் ஆசிரியர் அவர்களும் கற்பித்தல் செயற்பாட்டினை முன்னெடுத்திருந்தோம்.

அதனடிப்படையில் தரம் 03, 04 தரங்களுக்கு ஒன்றிணைந்த பாடங்களும் தரம் 06 இற்கு வரலாறு, விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் திரு மு. கோவிந்தராசா ஆகிய என்னாலும் ஆங்கில பாடத்தினை திரு ம. சுரேஸ் ஆசிரியர் அவர்களாலும் கற்பிக்கப்பட்டது. தொடர்ந்து 21.06.2012 அன்று இக் கல்வி நிலையத்தின் நிரந்தர கொட்டகையில் கல்வி நிலைய பொறுப்பாசிரியர் தலைமையில் நடைபெற்ற பெற்றோர் பொதுக்கூட்டத்தில் தரம் 07 மாணவர்களையும் கல்வி நிலையத்தில் உள்வாங்குவது எனும் தீர்மானம் எடுக்கப்பட்டதுடன் இவ்வாண்டிலேயே தரம் – 07 மாணவர்களுக்கான விஞ்ஞான பாடத்தினைக் கற்பிப்பதற்காக திரு கா. காண்டீபன் ஆசிரியர் அவர்கள் நியமிக்கப்பட்டிருந்தார். 2012 ஆரம்பகால கட்டத்தில் தரம் 06,07 மாணவர்களுக்கான கணித பாடத்தினை திருமதி சி. நவீந்திரராசா ஆசிரியர் அவர்கள் வெல்லாவெளியில் உள்ள எனது இல்லத்தில் கற்பித்தமையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் 2012.09.21 அன்று எமது கல்வி நிலையத்தின் முதலாவது வாணிவிழா இடம்பெற்றமை கலைவாணியின் கிருபையேயாகும். அன்று முதல் இன்று வரை வாணிவிழா பூசைகள் வருடாவருடம் பெற்றோர், ஆசிரியர்கள், நலன்விரும்பிகளது பூரண ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. அதே போன்று எமது கல்வி நிலைய மாணவர்களுக்கான முதலாவது கல்விச் சுற்றுலா 2013.02.09 அன்று திருகோணமலைக்கு சென்றதன் மூலம் துவக்கம் பெற்றது.

இதுவும் அவ்வப்போது மாணவர்களது இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கு உரமூட்டுமாப்போல் நடைபெற்று வருகின்றது. 2013ல் தரம் 09,10,11இற்கான ஆங்கில பாடத்தினை ஆசிரியர் திரு ம. சுரேஸ் ஆசிரியரும் திரு கா. காண்டீபன் ஆசிரியர் நீங்கிய நிலையில் தரம் 06,07 க்கான வரலாறு, விஞ்ஞானம் ஆகிய பாடங்களை மீண்டும் திரு மு. கோவிந்தராசா ஆசிரியரான நானும் கற்பித்து வந்தோம். இவ்வாண்டில் எமது கல்வி நிலையத்தில் கல்வி கற்ற மாணவர் ஒருவர் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஓலையினால் வேயப்பட்டு ஒற்றை வகுப்பறையாக இருந்த எமது கல்வி நிலையம் 2013ம் ஆண்டு 02 வகுப்பறைகள் கொண்ட தகரத்தாலான நிரந்தர கொட்டகையாக மறுசீரமைப்புச் செய்யப்பட்டு கல்வி நடவடிக்கைகள் தொடர்ந்தன. 2014.01.25 அன்று எமது கல்வி நிலையத்தின் 2வது கல்விச் சுற்றுலா கண்டியை நோக்கிய பயணமாக அமைந்திருந்தது.

2014ல் தரம் 06, 07, 08, 09இற்கு கணித பாடத்தினைக் கற்பிப்பதற்காக 2014. 05. 09 முதல் பட்டிருப்பைச் சேர்ந்த திரு இ. கேமராஜ் அவர்கள் இணைப்புச் செய்யப்பட்டு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்தார். இவ்வாண்டில் தரம் 08 இற்கான வரலாறு, விஞ்ஞான பாடங்கள் திரு மு. கோவிந்தராசா ஆகிய என்னால் கற்பிக்கப்பட்டு வந்தது. இவ்வாண்டில் நடைபெற்ற தரம் -05 புலமைப் பரிசில் பரீட்சையில் 03 மாணவர்கள் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்று எமது கல்வி நிலையத்திற்கு பெருமை சேர்த்திருந்தனர். இவ்வாண்டிலேயே தரம் 01, 02 இற்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. இவ்வகுப்புக் களை நடாத்துவதற்கு போதியளவு இடம் எமது கல்வி நிலையத்தில் இல்லாதிருந்ததால் காக்காச்சிவட்டை பொது நூலகத்தில் 45 மாணவர்களுடன் வகுப்புக்கள் நடைபெற்றன. இவர்களுக்கான வகுப்புக்களை காக்காச்சி வட்டையைச் சேர்ந்த திருமதி. சுபாசினி கோவிந்தராசா அவர்கள் ஆரம்பித்து நடத்திருந்தார். இம்மாணவர்களுக்கான முதலா வது வகுப்பு 2014.09.05 அன்று ஆரம்பிக்கப் பட்டது.

2015.02.01ல் தரம் 09, 10 ஆகிய வகுப்புகளுக்கு விஞ்ஞான பாடம் கற்பிப்பதற்காக கோட்டைக்கல்லாற்றைச் சேர்ந்த திரு கே. எஸ். நந்தகுமார் ஆசிரியர் அவர்கள் இணைப்புச் செய்யப்பட்டதோடு 2015.06.24ல் திருமதி. விஜயராணி கந்தலிங்கம் அவர்களது காணியில் இரண்டாவது நிரந்தரக் கொட்டகை அமைக்கப் பட்டது. 2015.07.01 தமிழ் பாடத்தினைக் கற்பிப்பதற்காக கோவிற் போர தீவைச் சேர்ந்த திரு சு. பாஸ்கரன் ஆசிரியர் அவர்கள் இணைப்புச் செய்யப்பட்டார். 2015. 11.01ம் திகதி வரலாறு பாடத்தினைக் கற்பிப்பதற்காக களுவாஞ்சி குடியைச் சேர்ந்த திரு த. ஐங்கரன் ஆசிரியர் அவர்களும் இணைப்புச் செய்யப் பட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

2015ம் ஆண்டில் நடைபெற்ற மாகாண மட்ட சமூக விஞ்ஞானப் போட்டியில் 2ம் இடம் பெற்று தேசிய மட்டம் தெரிவானமைக்காக செல்வன் கு. டிலக்சன் அவர்களுக்கு 2015. 08. 20 அன்று எமது கல்வி நிலையத்தின் முதலாவது பாராட்டு விழா நடைபெற்றது. 2016. 01. 02ல் திரு ம. சுரேஸ் ஆசிரியர் தனது உயர்கல்வி காரண மாக தற்காலிகமாக கற்பித்தலில் இருந்து நீங்கியதால் அவருக்குப்பதிலாக கல்லாற்றைச் சேர்ந்த திரு வீ. சிவபாலன் ஆசிரியர் அவர்கள் இணைப்புச் செய்யப்பட்டு ஆங்கிலபாட கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெற்று வந்ததோடு மீண்டும் 2016. 08. 05 அன்று திரு ம. சுரேஸ் அவர்கள் இணைந்துகொண்டார். மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தை நோக்காகக் கொண்டும் சவால்களை வெற்றி கொள்வதற்காகவும் 2016. 09.03ல் 12 பேர் கொண்ட செயற்பாட்டுக்குழு பெற்றோரது பங்கேற்புடன் நிறுவப்பட்டது.

அத்தோடு தரம் 06 தொடக்கம் 11 வரையான மாணவரகளுக்கு எமது கல்வி நிலையத்தின் பழைய மாணவி செல்வி தி. டிலக்ஷனா என்பவரால் மேலதிகமாக கணித பாடம் கற்பிக்கப்பட்டமை சிறப்பாய்ந்த அம்சமாகும். தொடர்ச்சியாக இவ்வருடமும் பாராட்டு விழா நடைபெற்றிருந்ததோடு 2015, 2016, 2017 ஆகிய வருடங்களில் நடைபெற்ற பாராட்டு விழாக்களில் பிரதம அதிதியாக திரு ச. கணேசமூர்த்தி அதிபர் அவர்கள் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

2018. 02. 01ம் திகதி ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு சிங்களப்பாடத்தினைக் கற்பிப்பதற்காக மாங்காட்டைச் சேர்ந்த திரு இ. ரவிச்சந்திரன் ஆசிரியர் இணைக்கப்பட்டார். இவ் வாண்டில் ஆசிரியர் தினம், சிறுவர் தினம், பரிசளிப்பு விழா ஆகிய 03 நிகழ்வுகளையும் இணைத்து "முப்பெரும் விழா" எனும் நாமத்துடன் ஆண்டுதோறும் 10ம், 11ம் மாதங்களில் கோலாகலமாக பிரம்மாண்டமான விழாவாக இன்றுவரை தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

2018ம் ஆண்டு முதன்முறையாக நடைபெற்ற இவ்விழாவில் தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சை, க.பொ.த.(சா/த) பரீட்சை, சமூக விஞ்ஞானப் போட்டி, பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்கள் என சாதனையாளர்களுக்கு பரிசு வழங்கி கௌரவிப்பு நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம அதிதிகளாக திரு ச. கணேசமூர்த்தி அதிபர் அவர்களும் திரு பூ. சண்முகநாதன் அதிபர் அவர்களும் கலந்து கொண்டனர். இவ்வாண்டிலேயே மாணவர் களுக்கான இருக்கைகள் உறுதியான முறையில் இரும்புப்பட்டம் பொருத்தி சீர் செய்யப்பட்டமை கல்வி நிலையத்தின் பௌதீக கட்டுமான வளர்ச்சியின் ஒரு ஏறுவரிநிலை எனலாம். இவற்றில் பெற்றோரின் அனுசரணை அளப் பரியதாக அமைந்திருந்தது.

இக்கால கட்டத்தில் கணித பாடம் கற்பித்த திரு இ. கேமராஜ் ஆசிரியர் அவர்கள் தனது பணி நிமிர்த்தமாக கல்வி நிலை யத்திலிருந்து விலகிச்செல்லவேண்டி ஏற்பட்ட தனால் அவருடைய இடத்தினைப் பூர்த்தி செய்ய வெல்லாவெளியைச் சேர்ந்த செல்வன் க. நிர்மலன் அவர்கள் தற்காலிகமாக நியமிக்கப் பட்டு கற்றல் கற்பித்தல் செயற் பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டு வந்தார். இதன் மூலம் மாணவர்களது கற்றல் இடைவெளி சீர் செய்யப்பட்டது.

2019ம் ஆண்டில் கணிதப்பாடத்தினைக் கற்பிப்பதற்காக குருமண்வெளியைச் சேர்ந்த திரு யோ. சஞ்சீவ் ஆசிரியர் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நிரந்தரமாக இணைத்துக் கொள்ளப்பட்டார். இவ்வாண்டில் பெற்றோரின் உதவியுடன் கல்வி நிலயத்தின் மூன்றாவது கொட்டகை அமைக்கப்பட்டது, அத்தோடு 20.01.2019 அன்று பழைய மாணவர்களை இணைத்து "லைசியம் கல்வி நிலைய பழைய மாணவர்கள் சங்கம்" எனும் பெயரில் எமது கல்வி நியைத்தின் பழைய மாணவர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டமை கல்வி நிலைய வளர்ச்சியின் இன்னுமொரு பரிணா மமாகும். இதன் ஊற்றாக இன்று "கிதுசனா சுவாச வேர்கள்" எனும் கிளை அமைப்பும் 2017 O/L மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்டு மேலதிக கல்விப்பணி, சமூகப்பணி என தொண்டாற்றி வருகின்றது.

பழைய மாணவர் சங்கம் ஆரம்பிக்கப் பட்டதிலிருந்து இன்று வரை பல பழைய மாணவர்கள் எமது கல்வி நிலைய மாணவர் களின் கல்வி மேன்பாடு கருதி இன்னும் மேலதிக வகுப்புக்களையும் பயிற்சிப் பரீட்சைகளையும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களையும் நடாத்தி வருவதுடன் தரம் 06, 07, 08, 09, 10 ஆம் தர மாணவர்களுக்காக விஷேட செயற்திட்ட மாக அடைவுமட்டப் பரீட்சைகளை தவணை தோறும் நடாத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது. இச் செயற்பாடுகளினால் இப் பிரதேச மாணவர் கள் கல்விச் சாதனையாளர்களாக தலை நிமிர்ந்து நிற்கின்றனர்.

2019 காலப்பகுதிகளில் Covid - 19 தாக்கம் அதிகரித்திருந்தது. இக்காலகட்டதில் பொதுச் சுகாதார பரிசோதகர் செட்டி பாளையத்தைச் சேர்ந்த திரு T. ரிஷிகோபன் அவர்களினால் எமது கல்வி நிலையத்தின் மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் கொரோனா விழிப்பூட்டலும் இடம்பெற்றிருந்தது. இவ்வாண்டு எமது கல்வி நிலையத்திற்கு குடிநீர் மற்றும் மின்சார வசதியினை பெற்றுத் தருவதற்காக தயாள உள்ளம் படைத்த ஒரு பெற்றோர் தாமாக முன் வந்து குறிப்பிட்ட இரண்டு அடிப்படைத் தேவைகளையும் நிறை வேற்றித் தந்திருந்தார், இதனால் மாணவர்களின் அடிப்படைத் தேவையின் ஒரு பகுதி நிறை வேற்றப்பட்டது சிறப்பானதாகும்.

அத்தோடு இவ்வாண்டு இடம்பெற்ற முப்பெரும் விழாவில் அதிபிரதம அதிதியாக திரு ச. மாமாங்கராசா (மட்டக்களப்பு மாவட்ட சிவில் அமைப்புத் தலைவர், WCSC நிறுவனத்தின் முன்னாள் பிராந்தியப் பணிப்பாளர், முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர்) அவர்களும், பிரதம அதிதிகளாக சட்டத்தரணி திரு மு. கணேசராசா (ஆணையாளர், உள்நாட்டு இறைவரித்திணைக்களம், கொழும்பு) மற்றும் சைவப்புரவலர் திரு வி. ரஞ்சிதமூர்த்தி (தலைவர் மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கம்), சிறப்பு அதிதிகளாக திரு ச. கணேசமூர்த்தி (அதிபர், மட்/பட்/வெல்லாவெளி கலைமகள் மகா வித்தியாலயம்), திரு நா. சிவனேசராசா (அதிபர் மட்/பட்/காக்காச்சி வட்டை விஸ்ணு மகா வித்தி யாலயம்), திரு பூ. சண்முகநாதன் (பிரதி அதிபர் மட்/பட்/ காக்காச்சிவட்டை விஷ்ணு மகா வித்தியாலயம்) ஆகியோர் கலந்து சிறப்பித்திருந் தனர். இச் செயற்பாடுகளினால் எமது கல்வி நிலைய மாணவர்களது சாதனைகள் வெளியிடங்களுக்கும் பிரவாகம் பெற்றிருந்தது.

2020, 2021 ஆம் வருடங்களில் Covid - 19 காரணமாக முப்பெரும் விழா நடைபெற வில்லை. இது மாணவர்களது கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் பாரியளவு பாதிப்பை ஏற்படுத் திய காலமாக நோக்கப்படுகின்றது. 2021.11.05ல் எருவிலைச் சேர்ந்த திரு ர. மோகப்பிரசன்னா ஆசிரியர் அவர்கள் விஞ்ஞான பாடத்தினை கற்பிப்பதற்காக எமது கல்வி நிலையத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டார். அதேபோல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

2022.12.03 ல் களுவாஞ்சிகுடியைச் சேர்ந்த திரு கி. சதீஸ்வரன் ஆசிரியர் அவர்கள் தரம் 06, 07, 08, 09, 10 மாணவர்களுக்கு சிங்கள பாடத்தினைக் கற்பிப்பதற்காக எமது கல்வி நிலையத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டார். இவ்வருடம் நடைபெற்ற முப்பெரும் விழாவில் 2020, 2021, 2022 காலப்பகுதிகளில் திறமைச் சித்திகளை வெளிப்படுத்தி சாதனை பெற்ற மாணவர்களும் உள்வாங்கப்பட்டிருந்ததோடு இவ்விழாவில் பிரதம அதிதியாக சைவப்புரவலர் திரு வி. ரஞ்சிதமூர்த்தி (தலைவர் மட்டக்களப்பு தமிழ் சங்கம்) சிறப்பு அதிதிகளாக திரு ச. கணேசமூர்த்தி (அதிபர், மட்/பட்/ வெல்லாவெளி கலைமகள் மகா வித்தியாலயம்), திரு பூ. சண்முகநாதன் (அதிபர் மட்/பட்/ புதுமுன்மாரிச்சோலை ச.வி) ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். இவர்களது வருகையாலும் நம்பிக்கையூட்டும் பேச்சாலும் மாணவர்களது எதிர்காலம் பற்றிய உறுதியான நம்பிக்கைகள் சிறந்த முறையில் கட்டியெழுப்பப்படுகின்றன.

04.04.2023 காலப்பகுதியில் செட்டிபாளையத்தைச் சேர்ந்த திரு சு. திலீப்குமார் ஆசிரியர் அவர்கள் ஆங்கில பாடத்தினை கற்பிப்பதற்காக உள்வாங்கப்பட்டதோடு துறைநீலாவணையைச் சேர்ந்த திரு சா. மோகன்ராஜ் ஆசிரியர் அவர்கள் சிங்கள பாடத்தினை கற்பிப்பதற்காகவும் உள்வாங்கப்பட்டார். அத்தோடு 2023.04.05 காலப்பகுதியில் கோவில்போரதீவைச் சேர்ந்த செல்வி பே. கோமுகி அவர்கள் Elocution கற்பிப்பதற்காக உள்வாங்கப் பட்டதோடு ஆங்கிலப்பாட உதவி ஆசிரியராக காக்காச்சிவட்டையைச் சேர்ந்த செல்வி கு. திஷாயினி அவர்களும் தரம் 01, 02 க்கான உதவி ஆசிரியர்களாக செல்வி ர. வத்சலா அவர்களும், மாவடிமுன்மாரியைச் சேர்ந்த செல்வி சோ. சசிகலா அவர்களும் உள்வாங்கப்பட்டனர். இதன்மூலம் இக்கல்வி நிலையத்தில் ஆரம்பத்தில் பயின்ற மாணவர்கள் தற்போது இங்கு ஆசிரிய உதவியாளர்களாகவும் எதிர் காலத்தில் மிகச்சிறந்த ஆசிரியர்களாகவும் மிளிர்வதற்கான அடித்தளம் இடப்பட்டுள்ளது சிறப்பிற்குரியதாகும்.

2023ம் ஆண்டு மிகச்சிறப்பாக நடைபெற்ற முப்பெரும் விழாவில் பிரதம அதிதியாக சுவாமி நீலமாதவானந்தஜீ மகராஜ் (பொது முகாமையாளர், ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன், கல்லடி, மட்டக்களப்பு) சிறப்பு அதிதிகளாக திரு ச. கணேசமூர்த்தி (அதிபர், மட்/மட்/ விபுலானந்தா கல்லூரி, கருவேப்பங்கேணி) திரு ப. சுகிர்தரன் (அதிபர் மட்/பட்/ காக்காச்சிவட்டை விஷ்ணு மகா வித்தியாலயம்) திரு பூ. சண்முகநாதன் (அதிபர் மட்/பட்/ புதுமுன் மாரிச்சோலை ச.வி) தற்புருஷ சிவாச்சாரியார் சிவஸ்ரீ க.கு.மகேஸ்வரன் குருக்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாகச் சொல்வதனால் சுவாமிஜீ அவர்களது பொற்பாதம் இம்மண்ணில் காலூன்றுவதற்கு இப்பிரதேச மாணவர்களும் மக்களும் கொடுத்து வைத்தவர்களாகவே நான் பார்கின்றேன். இக்கைங்கரியம் நடந்தேறுவதற்கு சுவாமி விபுலாந்தரால் ஆரம்பிக்கப்பட்ட சிவானந்தா தேசிய பாடசாலையில் 1992 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நான் இணைந்து கற்றதன் பயனாக சுவாமி ஸ்ரீ இராமகிருஷ்ண பரமகம்சர் அன்னை ஸ்ரீ சாரதா தேவியினுடைய பெருங் கருணை இவற்றுக்கெல்லாம் ஊற்றாக அமைந்திருக்கும் என்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளது.

10.02.2024 காலப்பகுதியில் களுவாஞ்சிகுடியைச் சேர்ந்த திரு த. சிவாகரன் ஆசிரியர் அவர்கள் வரலாறு பாடத்தினைக் கற்பிப்பதற்காகவும் எருவிலைச்சேர்ந்த செல்வி கோ தனுஷா ஆசிரியை பரதநாட்டிய பாடத்தினைக் கற்பிப்பதற்காகவும் 05.04.2024 காலப்பகுதியில் ICT


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடத்தினைக் கற்பிப்பதற்காக களுவாஞ்சி குடியைச் சேர்ந்த திரு கோ.நவனீதன் ஆசிரியர் அவர்களும் உள்வாங்கப்பட்டிருந்தனர். அத் தோடு 10.02.2024ல் பலாச்சோலையைச் சேர்ந்த செல்வன் சு.ஜனிஸ்ரன் அவர்கள் கணித பாட உதவி ஆசிரியராகவும் உள்வாங்கப்பட்டார். தொடர்ந்து 11.08.2024ல் பரதநாட்டிய பாடத்தினைக் கற்பிப்பதற்காக வெல்லா வெளியைச் சேர்ந்த செல்வி இ. வினித்தா ஆசிரியை அவர்களும் உள்வாங்கப் பட்டு இன்றுவரை எமது கல்வி நிலையமானது ஆசிரிய மாணவ ஒன்றுபட்ட உழைப்பினால் சிறப்பாக இயங்கி வருகின்றது.

மேலும் மாணவர்களின் அடிப்படைத் தேவை கருதி மிக நீண்டகாலமாக இருந்து வந்த மலசலகூட தேவையானது 2024ல் மாணவர் நலன்சார் அமைப்பொன்றினது பகுதியளவான பங்கேற்புடனும் பெற்றோரது பங்களிப்பையும் பெற்றுக்கொண்டு ஆண், பெண் மாணவர் களுக்கு வெவ்வேறாக அமைத்து திறந்து வைக்கப்பட்டது.

2011ம் ஆண்டு 16 மாணவர்களுடன் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்நிலையத்தில் இன்று 13 ஆசிரியர்கள் மற்றும் 3 ஆசிரிய உதவியாளர்கள் (பழைய மாணவர்கள்) இணைந்து முன்பள்ளிச் சிறார்களுக்கான வாய்மொழி ஆங்கிலம், ஆரம்பப்பிரிவுகளுக்கான ஒன்றிணைந்த பாடங்கள் (தமிழ், கணிதம், சுற்றாடல்சார் செயற்பாடுகள்) இடைநிலைப் பிரிவிற்கான தமிழ்மொழியும் இலக்கியமும், கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம், வரலாறு, சிங்களம், தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், பரதநாட்டியம் ஆகிய பாடங்களைத் தற்போது 275 மாணவர்களுக்கு மிகச்சிறந்த முறையில் போதித்து வருகின்றனர்.

இதன்மூலமாக சமகாலத்தில் மாணவர்களது சாதனைகள் பல்கிப் பெருகி யுள்ளதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இதன் வெளிப்பாடாக இங்கு பயின்ற மாணவர்கள் வைத்தியத்துறை (செல்வன் தி. டிலக்ஷன்), சட்டத்துறை (செல்வி தி. டிலக்ஷனா), பொறியியல்துறை (செல்வன் சு. ஜனிஸ்ரன்) போன்ற உயர்துறைகளில் பல்க லைக்கழகக் கல்வியைப் பெற்று வருவது வெள்ளிடைமலையாகும்.

இச்சாதனைகளை தம்பிள்ளைகள் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதற்காக இப்பிரதேச பெற்றோர் காட்டுகின்ற கரிசனை, அக்கறை என்பது அளப்பரியதாகும். எமது இந்தக் கல்வி நிலையத்தில் குறிப்பாக இரண்டு விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் படுகிறது. முதலாவது ஒழுக்கம் இரண்டாவது கல்வி. இதனூடாக பல்திறன்கொண்ட மாணவர்கள் கட்டியெழுப் பப்படுகின்றனர்.

குறிப்பாக கல்விநிலைய ஆசிரியர்கள், மாணவர்களது பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், சங்கங்கள் (மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், காக்காச்சிவட்டை கிராம அபிவிருத்திச் சங்கம், பலாச்சோலை கிராம அபிவிருத்திச் சங்கம்), அமைப்புக்கள் (அன்னையின் கரங்கள் அமைப்பு, சோலை அமைப்பு, தாமரை இளைஞர் அமைப்பு, கிதுசனா சுவாசவேர்கள் அமைப்பு), ஆலயங்கள் (காக்கச்சிவட்டை ஸ்ரீ சிவமுத்துமாரியம்மன் ஆலயம், பலாச்சோலை கருணைமலைப் பிள்ளையார் ஆலயம், மாவடிமுன்மாரி மஹாவிஸ்ணு ஆலயம்), பாடசாலைகள் (மட்/ பட்/காக்காச்சிவட்டை விஸ்ணு மகா வித்தி யாலயம், மட்/பட்/மண்டூர் 37 நவகிரி மகா வித்தி யாலயம், மட்/பட்/ஆனைக்கட்டியவெளி நாமகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியாலயம், மட்/பட்/சின்னவத்தை முத்தமிழ் வித்தியாலயம், மட்/பட்/பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை), மட்/பட்/வெல்லாவெளி கலைமகள் மகா வித்தியாலயம், மட்/பட்/ விவேகானந்தபுரம் பாமகள் வித்தியாலயம், மட்/பட்/ களுவாஞ்சிகுடி விநாயகர் வித்தியாலயம்) ஏனைய தனியார் கல்வியை வழங்கும் அமைப்புக்கள் (விஸ்ணு கல்வி அபிவிருத்தி ஒன்றியம், ஹயகிரீவா கல்விநிலையம்), விளையாட்டுக்கழகங்கள் (இளங் குயில் விளை யாட்டுக்கழகம், விழிக்கதிர் விளையாட்டுக்கழகம், கருணை விளையாட்டுக் கழகம்), பொதுச் சுகாதார பரிசோதகர்கள், கிராமசேவை உத்தியோகத்தர்கள். இவற்றையும் தாண்டி இங்கு கல்வி பயில வருகின்ற 12 கிராமத்து மாணவர்களது பெற்றோர்கள் என்போரது இடையறாத ஒத்துழைப்பும் உதவியும் ஊக்கப்படுத்தலும் எம்மை மேன்மேலும் வளர்வதற்கு தூண்டுகோலாயமைந்த முதன்மைக் காரணிகளாயமைகின்றன என்பதில் ஐயமில்லை. (இதுவரை ஒத்தாசை வழங்கியோரது விபரங்களை தனித்தனியே பட்டியலிடுவது சிரமமானது) எனவே அனைவரது ஒத்துழைப்பும் பங்களிப்பும் நல்லாதரவும் தொடர்ந்தும் காணப்படுத்துமிடத்து இப்பிரதேச மாணவர்களை மேன்மேலும் கல்வியின்பால் இட்டுச்செல்ல முடியும் என்பதில் எந்தவித சந்தேகத்திற்கும் இடமிருக்காது.

திரு மு.கோவிந்தராசா
பொறுப்பாசிரியர்,
லைசியம் கல்வி நிலையம்.
காக்காச்சிவட்டை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2015ம் ஆண்டு இடம்பெற்ற பாராட்டு விழாவின் போது.



2016ம் ஆண்டு பெற்றோருக்கான பொதுக்கூட்டம் நடைபெற்ற போது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# உன் பெயர் லைசியம்

பன்னிரு ஆண்டுகள் பல்லவித்து,
பழுத்த பழங்களாய்ப் பரந்து விரிந்த
பண்பும் கல்வியும் பேரொளி தாங்கி
பரிபூரணமாகப் பாடம் சொன்னது - உன் பெயர் லைசியம்

பதினாறு குழந்தைகளை முன் ஈன்றாய்
இரு ஆசான் கொண்டு பயிரிட்டாய்
சிகரம் தொட உரமிட்டாய்
அடிபதித்த மாணவன் உரக்கச் சொன்னது - உன் பெயர் லைசியம்

ஒலிக்க நின்றாய் ஓலைக்குடிசையில்
கல்விக்கரம் நீட்டினாய் உன்மடியில்
மாணாக்கர் நெஞ்சில் விதைச் செடி வளர்த்து
விழிக்க வைத்ததோர் வெள்ளமாய் - உன் பெயர் லைசியம்

ஒழுக்கமும் அறிவும் வழிகாட்டி
உன்னதம் வளர்த்திடும் புனிதம்
புதிய உழைப்பின் புனைவாய்
நிலைமாறா நினைவாய் நீடிக்கும் - உன் பெயர் லைசியம்


நீ ஈன்ற பதினாறில் ஒன்று நான்
நீ உமிழ்ந்த வித்தின் இற்றைய கன்று நான்
உயிர் மாண்டும் மறப்பேனோ - நான்
உரக்க உரக்கச் சொல்வேன் - உன் பெயர்தான் லைசியம்

கு. திஷாயினி
பழைய மாணவி
லைசியம் கல்வி நிலையம்
(2017 O/L Batch)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நீரின்றி அமையாது உலகு



இயற்கை அன்னையவள் பிரசவித்த இனிய புனல்
இன்பமாய் நாம் வாழ இன்முகத்தைத் தான் காட்டி
இடரின்றி இவ்வுலகில் ஜீவன்கள் ஒளிவீச
தாகக் குடத்திற்கு எண்ணெயாய் வந்திடுமே

பாருக்கு குளிரூட்டி ஊனுக்கு உயிரூட்டி
பாசமாய் அரவணைக்கும் வள்ளலாம் கங்கையவள்
புனிதத்தைக் கொடுப்பதனால் புத்தியற்ற பேதையரும்
கொதித்து எழுகின்றாள் சுனாமி வெள்ளமாக

முப்பங்கு பாரினிலே மூடியே இருந்தாலும்
கடுகளவு தானுண்டு புனிதமாய் பருகிடவே
சுகமான ஜலமின்றி சுத்த வீரர் தானழிய
மூக்கால் அழுகிறது மூவுலகும் இதைக் கண்டு



தேசம் தாண்டுகின்ற சாக்கடைக் கழிவுகளால்
நதியில் மீன்களில்லை நாளை நதிகளில்லை
உடலில் சுகமின்றி மகிழ்வான உறவின்றி
கறையற்ற நீர்தேடி மக்கள் கூட்டம் அலைகிறதே

நோயின்றி உயிர்வாழ வாடாமல் பயிர் வாழ
கண்ணீரைக் களைந்திடவே நன்னீரைக் காத்திடுவாய்
வெற்றிக்கனி சுவைத்திட்டு விண்மீனாய் மிளிர்ந்திடவே – மனிதா
சீர்பெற நீயும் சிறப்புடனே பேணிடுவாய் புனிதமாய் ஜலமதனை.

சு. டினுஸ்கா
தரம் - 08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# எமது சமூகத்தின் வளர்ச்சியை நோக்கிய பயணம் - ஓர் கண்ணோட்டம்

சமூகமொன்றின் முன்னேற்றமானது பலதரப்பட்ட காரணிகளின் விளையுளாக உருவாவதாகும். ஸ்திரதன்மையுள்ள நீடித்து நிலைபெற்ற சமுதாயமொன்றிலேயே மனிதர்களின் வாழ்க்கைத் தரமும் உயர்வு பெற்றிருக்கும். அரசியல், பொருளாதாரம், கல்வி, கலை, கலாசாரம் என்று பல்வேறுபட்ட துறைகள் முன்னேறும் போது ஒரு பிராந்தியத்தின் வளர்ச்சியும் முழுமையடைகின்றது. மேற்குறித்த அனைத்து துறைகளிலும் பின்தங்கியிருந்த எமது பிரதேசம் எவ்வாறு தடைகளை தகர்த்தெறிந்து முன்னேற்றப் பாதையில் வீறுநடை போடுகிறது என்பதை அலசி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

அனைத்து வளங்களையும் தன்னகத்தே கொண்ட எமது பிரதேசம் பொருளாதார முன்னேற்றத்தை துரித கதியில் அடைவது இயல்பானதாகும். ஆயினும் கடந்த காலத்தில் யுத்தத்தின் பேரிழப்புகளால் அரசியல், பொருளாதார முன்னேற்றம் மந்தகதியில் இடம்பெற்றதென்பதை யாவரும் அறிவோம். என்றாலும் எம்மவர்களின் அயராத உழைப்பு அவர்களை இன்று பொருளாதாரத்தில் உயர்வடைய வைத்திருக்கின்றது. எமது உறவுகள் வெளிநாடுகளில் தொழில் புரிந்து பெரும் அந்நிய செலாவணியை எமக்கு ஈட்டித்தருகின்றனர். தாயகத்தில் உள்ளோரும் தமது திறமை மற்றும் கடின உழைப்பு காரணமாக விவசாயம், வணிகம் உள்ளிட்ட துறைகளில் சிறந்தோங்குகின்றனர். இவற்றை எமது சமூகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கான "கிறீன் சிக்னல்களாக" நாம் எடுத்துக் கொள்ளலாம்.

கலை, கலாசாரம் என்பவற்றிக்கு பெயர்போனவர்கள் எமது பிரதேச மக்கள் எதிலும் தமது கலாசாரத்தை விட்டுக் கொடுக்காத போக்கு எம்மவர்களிடம் நிறையவே உண்டு. தாம் வறுமைப்பட்டுப் போனாலும் தமது கலாசார பெருமிதமான ஆலயங்கள் சிறக்க வேண்டுமென்று அவர்கள் நினைப்பதும், பண்பாடுகளை பேணிக்காக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் காட்டும் அக்கறையும் உண்மையில் பாராட்டுக்குரியவை. ஏனெனில் கலை, கலாசாரங்கள அழிந்து போனால் அது ஓர் இனமே அழிந்து போனதற்கு ஒப்பான தீவிரத்தன்மை கொண்டது.

மேலே குறிப்பிட்ட அரசியல், பொருளாதார, கலை, கலாசாரம் போன்ற துறைகளோடு சேர்த்து கூறப்போனால் ஒரு படி மேலாக முக்கியத் துவம் பெறுவது கல்வி. ஒரு சமூகத்தில் கல்வி துறை வீழ்ச்சியை சந்தித்தால் அத்திவாரம் உறுதியில்லாத கட்டிடம் போல் அம்மக்கள் கூட்டமும் சரிவை சந்திக்க நேரிடும். " அறிவு அற்றம் காக்கும் கருவி" என்று வள்ளுவன் கல்வியின் பெருமையைக் கூறி ஒரு சமூகத்திற்கு அது காவலாக விளங்குவதை எடுத்துரைக்கின்றான். ஆகவே பிரதே சத்தினுடைய கல்வி வளர்ச்சி பற்றி ஆராய் வது இக்கட்டுரையின் மூல நோக்கங்களில் முதன்மை பெற்றதாக விளங்குகிறது.

கல்வி துறையில் எமது மாணவர்கள் பெரும்சாதனைகளை நிலை நாட்டுவதை அண்மைக்கால புள்ளி விபரங்கள் தெளிவாக காட்டி நிற்கின்றன. இதற்கு பாடசாலை முக்கிய பங்கு வகித்தாலும், கல்வி நிலையத்தின் பங்களிப்பு பரந்தளவில் காணப்படுவதை யாரும் மறுப்பதற்கில்லை. லைசியம் கல்வி நிலையம் தொடங்கப்பட்ட வரலாற்று பின்னணியை நாம் பார்ப் போமானால் அதன் முக்கியத்துவம் நன்கு புலப்படும். இன்றைய காலகட்டத்தில் பிரத்தியேக வகுப்புக்கள் இல்லாத வெறும் பாடசாலைக் கல்வியை எங்கும் காணமுடிவதில்லை. பிரத்தியேக வகுப்புக்கள் பாட அறிவை கூர்மைப்படுத்துவதோடு மேலதிக அறிவினையும் மாணவர்களுக்கு நல்குகின்றன. இதனால் கல்வித்தரம் உயர்வதை பரீட்சைப் பெறுபேறுகள் தெளிவாக காட்டி நிற்கின்றன.

அவ்வகையில் இற்றைக்கு பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் எமது பிரதேசத்தில் பிரத்தியேக வகுப்புக்கள் எதுவுமற்ற இன்னலான சூழ்நிலையில், எமது ஆசிரியர்களின் அயராத முயற்சியால் லைசியம் கல்வி நிலையம் ஸ்தாபிதமானது. இதற்கு பிரதேச மக்களின் பூரண ஒத்துழைப்பு கிடைத்தமையினால், மாணவர்கள் பெருமளவு நன்மைகளை பெற்றனர். கல்வி நிலையத்தில் கற்ற பல மாணவர்கள் பொதுப்பரீட்சைகளில் தமது உச்சகட்ட திறமைகளை வெளிப்படுத் தியமையை புள்ளி விபரங்கள் காட்டி நிற்கின்றன.

" ஒழுக்கமற்ற கல்வி உதவாது" என்பது ஆன்றோர் கொள்கை இதனை உணர்ந்ததால் தான் என்னவோ, இங்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் மாணவர்களிடையே ஒழுக்கத்தை விதைக்கின்றனர். மாணவர்கள் தவறுவிடும் பட்சத்தில் கண்டித்து திருத்து கின்றனர். ஏட்டுக்கல்வியை மட்டும் போதிக் காமல் மாணவர்களை புறகிருத்திய செயற்பாடுகளிலும் ஈடுபடுத்துவது, வேறெந்த கல்வி நிலையங்களிலும் காணப்படாத தனிச் சிறப்பென்றே கூறமுடியும். எனவே மாணவர் கள் தலைமைப்பண்பு மிக்கவர்களாகவும் ஒழுக்கசீலர்களாகவும் எத்தகைய பாதக சூழ்நிலைகளையும் சமாளித்து வெற்றியாளர்களாகவும் வீறுநடை போடுகின்றனர்.

"கவனக்கலைப்பான்கள்" அதிகரித்து விட்ட இக்காலகட்டத்தில் இத்தகைய கல்வி நிலையத்தில் கண்டிப்புடன் கல்வியைப் பெறுவதை மாணவர்கள் பேறாக நினைக்க வேண்டும். "ஸ்மார்ட் போன்கள்" வந்த பிறகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மாணவர்கள் கல்வியை விட்டு வெகுதூரம் விலக முற்படுகின்றனர். விளைவு கல்வித் துறையில் மீண்டும் சரிவையே ஏற்படுத்தும். எனவே மாணவர்கள் தாம் கற்கும் பருவத்தில் " கவனக்கலைப்பான்களிடம்" பலியாகாமல் ஆசிரியர்களின் சொற்கேட்டு நடக்க வேண்டும். உயர்வான கல்வியைப் பெற்று பெரும் கல்விச்சமூகம் ஒன்று உருவாக சங்கல்பம் பூண வேண்டும். இதுவே எமது சமூகத்தின் நிரந்தர முன்னேற்றமாக அமையும்.

" உளர் என்னும் மாத்திரையர் அல்லால்
பயவாக் களரனையர் கல்லாதவர்"

- உயர் வள்ளுவம் -

தி. டிலக்ஷன்
(பழைய மாணவன், 2017 O/L Batch)
மூன்றாம் வருட மருத்துவ மாணவன்,
மருத்துவ பீடம்,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலக் கணிதன்




**கா**லங்கள் மாறும்போது யுகங்களும் புதிதாய் உருமாறுகின்றமையால் மனிதனும் புதிதாய் பிறக்கின்றான். காலத்தின் தேவைக்கேற்ற வகையில் கணித உலகமும் விரிவடைந்து கொண்டேசெல்கின்றது. இவ் விஞ்ஞான உலகின் சாவியே கணித மாகும். கணிதம் என்பது எமது அன்றாட வாழ்வில் உள்ள பிரச்சினைகளை புரிந்து கொள்ளவும், தீர்க்கவும் உதவும் வழியே ஆகும். கணிதம் எண்களைப் பற்றியது மட்டு மல்ல, இது சிந்தனைத் திறன் மற்றும் தர்க்கிக்கும் திறன்களை கண்டறிவதற்கான ஒரு சிறந்த வழியுமாகும். எண்களை எண்ணுவதில் தொடங்கி சிக்கலான சமன்பாடுகளில் தேர்ச்சி பெறுவது வரை, கணிதம் திருப்தியைத்தரும் ஒரு பாடமாகும்.

கணிதம் ஓர் மௌனமான துணை ஆகும். நமது அன்றாட வாழ்வின் நடைமுறைகளை வழிநடத்தவும், தெரிந்த விடயங்களில் தெளிவான முடிவுகளை எடுக்கவும் உதவுகின்றது. அன்றாட வரவு செலவுகளை நிர்வகிக்கவும், நிதிமுடிவுகளை எடுக்கவும் கணிதம் உதவுகின்றது. பிரயாணம் செய்யும் ஒருவர் தனது பயணத்திற்காக பணத்தினைச் செலுத்தி மிகுதியாகக் கிடைக்க வேண்டிய பணம் எவ்வளவு என்பதை அறிவதற்கும், வியாபார நடவடிக்கைகளின் போது பெற்றுக்கொண்ட பொருட்களுக்கான தொகை எவ்வளவு என்பதை அறிவதற்கும் உதவுகின்றது, அவ்வாறான சந்தர்ப்பங்களில் பிழையின்றி கணக்குப்பார்க்கும் அறிவும், மனப்பாங்கும் இல்லையாயின் அவர் ஏமாற்றப்படலாம். காலையில் நேரத்திற்கு எழும்புவதற்காக, நேரத்தைக் கண்காணிப்பது கூட ஓர் அடிப்படைக் கணிதமேயாகும். கணிதம் வகுப்பறைகளில் மாத்திரம் நின்று விடுவதில்லை, அது நம் வாழ்வில் ஒவ்வொரு அம்சத்திலும் ஊடுருவிக் காணப்படுகின்றது. எனவே, இன்று வாழும் அனைவருக்குமே கணித அறிவு அவசியமாகின்றது.

கணிதம் மிகச்சுவாரஸ்யமான ஓர் பாடமாகும். நீங்கள் இதனை விரும்பினாலும் வெறுத்தாலும், வாழ்வில் குழப்பங்களை தடுத்து ஒரு தெளிவைத் தருகின்றது, என்பதை யாரும் மறுக்க முடியாது. கணிதத்தை வெறுப் பதற்கு ஒரேயொரு காரணம் மாத்திரமே இருக்கமுடியும். அதனைக் கற்கும் பொருத்த மற்ற முறையே அதுவாகும். இலகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நுட்பங்களினூடாக கணிதத்தை கற்கும் போது ஏனைய பாடங்கள் அனைத்தையும் விட இலகுவானது எனும் உண்மை தெளிவாகும். கணிதம் கற்பதில் நீங்கள் இடர்படுகிறீர்கள் என்றால் சரியான இலகு முறைகளை தெரிவுசெய்யுங்கள், அலகு பொருத்தப் பாட்டிற்கேற்ப கற்றல் நுட்பங்களை மாற்றி அமையுங்கள். வெற்றிக்கனி உங்களின் கைகளிலேயே கிடைக்கும்.

நவீன யுகத்தின் அங்கமான தொழில்நுட்பம் கணிதத்தில் மூழ்கிக் காணப்படுகின்றது. சமூக ஊடக ஊட்டங்களுக்கு சக்தியளிப்பதற்கு கணிதம் முக்கிய பங்காற்றுகின்றது. கால ஓட்டத்திற்கேற்ப நாமும் மாறா விட்டால் வாழ்வில் சாதிக் முடியாமல் போகும். "மாற்றம் ஒன்றே மாறாதது'' என்பதே நிதர்சனமான உண்மையாகும். இக்காலத் தேவையை உணர்ந்து திறன்களை தேவைக்கேற்ற வகையில் வளப்படுத்துபவனே "காலக் கணிதனாகின்றான்", அவனே சாதனையாளன் ஆகின்றான். சாதிக்க துடிக்கின்றதா உமது நெஞ்சம்? இன்றே தொடங்கட்டும் நேரான சிந்தனைகள், பூமியை அதிரவைக்கட்டும் ஆலங்கட்டி மழையாக.....

Y. Chanjeev.B.Sc(Hons),PGDE,SLTS

Mistakes are proof that you are trying....

**ALL IS WELL**

**துறவென்பது உறவைச் சுருக்கிக் கொள்வதல்ல. உலகளவு பரந்து விரிந்ததாய் ஆக்கிக் கொள்வதே துறவின் லட்சணம்.**

**- ரமணமகரிஷி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இடர்பாடுகளும் இடைவிலகலும்

எமது நாட்டினைப் பொறுத்தவரை மாணவர்களுக்கான கட்டாயக் கல்வியின் வயதெல்லையாக 5 - 16 எனக் கருதப்பட்டிருந்தது. அது தற்போது 5 - 18 ஆக மாற்றம் அடைந்துள்ளது இவ்வயதெல்லை காலப்பகுதிகளில் கற்றல் நடவடிக்கைகளை பாரியளவிலான பிரச்சினைகளின்றி கற்பதற்கான உரிமை மாணவர்களுக்கு உண்டு.

ஆனால் எமது பிரதேசத்தைப் பொறுத்தவரையில் மாணவர்கள் கல்வி கற்பதில் பல இடையூறுகளை சந்திக்க வேண்டி ஏற்படுகிறது. இதனால் ஏற்படும் மாணவர் இடைவிலகல் என்பது மாணவர்களுக்கு மட்டுமன்றி ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி அதிகாரிகள், பெற்றோர்கள் என அனைவரையுமே இது கவலை கொள்ள வைக்கும் ஒரு விடயமாக காணப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பாக இவர்கள் அனைவருமே பல கோணங்களில் சிந்தித்து இடைவிலகலைக் குறைப்பதற்கு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற போதிலும் முழுமையான திருப்திகரமான ஒரு தீர்வைப் பெற முடியாமலே உள்ளது. இந்நிலைமைக்கு பல காரணங்கள் உள.

**'வரவு ஒழுங்கீனம்'**

இடைவிலகலுக்கு மூல காரணமாக அமைவது வரவு ஒழுங்கீனம் ஆகும். இப்பிரதேசத்திலே இருக்கின்ற பாடசாலைகளை நோக்கினால் பல்வேறுபட்ட கிராமங்கள் மற்றும் தொலைதூரங்களில் இருந்து பிள்ளைகள் பாடசாலைக்கு வருகிறார்கள் இவர்களின் திருப்திகரமான வருகைக்கு போக்குவரத்து வசதியின்மை, பொருளாதார பிரச்சினை, கல்வியறிவற்ற பெற்றோர்கள் வேலைக்கு அமர்த்துதல் போன்ற பல விடயங்கள் இதில் செல்வாக்குச் செலுத்துகின்றது. எனவே வரவு ஒழுங்கீனத்தை இழிவளவாக்குவது அதிபர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெரும் சவாலாகவே உள்ளது.

**'அடுத்து கல்வியின் முக்கியத்துவத்தை உணராத பெற்றோர்கள்'**

இப்பிரதேசமானது மிகவும் வறிய குடும்பங்களையும் கூலி வேலை செய்கின்ற பாமர மக்களையும் உடையதாக காணப்படுவதனால் கல்வியின் முக்கியத்துவத்தினை பெற்றோர்கள் உணர்ந்து கொள்ளாத நிலையில் செயற்படுவது அத்தோடு ஊக்கப்படுத்தும் தன்மையின்மை பிள்ளைகளை நல்வழிப்படுத்தும் ஆளுமையின்மை போன்ற பல காரணிகளால் மாணவர்களின் இடைவிலகல்கள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**'குடும்பப் பிரிவு'**

மாணவர்களின் இடைவிலகலில் செல்வாக்குச் செலுத்தும் மற்றுமொரு காரணி குடும்பங்களின் பிரிவாகும். பண்பாட்டம்சங்களோடு கூடிய குடும்பம் என்றால் நாம் எடுத்துக்காட்டுவது கிராமப்புற குடும்பங்களைத்தான் ஆனால் அது தற்போது பல்வேறு சிதறல்களை எதிர்நோக்கி வருகின்றது. குறிப்பாக நாகரீக வளர்ச்சி, வெளியிடத் தொடர்புகள், நவீன சாதனங்களின் கோரப்பிடி வாழ்க்கை, வெளிநாட்டு மோகம் போன்ற பல காரணிகளால் தாய், தந்தை பிரிவு, மறுதிருமணம், வெளிநாடு செல்லல், தற்கொலை போன்ற செயற்பாடுகளால் பிள்ளைகளின் கல்வி நேரடியாக பாதிக்கப்படுகிறது. அதாவது வேறொருவரின் அரவணைப்பில் இருக்கும் பிள்ளை தனது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முடியாமல் தவிக்கின்றது, பாடசாலையை வெறுக்கின்றது. சில கட்டாயப் படுத்தல்களின் பயனாக ஓரிரு நாட்கள் பாடசாலைக்குச் சென்று இடைவிலகுகின்றது அந்த நேரத்தில் பாடசாலை படும் இடர்பாடுகளுக்கு அளவே இல்லை.

இவ்வாறான பல மாணவர்கள் புற செயற்பாடுகளின் உந்துதல்களால், பாடசாலைக்கு வந்தாலும் எழுதும் வாசிக்கும் திறனை அடைந்து கொள்ள முடியாமல் தத்தளிக்கின்றார்கள். இடைநிலையை அடையும்போது தாமாகவே பாடசாலையை விடவேண்டிய நிற்பந்தத்தை உணர்ந்து இடைவிலகும் தன்மை அதிகரிக்கின்றது.

இச் செயற்பாடுகளையும் மீறி வற்புறுத்தல்களின்பால் வருகின்ற மாணவர்களும் தரம் 10,11ம் வகுப்புக்களில் இருந்து விலகிச் செல்கின்றார்கள். ஏன் இவைகள் அனைத்தையும் சமாளித்து சாதாரண தரத்தில் சித்தி அடைகின்ற மாணவர்களில் இருந்து கூட இடை விலகல் ஏற்படுகின்றது. பொருளாதாரப் பிரச்சினை, அவமானம், கௌரவம் போன்ற காரணிகளின் செல்வாக்கினால் இவ்வாறான பல காரணிகளின் செல்வாக்கே மாணவர்கள் பலர் இடைவிலகுவதற்கும் ஒழுக்கச்சீர்கேடுகளுக்கும் கல்வியில் விருப்பம் குறைவதற்கும் ஊன்றுகோலாக உள்ளது. இவை அனைத்திற்கும் மேலாக இடைவிலகி மீண்டும் இணைந்து கொண்ட மாணவர்கள் எத்தனையோபேர் இன்று சாதனையாளர்களாகவும், கல்விமான்களாகவும். அறிஞர்களாகவும் எம் கண் முன்னே திகழ்கின்றார்கள். ஏன் கிரேக்க விஞ்ஞானிகளில் பலர் கூட பாடசாலைக் கல்வியை புறக்கணித்தவர்களே.

எனவே ஒவ்வொரு மனிதனும் தன்னை உணர்ந்து தன் தேவையை உணர்ந்து கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்பட்டால் இடைவிலகலோ, இடர்பாடோ ஏற்படாது. தவிர பாடசாலைகள் எதிர்பார்க்கின்ற கல்விக் கொள்கைகளை அடைந்து கொள்ளமுடியும் என்பதனை தெளிவுபடுத்திக் கொள்கின்றேன்.

சு.பாஸ்கரன்
ஆசிரியர் - தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனிதா உனக்கு

பிறப்பு என்பது தாயின் கருவறையில்தான்
வளர்ப்பு என்பது தந்தையின் உழைப்பறையில்தான்
ஆனால் படிப்பு என்பதோ லைசியத்தின் மூச்சறையில்

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
கல்வியின் அழகு ஒழுக்கத்தில் தெரியும்

கத்தியின் கூர்மை வெட்டும்போது
புத்தியின் கூர்மை கற்கும்போது

பெண்மைக்கு அழகாய் தாய் இருப்பாள்
உண்மைக்கு அழகாய் நீ இரு

நீரால் செழிக்கும் பயிர்த்தோட்டம் - நீ
கல்வியால் செழிப்பாய் அறிவுப் பூந்தோட்டமாய்.

பொறுமையாய் என்றும் இரு
பொறுமையிலும் என்றென்றும் வாய்மையாய் இரு

தெளிவு எனும் பக்கவேர் பல இருந்தாலும்
கற்ற தெளிவு எனும் ஆணிவேர் சிறந்தது

பள்ளிக்கூட படிப்பும் போதவே போதாது
பட்டப்படிப்பும் போதவே போதாது
உலகக் கல்வியை அறிந்து ஆராய்வதற்கு

கல்விக்கு மூன்றெழுத்து
கல்வியால் கிடைக்கும் புகழுக்கும் மூன்றெழுத்து
இரண்டும் கைகோர்த்தால் ஆறெழுத்து
அதுவே நம் தலையெழுத்து

கற்றோரைப் பார்த்து கைதட்டல் நன்றல்ல
நிகராய் கற்று கைதட்டல் வாங்குதலே நன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மற்றோருக்கு கொடுத்து வாழுதல் நல்லது
பெற்றோரை விட்டுக்கொடுக்காது வாழுதல் சாலவும் நல்லது

செல்வத்தில் சிறப்பு கல்வி
கல்விக்கு சிறப்பு தெளிவு

காகமோ கூடி அழைத்து ஒற்றுமையாய் உண்ணும்
சில மனிதமோ ஓடி அலைந்து வேற்றுமையாய் மின்னும்

சிலை செதுக்க உளியும் நுட்பமும்
உனை செதுக்க கல்வியும் ஒழுக்கமும்

அகர வரிசையின் ஆயுதம் ஃ எழுத்து
வெற்றி வரிசையின் ஆயுதம் தோல்வி

அடுக்கி வைத்த புத்தகங்கள் சரியலாம்
ஆனால் அடுக்கி வைத்த நல்லெண்ணங்கள் சரிதலாகாது

புத்தகத்தை பார்த்து தலை குனி
உலகைப் பார்த்து தலை நிமிர்வாய்

**பேச்சிற்கு தேவை பணிவும் அளவும்**
**உண்ணுவதற்கு தேவை அளவும் நேரமும்**
**தூங்கத் தேவை நேரமும் அமைதியும்**
**சுவாசிக்கத்தேவை அமைதியும் ஆழமும்**
**செயற்படத் தேவை ஆழமும் வேகமும்**
**உழைக்கத் தேவை வேகமும் உண்மையும்**
**நம்பிக்கைக்குத் தேவை உண்மையும் தெளிவும்**
**சிந்திக்கத் தேவை தெளிவும் உணர்வும்**
**பழகத்தேவை உணர்வும் தெரிவும்**
**உடுத்தத்தேவை தெரிவும் அழகும்**
**கற்கத்தேவை அறிவழகும் ஒழுக்கமும்**

சோமசுந்தரம் சசிகலா
பழைய மாணவி (2017 O/L BATCH)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# மும்மொழித் தேர்ச்சியின் அவசியம்

'பிறந்து சிறந்த மொழிகளிலே.. சிறந்தே பிறந்த தமிழ் மொழியூடே;; இக்கட்டுரை எழுதுவதில் பெருமிதம் அடைபவனாக.. 'மொழி; என்பது தமது உளக் கருத்துக்களை ஏனையோருக்கு தெரிவிக்கும் ஓர் ஊடகமே ஆகும். அந்த மொழியானது வெறும் கருத்துக்களை மட்டும் உணர்த்தாமல் மக்கள் ஒருவரை ஒருவர் தெரிந்து கொண்டு ஒருகுழுவாக வாழவும் வழிவகை செய்கிறது. மொழி மக்களின் நாகரீகம், கலாசாரம், பண்பாடு, வழக்குகள் இவற்றை அடுத்த தலைமுறையினருக்கு கொண்டு சேர்க்கின்றது. மக்களின் அனைத்துச் செயல்களுக்கும் அடிப்படையாக விளங்கி தனிப்பட்டவர் வாழ்வைச் சமூகத்துடன் பிணைக்கிறது என்றால் அது மிகையாகாது. அந்த வகையிலே தமிழ், சிங்களத்தோடு சேர்த்து ஆங்கிலமும் உலாவரும் எமது இலங்கைத்திருநாட்டில் வாழக்கிடைத்தது எமக்குக் கிடைத்த ஓர் வரப்பிரசாதமாகும்.

இவ்வகையிலே இலங்கையில் காணப்படும் மும் மொழிகளானது, இலங்கை வாழ் மக்களின் குரல்களில் பிறந்து செவிக்கு உணவாகின்ற ஒலிநிலை ஆகும். மேலும் இலங்கை வாழ் மக்கள் பேசும் மொழிகளானது மக்களையும், சமூகத்தையும் இணைக்கின்ற ஒரு பாலமாகவே செயல்படுகிறது. பேசுவோர், அதனைக் கேட்போர் என்ற இருவருக்கும் இடையே ஒருவரது உணர்ச்சிப் பாங்கினை மற்றவரின் கருத்துக்களோடு பொருந்தச் செய்து, அதனைக் கேட்போருக்கு உணர்த்தத் துணை புரிவதே இம் மொழிகளாகும். இவைகள் இலங்கை நாட்டின் இன அடையாளமாகவும், தேசியத்தைக் கட்டமைப்பதற்கான அடிப்படையாகவும் மொழிகள் அமைகிறது.

இவ்வாறாக இலங்கையில் காணப்படும் மொழிகளின் தோற்றம் பற்றி நோக்குகையில் முதலில் தாய் மொழியான தமிழ் மொழியானது எவ்வாறு தோன்றியது எனப் பார்க்கும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கண்ணுதற் பெருங்கடவுளும் கீழக மோடமர்ந்து பண்ணுற தெரிந்தாய்ந்த இப்பசுந்தமிழ். தனை ஆதி சிவன் படைத்து விட்டான்…" எனப் பண்டைத் தமிழ் நூல் கூறுகிறது. இதன் மூலம் தமிழ் மொழியானது கடவுளாலே உருவாக்கப்பட்டதென பண்டைய இலக்கியங்கள் வாயிலாக நம்பப்பட்டு வருகின்றன. அடுத்ததாக சிங்கள மொழியும் ஆதி காலத்திலே தோற்றம் பெற்றதென குறிப்பிடுகின்றனர். அத்தோடு உலக மொழியான ஆங்கிலமொழியும் சர்வதேசத்தில் தொன்மை யான வரலாற்றைக் கொண்டமைந்துள்ளது.

மேற்படி தோற்றம் பெற்ற மொழிகளின் அவசியம் மற்றும் நன்மைகளை பின்வரும் தலைப்புகளின் கீழ் ஆராய்வோம்.

**1. வேலைவாய்ப்பு**



நாம் கற்ற கல்விக்கேற்ற தொழிலை திருப்தியாக செய்வதற்கு மும்மொழித் தேர்ச்சி அவசியமாகின்றது. எமது இலங்கை நாட்டில் எப்பாகத்திலும் வேலை செய்ய வேண்டுமாயில் கட்டாயமாக தமிழோடு சிங்களமும் அவசியம் ஆகின்றது. இதற்காகவே அரச உத்தியோகத் தர்களுக்கு இரண்டாம் மொழியில் தடை தாண்டல் பரீட்சைகளும் நடைமுறையில் உள.



**2. பூரண அறிவைப் பெறல்**

எமது நாட்டைப் பொறுத்தவரையில் பாடசாலை நூல்கள் மற்றும் சில அறிவு நூல்கள் தவிர்ந்த ஏனையவை பெரும்பான்மை இனத்தவரின் சிங்கள மொழியிலும் சர்வதேசத் தகவல்கள் பெரும்பாலும் ஆங்கில மொழியிலு மே காணப்படுகிறது. ஆகவே இவ்வாறான பல்தரப்பட்ட பூரண அறிவைப் பெற மும்மொழித்தேர்ச்சி அவசியமாகின்றது.



**3. தேச ஒற்றுமையை உருவாக்கல்**

எமது நாட்டில் நிலவாய தேசிய மற்றும் இனமுரண்பாட்டின் அடிப்படையில் நிகழ்வுற்ற போரின் பின்னர் மூவின மக்களும் ஒற்றுமையாக வாழ வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. அந்தவகையில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் என்பன அத்தியாவசியமாகின்றது. உதாரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


மட்டக்களப்பில் வாழும் ஓர் இளைஞன் தலைநகரான கொழும்பிற்கு வேலை நிமித்தம் செல்கையில் அவருக்கு அங்கு சிங்களம் பேச வேண்டிய தேவை அத்தியாவசியமாகின்றது. இல்லையெனில் அங்கு அவரது வேலை பூரணமாக நிறைவுறா வண்ணம் தோல்வியிலே முடிவடையக் கூடியதாக அமைந்து விடும்.

### 4. மொழிசார் மற்றும் வரலாற்று ஆய்வுசார் விடயங்களை தெளிவாக விளங்கிக் கொள்ளல்



கல்வி வாயிலாகவோ அல்லது தொழில் வாயிலாகவோ மொழிசார் மற்றும் வரலாற்று ஆய்வு விடயங்களை மேற்கொள்ள எமது இலங்கை நாட்டில் மும்மொழித்தேர்ச்சி அவசியமாகின்றது. அதாவது ஒரு தமிழ்ப் பல்கலைக்கழக மாணவன் தனது பட்டப் படிப்பிற்கான வரலாற்று ஆய்வினை மேற்கொள்ள சிங்களப் பிரதேசத்திற்கு செல்லும் போது அங்கு அவன் துல்லியமாக ஆய்வு விடயங்களை கண்டறியவும் அறிக்கையிடவும் சிங்களம் அல்லது ஆங்கில மொழி அவசியமாகின்றது.

### 5. சகோதர இன சமூகத்துடன் நல்லுறவைப் பேண



பல்லின மக்கள் வாழும் எமது இலங்கைத்திருநாட்டில் அவர்களிடையே பல்வேறுபட்ட இன, மத, கலாசார, பண்பாட்டு, விழுமிய அம்சங்கள் மலிந்து காணப்படுகின்றன. அவற்றை விளங்கிக் கொண்டு அவர்களுடைய சம்பிரதாய சழக்குகளில் நாமும் பங்கு கொண்டு இன்ப துன்பங்களை மனதார பகிர்ந்து கொள்ள அவர்களிடையே தாய் மொழியே பெரிதும் உதவும். ஆகவே ஒரு சிங்களவர் தமிழர் சமூகத்தோடு நல்லுறவை பேணவோ அல்லது தமிழர் சிங்கள சமூகத்தோடு நல்லுறவைப் பேணவோ தமிழ் மற்றும் சிங்கள மொழி அறிந்திருத்தல் அவசியமாகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

### 6. வாழ்வாதாரத்தை மேம்படுத்த

எமது நாட்டைப் பொறுத்தவரையில் கல்வி கற்றவராயினும் சரி, கல்வி கற்காத வராயினும் சரி அவரது சிறந்த வாழ்வு திறம்பட அமைந்து உயர்வுபெற வேண்டுமாயின் அவரது மூலதன தேடல் முறைமையானது எமது முழு நாட்டிற்கும் ஏற்ற வகையில் அமைய வேண்டும். எடுத்துக்காட்டாக ஒரு வியாபாரம் செய்ய பவராயினும் அல்லது வேற்று மொழிப் பிரதேசத்தில் கடமையாற்றக் கூடிய வாய்ப்பு கிடைக்கும் போதும் சரி, உரிய பிரதேசத்திற்குரிய மொழிகளைப் பேசத்தெரியவில்லை ஆயின் மனநிறைவான தொழில் ஆற்றுகை அங்கு நடைபெறாது. மாறாக ஏமாற்றம், மன உளைச்சல் மற்றும் வாழ்வாதார தடை என்பன தோன்றுகின்றன. ஆகவே இலங்கை வாழ் அனைத்துப் பிரஜைகளும் தமது வாழ்வா தாரத்தை மேம்படுத்த தமிழ் மற்றும் சிங்களத் தைக் கற்றிருக்க வேண்டும்.





இத்தகைய பல்வேறு நன்மைகளை உள்ளடக்கிய மும்மொழித் தேர்ச்சியானது தற்போது அனைத்து அரச கல்விக் கூடங்களிலும் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு அரச சார்பற்ற கல்வி நிறுவனங் களிலும் மும்மொழியைப் பயில்வதற்கான கதவு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

### இலங்கையில் 1956ம் ஆண்டு

'சிங்களம் மட்டும்' சட்டமானது 1987ம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்த வாயிலாக தமிழ் மற்றும் சிங்களம் என்பன இலங்கை உத்தியோக பூர்வ மொழிகளாக அங்கிகாரம் பெற்றது. பின்னர் 2009ல் உள்நாட்டு போரின் முடிவில் இலங்கை கல்வி முறையில் இரண்டாம் மொழியின் அவசியம் கலாசார குறைகளை நிவர்த்தி செய்யவும் நல்லிணக்கத்தினை ஏற்படுத்தவும் புதுப்பிக்கப்பட்டது.

இதனால் தமிழர்களுக்கு சிங்களத்தையும், சிங்களவர்க்கு தமிழையும் இரண்டாம் மொழியாக ஊட்டி தற்போதைய இளஞ்சந்ததியினர்க்கு இன மத மொழி ரீதியாக ஒற்றுமை, புரிந்துணர்வு மற்றும் நல்லிணக்கத்தினை பெற்றுக் கொள்ள வழிவகுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இலங்கை மொழிப்பிரச்சினை வரலாற்றுச் சுவடுகளை எண்ணும் போது பாரபட்சமாகவே நகர்கின்றது. எமது இளந்தலைமுறையினர்க்கு அதனை பூதாகரமாக்காமல் நாட்டின் மொழியியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பன்முகத்தன்மையானது முழுக்க முழுக்க அபிவிருத்தியை நோக்கியதே எனக் கருதி.

புரிதல், ஒற்றுமை, தனி மனித வளர்ச்சி மற்றும் சமூக கலாசார ஒருங்கிணைப்பு ஆகியவற்றின் மையம் மொழிப்பல்வகைமை எனக் கொண்டு மும்மொழித்தேர்ச்சியை எம்மிளம் சந்ததிக்கு நிறைவாக வழங்குவோம். அத்தோடு எதிர்கால சந்ததியினர்க்கு பயன்தரு விடயங்களான விஞ்ஞானம், அறிவியல், தொழில்நுட்பம் என்பன சர்வதேச மொழியான ஆங்கிலத்தில் மலிந்து கிடக்கின்றன. அவற்றை இலகுவாக பெறவும் எதிர்கால கல்விச்சவால்களை எதிர்கொள்ளும் மாணவர் சமூகத்தை எமது பிரதேசத்திலிருந்தே உருவாக்குவோம்.
ஆங்கிலம் கற்று, அகிலம் வென்று வாழ்வதோடு மும்மொழியும் கற்று முன்னோடியாய் திகழ்வோம்.

- முற்றும் -

திரு. சாமித்தம்பி - மோகன்ராஜ்
ஆசிரியர் (தமிழ், இரண்டாம் மொழி சிங்களம்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



2017ம் ஆண்டு இடம்பெற்ற பாராட்டு விழாவின் போது.



2018ம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவின் போது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# Importance of learning English Language

It is my privilege to say a few words about the importance of learning English Language. At this stage, I would like to emphasize some of the following facts to the consideration of the public that Lycium Education Centre in Kakkachivaddai area , a truly outstanding Institute which is under the purview of Porathivu Pattu Division plays a major role in building up the  the standard of the students from grade one to Ordinary Level in English Language.

"It not only focuses on Education but also aims to make a change among the children through the disciplinary and spiritual deeds.By learning the foreign language, a student becomes a perfect and efficient one in the society to enhance and encourage the brotherhood , harmony and understanding among the children as well as it makes a path to get rid of the discrimination in a country which belongs to multi ethnic communities.

""We use languages to communicate with each other in SriLanka.Our main Languages are Sinhala and Tamil. We learn one as our Mother language and the other one as our second language. Leaning either of the language helps to maintain ethic harmony.

""We also have opportunities to learn several languages in our school system. Such as Japanese, Hindi , German , French and Chinese. However ,most of the students prefer learning English. It is a widely used and spoken Language all over the world. We need to learn English to know more about the latest trends in the area we are interested in.

For example,the mostly used language to browse the internet is English. In order to use Google or any other search engine , we should have good knowledge in English. We need English for our higher education too. Many courses in both Government and private universities are conducted in English medium. The books we have to refer to for higher study are also written in English.And also if anyone likes to be a Mechanical Engineer one day , he must study the international language to proceed his / her education properly and efficiently.

" Further, to get more job opportunities in the current world, the proficiency of




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

English language is a key to disclose the scopes to be engaged in a good job with a handsome salary.Nowadays if anyone found without the knowledge of any languages, he will be like a frog in a well.

"And also, By learning and speaking the English language, it creates a unique and pleasant environment in the society. In addition to that, we should not miss any opportunities in case it presents itself to learn the language.Then only you will be an asset in the future endeavours.


"Finally, The Lycium Education Centre is an excellent platform to develop the language skills and it has produced lots of students to serve the county."Thank you.

Mr S. Thilipkumar
(Teacher of English - Lycium Education Centre)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# என் இனிய தலைமுறையே!

"மனிதனாகப் பிறந்தவன் பயன் இன்றி அழியக்கூடாது" எனும் கோட்பாட்டினை முன்னிறுத்தி என் பிஞ்சுகளின் அவல நிலைய்ய இதன் வாயிலாக களைய முயல்வதோடு தொடக்கம் என்பது எளிது அதன் வாயிலாகக் கிடைக்கும் முடிவே பெரிது இதனையே இவ்வுலகம் ஏற்கிறது என்பதையும் நினைவிருத்தி என் எழுத்துக்களோடு பயணிக்க உங்களையும் அழைக்கின்றேன்.

பாசமிகு தம்பி தங்கையரே உங்களுடைய நோக்கங்கள் மீதான ஆசையை கனவு வாயிலாக அனுபவித்து வெற்றி நமதே என கோசமிடுபவர்களில் நீங்களும் ஒருவர் எனில் இதிலிருந்து கூர்ந்து கவனியுங்கள். இலக்கினை அடைவதற்கான சிறந்த மார்க்கம் அதனை நேசித்து அதை அடைவதற்கான வழி பல வலிகளைக் கொண்டிருந்தாலும் சிறிதும் கலங்காது முழுமனதான விருப்பத்தோடு அர்ப்பணித்தல். ஆகவே, ஆசைப்படுவதில் தப்பில்லை ஆனால் அது உங்களை தடுத்து நிறுத்தி உங்களையும் உங்கள் சிந்தனைகளையும் உறைய வைக்கப் போகிறது என்றால் விழித்துக் கொள்ளுங்கள்.


ஏன் எனில் நிலையற்ற மனது, வாழ்க்கை மீதான பயமற்ற தன்மை மற்றும் எவ்விடயத்திற்கும் இலகுவாக அடிமையாகும் நிலை போன்றவை உங்களை ஆட்கொண்டிருக்கும் பருவம் இது. எனவே இங்கு நீங்கள் அகப்படும் அல்லது உங்களை அறியாமலே உங்களை அகத்துறிஞ்சும் முக்கிய 3 பீடைகள் பற்றியும் பிரதானமாக பேச வேண்டி இருக்கிறது. இதற்கு முன்னர் மகிழ்ச்சி என்பதனை எவ்வாறு அனுபவிக்கின்றோம். என்பதனை உளவியல் மற்றும் விஞ்ஞான ரீதியாக பார்க்குமிடத்து 'டோபமைன்' என்கின்ற வேதிக் பொருளே எங்களுக்கு மகிழ்ச்சி எனும் உணர்வைத் தருகின்றது. ஆக எங்களுக்கு ஈடுபாடானவற்றை விருப்போடு செய்யுமிடத்து இவ்வேதிப் பொருள் மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது.

இவ்வாறாக உங்களுக்கு பாதகம் விளைவிக்கும் பீடைகளையும் நீங்கள் அள்ளி அணைக்கும் போது திருப்திகரமான மகிழ்ச்சியை உணர்வீர்கள். அவற்றின் மீதான போதை அதிகரிக்க அதிகரிக்க அதிகளவாக அதனை செய்வீர்கள். காலப்போக்கில் அது கிடைக்காத விடத்து உங்களது மூளை இறப்பது போல் உணர்வு ஏற்பட்டு பல அசௌகரியங்களுக்கு ஆளாவீர்கள். எனவே "அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு" என்பது போல் அளவிற்கு அதிகளவான சுய மகிழ்ச்சியும் ஆபத்தை ஏற்படுத்தும். என்பதனையும் நினைவுபடுத்தி பீடைகள் நோக்கி நகர்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**பீடை 01:-** கையடக்க தொலைபேசியில் தன்னை மறந்து மூழ்கும் மனநோயாளர்களான என் இளைய தலைமுறையினரான உங்களை நினைத்து மிகவும் கவலை அடைகின்றேன். இதற்கு வித்திடுவதில் அரைப்பங்கும் அதிகமாக என் ஆய்வின் பிரகாரம் இன்றைய கல்விப் புலமே பெரும் பங்குவகிக்கின்றது. தரம் 1 - 13 வரை ஏன் பாலர் பாடசாலைகளிலும் கூட வட்சப் செயலியின் ஊடாக குழுமங்கள் அதனூடாக குறிப்புக்கள், வினாக்களை பகர்தல் மற்றும் அரட்டைகள் ஊடான தகவல் பரிமாற்றம் போன்றவை இடம்பெற முதலில் தாய் தந்தை ஊடாக அணுகும் பிள்ளைகள் மெது மெதுவாக தானும் சுயமாக கையாளத் தொடங்குகின்றது. பல வேலைப்பழுவிற்குள் அல்லாடும் பெற்றோர்கள் பிள்ளை குறிப்புத்தானே எழுதுகிறது என நினைத்து அங்கு கண்காணிப்பும் குறைகிறது. பிள்ளை குறிப்பு எழுதினாலும் இன்றைய தொழிநுட்ப (IT) உலகம் பிள்ளையை விடுவதில்லை. தனது வியாபார உத்திகளை நிமிடத்திற்கு நிமிடம் விளம்பரங்கள் வாயிலாக கொட்டிவிட அந்த விளம்பரங்களில் பல்வேறு விதமானவையும் வருகிறது. இதன் போது பிள்ளையின் ஒரு கிளிக் மூலம் அது பிள்ளைக்கு பலவற்றையும் போதிக்கிறது. பிள்ளை அடிமையாகின்றது. தொலைபேசி பிள்ளையை அதன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருகிறது. பெற்றோர்கள் கண்டிக்கும் இடத்து களவாக பயன்படுத்தத் தொடங்குகிறது. காலம் மாறி விட்டது என நினைத்து கடந்தால் நாளைய தலைமுறை கரியாகிவிடும். ஆசிரியர்களே, பெற்றோர்களே விழித்துக் கொள்ளுங்கள் அன்பார்ந்த பிள்ளைகளே கையடக்கத் தொலைபேசியை நீங்கள் தொட்டால் அது உங்களை விடாது பாழாக்கிவிடும் என்பதனையும் நினைவிருத்திக் கொள்ளுங்கள்.



**பீடை 02 :-** உங்களது உள்ளத்தின் விழிப்பற்ற தன்மையினால் துளிர்விடும் காதல் கற்பனையில் மிதக்கும் நீங்கள் பருவ வயதை அடைந்ததும் ஏன் தற்பொழுதெல்லாம் பருவமடைய முன்னரே சரி தப்பென பிரித்தறிய முடியா வயதில் சினிமா காட்டும் சினிமாவுக்கு மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சரிவரும் பள்ளிப்பருவ காதல் மீது மோகம் கொண்டு அழகினை மாத்திரம் ரசித்து சகாக்களின் உதவியோடு அலைந்து திரிந்து உங்களை கதாநாயகர்களாக நினைத்து, அகப்பட்டு தொலைபேசி வாயிலாக குறுஞ்செய்திகள் மற்றும் அழைப்புக்கள் வாயிலாக காதல் உங்களைச் சுற்றி வண்ணத்துப்பூச்சிகள் பறப்பது போல் உணர்வீர்கள். இருந்தும் அங்கு உங்களது தேவைகள் வேறாக அமைகிறது. சிறுவர்களின் நலன் கருதி இதைவிட இதனை ஆய்வு செய்ய விரும்பவில்லை தொடர்ந்து எதையும் தைரியமாக எதிர்கொள்ளும் பக்குவமற்றதாலும் ஏற்படும் தவறுகள் மற்றும் பெற்றோர்களின் கண்டிப்பு போன்றவற்றால் பயமடைந்துவிட உங்களைச் சுற்றிய வண்ணத்துப்பூச்சிகள் எல்லாம் இறந்து விடுகிறது. விளைவு காதல் தோல்வி அவ்வளவுதான். கதாநாயகர்களாக கற்பனையில் திகழ்ந்த நீங்கள் உடைந்து விடுகிறீர்கள். எனவே இவற்றில் தாங்கள் அகப்படாது உங்களை நீங்களே பகுத்தாராய்ந்து திடமான மனதுடன் இலக்கை நோக்கி உழைக்க முயலுங்கள். 10 - 11 தடவைகள் மிகவும் ஆழமாக மூச்சை உள்ளே எடுத்து மெது மெதுவாக வெளியேற்றி நிதானமாக சிந்தியுங்கள். சிறந்த முடிவைப் பெறுவீர்கள். மனித அழகு என்பது வெறுமனே என்புகளையும் உடலின் உள் உறுப்புக்களையும் மூடிய தோலிலான ஒரு போர்வை என்பதனை நினைவிருத்துங்கள்.

**பீடை 03:-** தங்களை அறியாமலே தாங்கள் சிக்கிக் கொள்ளும் போதைப்பொருள் பாவனை. வாழ்வில் துளிர் கூட விட்டிராத நீங்கள் இந்த கெட்ட பழக்கங்களிற்கு அடிமையாக காரணமிடுவது வயதை விஞ்சிய கூட்டத்தினரின் சேர்க்கை மற்றும் தீய பழக்கவழக்கங்களைக் கொண்ட நண்பர்களுடனான நட்பு. இதில் தற்பொழுது சின்னஞ் சிறுவர்களான இருபாலாரும் இவ்விடயத்திற்கு அடிமை என்பது என்னை சற்று தூக்கிவாரிப் போடுகிறது. இங்குதான் நட்பின் பலம் பற்றி பேசியாக வேண்டும். அந்த வகையில் உங்களுடைய நட்பு வட்டாரங்களை சிறப்பாக அமைத்துக் கொள்ள வேண்டும். “உயிர் காப்பான் தோழன்” என்பதனைப் போல சரியான நண்பன் தன்னையும் கெடாது உங்களையும் கெட விடாது காப்பான். ஆகவே இந்தப் போதைப்பொருள் பாவனையில் அகப்படாமல் இருக்க நான் கூறும் பலம் பொருந்திய வழி சிறந்த நட்பும் நட்பிற்கிடையிலான உண்மைப்பாடும். எனவே இவ்விடயத்தில் மிகவும் விழிப்போடு இருங்கள்.

**இறுதியாக உங்கள் சிந்தனைக்கு.........**

எழுத்துக்களோடு கூறப்படுகின்ற விடயங்களை நன்றாக கற்பனை செய்து கொண்டு வாருங்கள். அந்த வகையில் உங்களது இலக்கினை நோக்கிய பயணப்பாதையில் நீங்கள் கார் ஒன்றில் செல்கிறீர்கள் அதன் சாரதி நீங்கள்தான். பயணிகளாக பெற்றோரையும் அழைத்துச் செல்கிறீர்கள். உங்களது பயணத்தின் தொடக்கமாக உங்களுடைய பாடசாலை இருக்கின்றது.இலக்கு எங்களுடைய கிழக்குப் பல்கலைக்கழகம் என எடுத்துக் கொள்வோம். இடைப்பட்ட பயணப்பாதை உங்கள் இலக்கை அடைவதற்கான சரியான பாதை. நீங்கள் உங்கள் பெற்றோரையும் அழைத்துச் செல்லும் கார்தான் உங்களுடைய இலக்கை அடைவதற்கான “கல்வி” என்பதனையும் கற்பனை செய்து கொள்ளுங்கள். சரி இலக்கை நோக்கி பயணிக்கிறீர்கள் அதன்போது நான் மேற்கூறிய பீடைகளுக்கு அகப்படுகிறீர்கள். கவனம் சிதறுகிறது. கார் விபத்துக்குள்ளாகி விட்டது. அவ்வளவுதான். இலக்கு எங்கோ இருக்கிறது. இடைப்பட்ட பயணத்தில் உங்களையும் உங்கள் கல்வியையும் உங்களது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பெற்றோரையும் உங்களுடைய கவனச்சிதறலால் அழிக்க முயல்கிறீர்கள். இதில் இருந்து எழுவது என்பது விபத்தின் கோரத்தன்மையின் அடிப்படையிலே தீர்மானிக்க முடியும். ஆக உங்களுடைய பொறுப்புக்களையும் கடமைகளையும் உணர்வதோடு உங்களுடைய வழிதவறல் உங்களை மட்டுமல்லாமல் உங்களின் பெற்றோர்களின் அவாக்களையும் உங்களின் எதிர்காலத்தையும் சிதைத்துவிடும் என்பதனையும் மனதில் கொண்டு துணிச்சலோடு துணிந்து உம் இலக்கை முடுக்கி விடுவீராக.

"என் இளைய தலைமுறையே.....!"

- நன்றி -

ஜெயகாந்தன் ஜெனுக்ஷன்
பழைய மாணவன் (2017 O/L BATCH)
(வாழ்க்கை தொழில்சார் தொழிநுட்பவியல்
பல்கலைக்கழகம் - இரத்மலானை)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



2019ம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவின் போது.



2022ம் ஆண்டு இடம்பெற்ற முப்பெரும் விழாவின் போது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உடல் உறுப்பு கடிகாரம்

மனித உடல் கடவுளின் வியத்தகு படைப்பு. அந்த உடலைப் பற்றி நாம் அறிந்திராத பல உண்மைகளை இப்பகுதியில் காணமுடியும்.

1. மனிதனின் சராசரி நாடி துடிப்பு - நிமிடத்திற்கு 72 தடவைகள்
2. மனித உடலின் சராசரி வெப்பநிலை - 98.4°F / 36.8°C
3. மிக நீண்ட எலும்பு - தொடை எலும்பு
4. மிக சிறிய எலும்பு - நடு காதில் உள்ள பட்டையுரு (3mm)
5. எலும்புகளின் மொத்த எண்ணிக்கை - 206
6. விலா எலும்புகளின் எண்ணிக்கை - 24
7. மிக வன்மையான பகுதி - பல் மிளிரி, பல் எனாமல்
8. மிகப் பெரிய உள் உறுப்பு - கல்லீரல்
9. மிகச் சிறிய சுரப்பி - தைரோயிட்
10. மிகப் பெரிய அங்கம் - தோல்
11. உயிரற்ற கலங்களால் ஆக்கப்படாத பகுதி - நகம், மயிர்
12. முதலில் இறக்கும் பகுதி - மூளையின் கலங்கள்
13. உயிர் கலத்தில் உள்ள நிறமூர்த்தங்கள் - 23 சோடி
14. மனித குருதி வகைகள் - A,B,AB,O
15. பொது வாங்கி குருதி இனம் - $AB^-$
16. பொது வழங்கி குருதி இனம் - $O^+$
17. நாக்கில் உள்ள சுவை அரும்புகள் - 10000
18. எலும்புகளின் துணை இன்றி அசையும் தசை - நாக்கு
19. மிகப் பெரிய தசை - இதயத்தசை
20. மூட்டுக்களின் எண்ணிக்கை - 220
21. இரத்தம் செல்லாத பகுதி - கருவிழி, நகம், ரோமம்
22. உடலில் உள்ள மின்சாரத்தின் அளவு - 24W
23. நரம்புகளின் மொத்த நீளம் - 72m
24. இரத்தம் ஒரு நாளில் பயணம் செய்யும் தூரம் - 19000km
25. ஒரு நாளில் இதயம் துடிக்கும் தடவைகள் - 103680



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| வேலை நேரம் | உறுப்பு | செய்ய வேண்டியவை |
|---|---|---|
| 1. அதிகாலை 3-5 | நுரையீரல் | சுவாசப்பயிற்சி, தியானம், யோகா, காலை எழுந்தவுடன் படிப்பு |
| 2. காலை 5-7 | பெருங்குடல் | காலைக் கடன் (ஒரு செம்புத் தண்ணீர் பல் துலக்காமல் குடிக்க வேண்டும்) |
| 3. காலை 7-9 | இரைப்பை | காலை உணவு |
| 4. முற்பகல் 9-11 | மண்ணீரல் | குளிர்ச்சியானவற்றை தவிர்த்தல் |
| 5. பகல் 11-1 | இதயம் | உச்சி வெயிலைத் தவிர்க்கவும், மதிய உணவு |
| 6. பிற்பகல் 1-3 | சிறுகுடல் | குளிர்ச்சியானவற்றை தவிர்த்தல் |
| 7. மாலை 3-5 | சிறுநீர்ப்பை | பானம் / நீர் பருகுதல் |
| 8. மாலை 5-7 | சிறுநீரகம் | நடைப்பயிற்சி, விளையாட்டு (இரத்த ஓட்டத்தை சீரமைக்கும்) |
| 9. இரவு 7-9 | இதயம் | இரவு உணவு |
| 10. இரவு 9-11 | நாளமில்லா சுரப்பி | அமைதியான ஓய்வு |
| 11. நடு இரவு 11-1 | பித்தப்பை | தூங்கும் நேரம் |
| 12. பின்னிரவு 1-3 | கல்லீரல் | கண்டிப்பான ஆழ்ந்த தூக்கம் (உணவு உண்ணக் கூடாது) |

ஆரோக்கியமாக வாழ்வது நமது உணவிலும், நடத்தையிலும் மட்டுமே உள்ளது. எனவே, இதை உணர்ந்து நாம் நடந்தால் வாழ்வில் குறைவற்ற செல்வமான நோயற்ற வாழ்வை வாழமுடியும்.

அளவுக்கு மிஞ்சிய தூக்கம், தேவையற்ற பயம், அறிவு மயக்கம், ஆத்திரம், சோம்பல் என்பவற்றை எதிரியாக நினைத்து தவிர்த்தால் போதுமானது.

ஆக்கம்
ர.பிரசன்னா (விஞ்ஞான பாட ஆசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பாடசாலைக் கல்வி முறையில் பரதக்கலை



2000 ஆண்டுகளுக்கு முன் தோன்றி பாவம், இராகம், தாளம் மூன்றும் இணைந்தது பரதம் எனும் தெய்வக் கலை ஆகும். மொழி தோன்றுவதற்கு முன்பே கை அசைவுகளையும், முகபாவங்களையும் பயன்படுத்தி தன்னுடைய தேவைகளை மனிதன் பூர்த்தி செய்து கொண்டான். கலைக்கு மொழி அறியாதவனையும் மொழி அறிந்தவனோடு இணைக்கும் ஒரு பாலமாக பரதக்கலை இயங்குகிறது. இவ்வாறு பரதம் ஈழநாட்டில் பல்வேறு பகுதிகளில் பரவியதும் பாடசாலைகளையும் சென்றடைய வழியமைந்திருக்கின்றது.

அதாவது இலங்கையில் 1972ஆம் ஆண்டு இலங்கைப் பாடசாலைகளில் ஒரு பாடமாக கலைத்திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டாலும் அதன் சாத்தியத்தன்மைகள் இனங்காணப்பட்டு வெற்றிகள் மற்றும் புள்ளி விபரங்களின் அடிப்படைகளை அறிந்து மாணவர்கள் மத்தியில் கிடைத்த வரவேற்பையும் பார்த்து ஏனைய பாடசாலைகளிலும் இப் "பரதநாட்டியம்" இணைத்துக் கொள்ளப்பட்டது.

பாடசாலைகளை எடுத்துக் கொண்டால் 6 முதல் 13 வரையான தரங்களைக் கொண்ட தமிழ்மொழி மூலப் பாடசாலைகளிலேயே பரதநாட்டியக்கலை பாடமாக இணைத்துக் கொள்ளப்பட்டது. குறிப்பாக தரம் 6 முதல் 11 வரையான மாணவர்கள் விருப்புக்குரிய பாடமாகத் தெரிவு செய்யக்கூடியவாறு அழகியல் சார் தொகுதியாக இரண்டாம் தொகுதி பாடங்களுள் ஒன்றாக இணைத்துக் கொள்ளப்பட்டது. வாரம் ஒன்றில் 40 நிமிடங்கள் கொண்ட மூன்று பாட வேளைகள் கற்பிக்கப்பட்டு வருகின்றது. என்பது சிறப்பான ஒன்றாக கருதப் படுகின்றது.

மேலும் இதில் உடல் ரீதியான ஆடற் பயிற்சிகளும் மாணவர்கள் கற்பதற்கு ஏற்றவாறு பாடக் குறிப்பும் அதற்கான விளக்கங்களும் பல்கலைக்கழகம் மற்றும் கல்வியற் கல்லூரிகளில் பரதநாட்டியத்தில் பட்டம் முடித்த உரிய நடன ஆசிரியர்களால் கற்றல் மற்றும் கற்பித்தல் செயற்பாடுகளின் ஊடாக நடனபாடம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தொடர்ந்து தரம் 12 மற்றும் 13 இல் கல்வி பயில்கின்ற உயர்தர மாணவர்களுக்கும் வாரம் ஒன்றில் 40 நிமிடங்கள் கொண்ட 20 பாட வேளைகள் கற்பிக்கப்பட்டு வருகின்றன. இதிலும் பாடக்குறிப்பு பயிற்சி உள்ளடங்கி இருப்பது குறிப்பிடத்தக்கது. இதைவிட மேலதிகமாக பாடசாலை தவிர்ந்த மாலை நேரங்களிலும் சனி, ஞாயிறு தினங்களிலும் விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டு புறக்கிருத்திய செயற்பாடுகளின் ஊடாக பாடசாலைகளில் பரதக்கலை வளர்த்துச் செல்லப்படுகின்றது.

தமிழையும் கலையையும் வளர்க்கும் பொருட்டு சுவாமி விபுலானந்தரின் பிறந்த தினத்தை மையமாக வைத்து கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம், தேசியம் என்ற அடிப்படையில் தமிழ்மொழி தினமானது வெகுவிமர்சையாக போட்டிகள், விழாக்கள் வைப்பதன் மூலம் சிறப்படைகின்ற தொரு விடயமாகும். இவ்வாறு இடம்பெறும் தமிழ்மொழி தினப்போட்டிகளில் மாணவர்கள் தனிநடனம், குழுநடனம், நாட்டிய நாடகம் ஆகியவற்றில் பங்குபற்றி தமது கலை ஆர்வத்தை வெளிக் கொணர்வது குறிப்பிடத்தக்கது.

இதே போன்று அகில இலங்கை நடனப் போட்டிகள் மூலம் மாணவர்கள் தமது கலைத்திறமைகளை வெளிக்காட்டுகின்றனர். (எடுத்துக்காட்டு):-
தனிநடனம், பெண்சாஸ்திரியம், கலப்பு நடனம், சாஸ்திரியம், தனிநடனம் ஆண்கிராமியம்

அத்தோடு பாடசாலைகளில் இடம் பெறும் பாடசாலைத்தினம், ஆசிரியர்தினம், நாடகதினம், நவராத்திரிவிழா போன்ற விழாக் களின் மூலம் மாணவர்கள் பரதக்கலையினை வளர்த்தெடுப்பதற்கு சிறந்த காரணிகளாக அமைந்திருக்கின்றன.

இவற்றுக்கு மேலாக மாதம் ஒருமுறை மாணவரின் திறமைக்கு மகுடம் சூடும் நிகழ்வாக பாடசாலையில் மாணவர் மன்றம் நடைபெறும். இதன்போது மாணவர்கள் தமது பரதக்கலைசார் அழகியல் உணர்வினை வெளிப்படுத்தி தம்மை அறிமுகப்படுத்துவது குறிப்பிடத்தக்கது. இச் சந்தர்ப்பத்தில் பரதக்கலையினை ஒரு பாடமாக பயிலாத மாணவர்களுக்கும் பரத நாட்டியக்கலை மீது ஈடுபாடும் விருப்பும் அதிகரித்து பரதக்கலை வளர்ச்சி பெறும்.

பாடசாலையில் பரதநாட்டிய பாடத் தெரிவின் மூலம் மாணவர்கள் பல நன்மைகளை பெறுகின்றனர். அதாவது தங்களது உயர்கல்வி நடவடிக்கைகளுக்கான வித்தாக இப் பாடத் தெரிவு நிகழ்கிறது, பல்வகைப்பட்ட அவைக் காற்றுகை நிகழ்ச்சிகளை மேற்கொள்ளல், கலை நுணுக்கங்களை அறிந்து அதனை விபரிக்கும் ஆற்றலைப்பெறல், குழுவாக இயங்கும் பண்பை பெறல், அழகியல் நயப்புடையவராதல், படைப்பாக்கல் திறன் விருத்தி பெறல், சிறந்த நடனக் கலைஞராக மிளிர்வதற்கான ஆளுமைப் பண்புகளை வளர்த்துக் கொள்ளல் போன்ற நன்மைகளைப் பெறுகின்றனர்.

இவ்வாறு மேற்கூறப்பட்ட விடயங்களை வைத்துப் பார்க்கும் போது சிறந்த ஆளுமை யுள்ள, சமூகமயமாக்கப்பட்ட மன அழுத்தமற்ற எதிர்கால சமூகத்திற்கு தேவையான எதிர்காலத் தில் நற்பிரஜையாக வாழ்வதற்கான ஒரு வாழ்விய லை பாடசாலைக் கல்வியினூடாக பரதத்தை ஒரு பாடமாக தெரிவு செய்வோர் பெற்றுக் கொள்வர் என்பதே அறுதியான வாய்மை.

செல்வி இராசேந்திரன் வினித்தா (BFA)
(பரதம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



2022ம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவின் போது.




2022ம் ஆண்டு இடம்பெற்ற முப்பெரும் விழாவில் ஆசிரியர் கிதம் இசைக்கும் போது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 21ம் நூற்றாண்டில் கல்வித்துறையில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பத்தின் முக்கியம்

21ம் நூற்றாண்டில் கல்வித்துறையில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் பேருதவி புரிகின்றது. இதனை முறையாக பயன்படுத்துவோமானால் வாழ்நாள் முழுக்க பயன்படும் கல்வியறிவு திறமையை மாணவர்கள் எளிதாகப் பெற முடியும். குறிப்பாக கணனி மற்றும் இணையத்தளம் முறையாகப் பயன்படுத்தப்பட்டால் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இருவரும் பயன்பெறும் வாய்ப்புகள் அதிகம். இது கற்பித்தலில் ஆசிரியர்கள் மாணவர்களை மையப்படுத்தி கற்பிக்க வழிவகுக்கின்றது. பல புதிய முறைகளில் தகவலை பயன்படுத்த மாணவர்களுக்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. மனப்பாடம் செய்து படிப்பதை காட்டிலும் வாழ்க்கையில் சந்திக்கும் பிரச்சினைகளை எதிர்கொள்ளுதல், கற்றலை எளிமையாக்கல், கற்போரின் வாழ்க்கை சூழ்நிலைக்கு ஏற்ப கல்வி அமைதல் ஆகியவை சாத்தியமாகும். மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் , வல்லுனர்களிடையே அவர்களுக்குரிய இடம் தகுதியை கணிக்காமல் கலந்துரையாட ஊக்குவிக்கின்றது. பலவிதமான கலாச்சார பிரிவினரிடையே பழகுவதற்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்கின்றது. இதன்மூலம் கற்போரிடையே ஒருமித்த கருத்தும் தகவலை பரிமாற்றிக்கொள்ளும் திறனும் அதிகரிக்கின்றது. மேலும்




- ❖ பல்வேறு ஊடகங்கள் மூலம் கற்றல்
- ❖ கல்வித்தொலைக்காட்சி
- ❖ கல்வி வானொலி
- ❖ இணையதளம் மூலம் ஆலோசனை வழங்கல்
- ❖ அறிவியல் தொழிநுட்பத்தில் செயல்முறைகள்
- ❖ ஊடகங்களின் பயன்பாடு
- ❖ முதியோர்கல்வி
- ❖ பெண்கல்வி
- ❖ ஆசிரியர்கள் இலகுவான முறையில் கற்பிப்பதற்கான நுட்பங்கள்
- ❖ பாடசாலைகளை பராமரிப்பதற்கான நுட்பங்கள்

போன்ற பல்வேறு வசதிகளை தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் இத்தலைமுறை யினருக்கு வழங்குகின்றது. அத்துடன் கல்வியின் பிரதான நோக்கங்களில் ஒன்று வேலைவாய்ப்பு இன்று சகல துறைகளிலும் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் இரண்டறக்கலந்துள்ளது. ஆகவே எதிர்காலத்தில் தகவல் தொடர்பாடல் தொழிநுட்பமானது கல்வியை பெற்றுக்கொள்வதற்கும் வேலைவாய்ப்பினை பெற்றுக்கொள்வதற்கும் இன்றியமையாத ஒன்றாகும்

கோ.நவநீதன் (B.Sc)
ஆசிரியர் (ICT)
மட்/பட்/பட்டிருப்பு ம.ம.வி(தே.பா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# லைசியம் (L.E.C)

போரதீவுப்பற்று பிரதேசத்தின் காக்காச்சிவட்டை கிராமத்தின் பொக்கிசமாக சிறந்து விளங்கிவரும் லைசியம் கல்வி நிலையம் எல்லோராலும் வியந்து பார்க்கும் அளவிற்கு திகழ்கின்றது. லைசியம் கல்வி நிலையம் பல வருட காலமாக பல நற்கல்விச் சமூகங்களை உருவாக்கிய பெருமையும் சாதனைகளும் உண்டு. வறுமையின் உச்சத்தால் எத்தனையோ பிள்ளைகள் கல்வி எனும் வாழ்வை இழந்துள்ளார்கள். இக்கிராமத்தில் இக்கல்வி நிலையத்தால் கல்வி எனும் வாழ்வை இவர்களுக்கு சிறப்பான கல்வியை வழங்கும் நிலையமாக இது விளங்குகின்றது. ஒரு மனிதன் முழுமையடைய வேண்டும் என்றால் கல்வி, ஒழுக்கம் என்பன மிக முக்கியமானவை. இவை இரண்டையும் ஒரே இடத்தில் நான்கண்டு வியந்து போனது லைசியம் கல்வி நிலையத்தில் தான். இவ்வாறு கல்விக்கும் ஒழுக்கத்திற்கும் பெயர் போன ஓர் நிலையமாக இக்கல்வி நிலையம் திகழ்கின்றது.

இக்கல்வி நிலையத்தில் கற்கும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு நானும் ஒரு வரலாற்றுப்பாட ஆசிரியராக இருக்கிறேன் என்பதில் பெருமை கொள்கிறேன். வரலாறு என்பது பெயரளவில் ஒரு பாடமாக மட்டும் அமையாது. மொத்த சமூகங்களின் ஓர் இணைப்பாகவே அமையும். மாணவர்கள், கல்வி கற்க மட்டும் அல்லாது மாணவர்களை வழிப்படுத்தும் ஓர் பாடமாக வரலாறு அமைகிறது. இச்சமூக சிறுவர்களை வாழ்க்கையுடன் தொடர்புபடுத்தி ஒரு பொறுப்புமிக்க சமூகம் ஒன்றை உருவாக்க வரலாறுப் பாடம் பெரிதும் உதவுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றில் கடந்தகால நிகழ்வுகள், நினைவுகள், கண்டுபிடிப்புக்கள், சேகரிப்புக்கள், அமைப்புக்கள், அன்பளிப்புக்கள் போன்ற பல விடயங்கள் அமைகின்றன. இச்சமூக மாணவர்களுக்கு வரலாறு பாடம் என்பது மிகவும்அவசியமாக விளங்குகின்றது. ஓர் ஆளுமை உள்ள சமூகத்தை தோற்றுவிப்பது வரலாற்றுப் பாடமே என்பதில் பெருமை கொள்கிறேன்.

கல்வி என்பது எல்லா மாணவர்களையும் பல்வேறுபட்ட துறைகளிலும் பல்வேறு வளர்ச்சிகளையும் ஏற்படுத்திக் கொள்வது என்பது ஏற்றுக் கொள்ள முடியும். இருப்பினும் எல்லா மாணவர்களும் சமூகத்தின் அடிப்படை கட்டமைப்பில் தவறு இழைக்க கூடாது. இவ்வாறான அடிப்படைக் கட்டமைப்பை தெளிவாகக் கூறுவது வரலாறு பாடம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். வரலாறு ஒரு மனிதனை முழுமைப்படுத்தும். எத்தனையோ யுகங்களுக்கு முன்பு நடந்த விடயங்களை அறியச் செய்ய வரலாற்றுப் பாடமே பெரிதும் உதவுகிறது.

உலகத்தில் இடம்பெற்ற எவ்வளவோ விடயங்கள் மறைக்கப்பட்டு தெரியாமலே போயுள்ளது. இன்று இந்த நவீன உலகில் தொழினுட்பத்தின் உதவியுடன் பழங்கால வரலாறுகள் வெளிப்பட்டு வருகின்றது. என்பது மறுக்க முடியாத உண்மையாகும். பழங்கால வரலாறுகளில் இருந்தே நிகழ்கால ஒப்பீடுகள் இடம்பெற்று எதிர்காலத்தை திட்டமிட்டுக் கொள்ளக்கூடிய வகையில் வரலாறு அமைகிறது.

வரலாறு மாணவர்கள் படிப்பதற்கு மட்டுமல்ல. வரலாறு படைப்பதற்கும் பெரிதும் உதவுகின்றது. என்பதிலும் இப்பாடத்தில் நானும் ஒரு ஆசிரியர் என்பதில் பெருமை கொள்கிறேன்.

**T. Siva (BA (History))**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நான் ஒரு பறவையானால்

நேற்று மாலை பூந்தோட்டத்தில் நீர் ஊற்றிக் கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு அழகிய குருவி எங்கள் முற்றத்தின் மாமரத்தில் வந்திருந்தது. அதன் அழகு என்னைப் பெரிதும் கவர்ந்தது. அது கீ.கீ என்று கீச்சிடுவதே தனி ஆனந்தம் இதைப்போன்று நான் யாதேனும் ஒரு பறவையானால் எவ்வளவு ஆனந்த மாயிருக்கும் என்று எண்ணினேன். என் கற்பனை விரிந்தது.

நான் ஒரு பறவையானால் வான் வெளியில் சிறகுகளை அகல விரித்து ஆனந்தமாய் பறந்து செல்வேன். விரும்பிய வேளைகளில் விரும்பிய இடங்களில் அமர்வேன். எவ்வித கட்டுப்பாடும் எனக் கிருக்காது. சுதந்திரமாக எங்கும் பறந்து செல்வேன்.

உயர்ந்த மலைகள், பச்சைப் பசே லெனக் காட்சி தரும் வயல்வெளிகள், பழத் தோட்டங்கள் வானளாவிய மரங்கள் அனைத்திலும் நான் சென்று அமர்ந்து ஆனந்தமடைவேன். உணவைப் பற்றிய கவலையே எனக்கில்லை. நாளைக்கு எதை உண்போம், எதை உடுப்போம் என்று மனிதர் கள் சதா சஞ்சலப்படுகிறார்கள். பொருட் களைத் தேடிச் சேர்த்து வைக்க முயற்சிக்கின்றார்கள். பறவையாகிய எனக்கு இத்தகைய சஞ்சலம் எதுவுமேயில்லை. நாளை உணவைப் பற்றி நான் சிந்திப்பதேயில்லை. காய்கறித் தோட்டங்கள், நெல் வயல்கள், பழத்தோட்டங்கள் ஆகியனதான் எங்கும் காணப்படுகின்றன.

ஏன் நான் கவலைப்பட வேண்டும். இயற்கைக் காட்சிகளைக் கண்டு இன்புறு வேன். உறங்குவதற்கு மாடிவீடுகளோ எனக்குத் தேவையில்லை. என் சகோதரர் களுடன் உல்லாசமாக மர உச்சிக் கூடுகளில் படுத்துறங்குவேன். அதிகாலை வேளைகளில் எழும்புவேன். இதோ! மாலை வேளை யாகிறது. நான் என் கூட்டுக்குச் செல்ல வேண்டும் என் சகோதரர்கள் அதோ பறந்து வருகிறார்கள் அவர்களுடன் நானும் செல்கிறேன்.

இப்படி எண்ணியவண்ணமிருந்த என் கற்பனையை அம்மாவின் அழைப்பு இடையிற் கலைத்து விட்டது. "இதோ வருகிறேன்" என்று கூறியபடி அம்மாவிடம் ஓடினேன். நான் ஒரு பறவையாகும் ஆசைதான் நிறைவேற வில்லையே?

த.தர்மிஜன்
தரம் - 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# இந்து மதம் கண்ட அறிவியல்

பாரிலுள்ள பல மதங்களில் விஞ்ஞானத்துடன் நகமும் சதையும் போல சாலகப் பிணைப்பைக் கொண்ட ஒரே மதம் இந்து மதமாகும். இந்து மத சம்பிரதாயங்கள் ஒவ்வொன்றும் அதன் பின்னே விஞ்ஞான ரீதியான சான்றுகளைக் கொண்டிருக்கின்றன. எத்தனையோ விஞ்ஞானிகள் இந்துமத அறிவியலைப் பார்த்து வாயடைத்துப் போயுள்ளனர். அவ்வண்ணம் சிலவற்றின் இளையோடலை இங்கு நோக்குவோம்.


எமது சூரியக் குடும்பத்தில் 9 கோள்கள் என்பதும் அவை சூரியனை மையமாகக் கொண்டு சுற்றுகின்றது என்பதும் இந்துக்கள் இன்று நேற்று கண்ட உண்மையல்ல. அது எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னரே நவக்கிரக வழிபாட்டில் எடுத்துச் சொல்லப்பட்டது. அது போக ஆலய வழிபாட்டில் நடுவில் சூரியனை வைத்து அறிவியலுடன் உரசும் வண்ணம் கொள்கையை முன்வைத்துள்ளனர். மரத்திலிருந்து விழுந்த அப்பிள் பழத்தைக் கண்ட நியூற்றன் புவியீர்ப்பு விசையைக் கண்டார். ஆனால் இந்து மதத்தின் பிரஸ்ண உபநிடதம் பிராணாசக்தி, அயனாசக்தி என விளக்கியுள்ளது. இவை முறையே ஈர்ப்பு சக்தி, எதிர் ஈர்ப்பு சக்தி என்பவற்றை சுட்டுகிறது.

அதைவிட கணிதவியலிலும் இந்துமதம் பெரும் நுட்பங்களை உலகிற்கு தந்தது என்பதும் வியக்கத்தகு விடயமாகும். அந்த வகையில் செங்கோண முக்கோணிக்கான தொடர்பை முன்வைத்தவர் யார் என்றால் எல்லோரும் பைதகரஸ் என்றே கூறுவோம். ஆனால் கி.மு.2ம் ஆண்டிலேயே "ஆபஸ்தம்பர்" எனும் இந்து மனிதனால் "தீர்க்கஸ்யாஷ்ணயா ரஜ்ஜி பார்ச்வமானி" என்னும் செய்யுள் வரிகளின் மூலம் $\sqrt{2} = 1.4142156$ எனக் கணிக்கப்பட்டது. அத்துடன் கடவுள்களின் தோற்றங்களில் கூட இத்தொடர்புகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. யாகசாலைகளின் அமைப்பும் இதற்கு சான்று பகர்கின்றது. சூரியன் 7 குதிரைகளைத் தனது தேரில் பூட்டி ஓட்டினான் என்பது இந்து புராண வாசகங்கள் இயம்புகின்றன. அதுவே விஞ்ஞானத்தில் சூரியனில் இருந்து வரும் வெள்ளொளி ஏழு நிறங்களைக் கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. தொடர்ந்து சில அன்றாட சம்பிரதாயங்களில் சிலவற்றை நோக்குவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 01. நமஸ்காரம்

நமஸ்காரம் செய்வது இந்துக்களின் வழக்கம். இரு கைகளையும் ஒன்று சேர்க்கும் போது உங்களின் விரல் நுனிகள் அனைத்தும் ஒன்று சேரும். அவற்றை ஒன்றாக அழுத்தும் போது ப்ரெஷர் (Pressure) புள்ளிகள் செயல்படத் தொடங்கும். இதனால் அந்த நபரை நீண்ட நாட்கள் மறக்காமல் இருக்கச் செய்யும்.






### 02. பொட்டு வைத்தல்

ஒவ்வொரு பெண்ணும் நெற்றியில் குங்குமம் வைத்துக் கொள்வது வழக்கம். நெற்றியில்தான் ஆக்னேய சக்கரம் இருப்பதாகக் கூறப்படுகின்றது. நெற்றியில் பொட்டு வைக்கும் போது இந்தச் சக்கரம் தானாகச் செயற்படத் தொடங்கிவிடும். இது உடலில் உள்ள ஆற்றல் திறனை இழக்கவிடாமல் செய்யும். புத்தி ஒருமுனைப்படுதலை மேம்படுத்தும்.

### 03. மெட்டி அணிதல்

திருமணமான பெண்கள் மெட்டி அணிவது வெறும் அலங்காரத்திற்கு மட்டுமல்ல உடல் ஆரோக்கியத்திற்குமாகும். பெருவிரலுக்கு அடுத்த விரலில்தான் பெண்கள் மெட்டி அணிவார்கள். இந்த விரலில் இருந்து செல்லும் நரம்பு கர்ப்பப்பை மற்றும் இதயத்திற்கு நேரடியாகச் செல்கிறது. இதனால் கர்ப்பப்பை வலுவடைந்து இரத்த ஓட்டம் சீராக உதவுகின்றதுடன் குழந்தைகள் ஆரோக்கிய மாகப் பிறக்கவும் வழிகோலுகின்றது.





### 04. உணவுக்குப் பின் இனிப்பு உண்பது


இந்துக்கள் காரசாரமான பதார்த்தங்களோடு ஆரம்பிக்கும் உணவு இனிப்புப் பண்டங்களுடன் முடிவடையும். ஏனெனில் செரிமான அமைப்பு, அமிலங்களை செயல் படுத்த செய்வது காரசாரமான உணவுகள் இவற்றை இனிப்புக்கள் குறைத்திடும். அதனால் உணவின் பின் இனிப்பு உண்பதால் இரப்பையழற்சி போன்ற நோய்களைக் கட்டுப்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

### 05. கோயில் மணிகள்

கோயில் மணிகள் சாதாரண உலோகத்தில் செய்யப்படுவதில்லை. கட்மியம், நாகம், செப்பு, நிக்கல், குரோமியம் போன்ற பார உலோகங்களின் சேர்க்கையாகும். இந்த மணியை ஒலிக்கச் செய்யும் போது ஒவ்வொரு உலோகமும் வெவ்வேறு தனித்துவமான ஒலியை எழுப்பும். இது வலது, இடது மூளையை இணைக்கச் செய்வதுடன் உடலில் உள்ள ஏனைய பகுதிகளையும் தொடுவதால் மணி ஒலித்த உடனேயே மெய் மறதி நிலையை அடைந்து புத்துணர்ச்சி உண்டாகும். இது புதிய வகையான நற்சிந்தனைகளை தோற்றுவிக்க உதவுகிறது.






### 06. துளசியை வழிபடல்

துளசியை தினசரி வழிபடும் போது அதிலுள்ள கபம் பிரச்சினையைப் போக்குதல், குருதி சுத்திகரிப்பு போன்ற உயர் மருத்துவக் குணமுடையது. துளசி பெருமளவு ஒட்சிசனை வெளிப்படுத்துவதால் ஆரோக்கியத்திற்கு மிக நல்லது.

### 07. தரையில் அமர்ந்து உண்ணுவது

நாம் தரையில் அமரும் போது சுகாசன தோரணையில் அமர்கிறோம். இது செரி மானத்தை மேம்படுத்தும். வயிறு அழுத்தப் படுவதால் அதிகமாக உணவு உண்பதை இது தவிர்க்கும்.





### 08. காலையில் சூரியன் வழிபாடு


விடியற்காலையில் சூரியனை வணங்கும் வழக்கம் இந்துக்களிடம் உள்ளது. அதற்குக் காரணம் காலையில் வரும் சூரிய ஒளிகள் கண்களுக்கு மிகவும் நல்லது. அத்துடன் விற்றமின் D ஐ உடலுக்கு வழங்குகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

### 09. கைகளில் மருதாணி வைப்பது

அலங்கார காரணத்தைத் தவிர மருதாணி சக்தி வாய்ந்த மூலிகையாகும். திருமணம் என்பது பெண்களைப் பொறுத்த வரை மன அழுத்தத்தை உண்டாக்கும். குறிப்பாக மணப்பெண்ணுக்கு மருதாணி தடவிக் கொண்டால் அது நரம்புகளைக் குளிரச் செய்யும். அதனால்தான் மணப்பெண்ணின் கைகளிலும் கால்களிலும் மருதாணி தடவப்படுகிறது. அத்தோடு ஆரம்ப நிலையில் உள்ள மனநோயை (புத்திசுயாதீனம்) வராமல் தடுக்கும் ஆற்றல் மருதாணிக்கு உண்டு.





### 10. அரசமரம்

இது காற்றிலுள்ள மாசைக் குறைத்து ஒட்சிசன் அளவை அதிகப்படுத்துகிறது. ஒரு அரசமரம் ஒரு கிலோமீட்டர் பரப்பளவு வளியை சுத்தப்படுத்தவல்லது என ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. பொதுவாக அரசமரத் தோடு விநாயகர் சிலையும் பிரதிஸ்டை செய்து சுற்றும் அறிவியலும் இதுவே. ஆனால் இரவு நேரத்தில் அரச மரத்தைச் சுற்றக் கூடாது.

இவ்வாறு பல இந்துமத சம்பிரதாயங்களின் விஞ்ஞான பூர்வத் தன்மையை உணர்ந்து புதிய தலைமுறையினராகிய நாம் இவற்றைப் பின்பற்றி வாழ்வில் ஜெயம் பல பெற்று விண்மீனாய்த் திகழ்வோமாக.


தொகுப்பு - சுதாகரன் ஜனிஸ்ரன்
Faculty of Engineering
University of Moratuwa
பழைய மாணவன் (2020 O/L Batch)
லைசியம் கல்வி நிலையம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பொது அறிவு

## கணினி மென்பொருள்கள் / மொழிகள்



01. Basic (Beginners All Purpose Symbolic Instnuction Code)
இம் மொழியை ஜோன் கெம்னே மற்றும் தோமஸ் குட்ஸ் ஆகிய இருவரும் உருவாக்கினர்.

02. FORTAN (FORmula TRANslation)
முதன் முதலில் முழுமையாக உருவாக்கப்பட்ட கணினி மொழி. John Backus என்பவர் இம்மொழியை வடிவமைத்தார். இம்மொழி அறிவியல் சார் சூத்திரங்களுக்கு விடை காண்பதற்காக பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டது.

03. COBOL (common Business oriented Language)
Conference data system Language (coDASYL) என்ற அமைப்பு உருவாகியது. இது அரச மற்றும் தொழில் நிறுவனங்கள் சார் திட்டம் எழுத அதிகம் பயன்படுகிறது.

04. PASCAL
பாஸ்கலைக் கண்டுபிடித்தது நிக்கோலஸ் ரித் என்பவராவார். இதனை முதல் structured Language என்றும் கூறுவர் பிரஞ்சு கணிதமேதை Blaise pascal என்பவரின் நினைவாக அவரது பெயரில் இம்மொழி உள்ளது.

05. ALGOL (ALGorithil Language)
இம்மொழி படிமுறை தீர்வு வகையைச் சார்ந்த முதல் தலைமுறை மொழியாகும். Backus Normal Form - முறையில் உருவாக்கப்பட்டது.

06. Lisp (List Processing)
செயற்கை நுண்ணறிவு திறனின் தந்தை என்றழைக்கப்படும் John Mccarthy இம்மொழியை உருவாக்கினார்.

07. BCPL (Basic Combined Programming Language)
Martin Richards என்பவரால் 1966ம் ஆண்டு வெளியிடப்பட்டது. மொழி மாற்றிகளை உருவாக்க பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டது. இம் மொழியிலிருந்தே B,C,Ctt போன்ற பல மொழிகள் உருவாகின.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

08. B Language

BCPL ன் முதல் எழுத்தை வைத்து உருவாக்கப்பட்டது. 1969ஆம் ஆண்டு Ken Thomson என்பவரால் Bell பயிற்சிக் கூடத்தில் உருவாக்கி வெளியிடப்பட்டது. பிற்காலத்தில் இம்மொழியின் நம்பகத்தன்மை குறைந்து காணப்பட்டதால் C மொழி இதிலிருந்து உருவாக்கப்பட்டது.

09. C Language

BCPL ன் இரண்டாவது எழுத்தைக் கொண்டு Dennis Rich என்பவரால் உருவாக்கப்பட்ட இம்மொழி தற்காலத்தில் அதிகமாகப் பயன்படும் ஒரு மிகச்சிறந்த மேல்நிலை மொழியாகும்.

10. Ctt

இம்மொழி Cwith classcs என்றும் அழைக்கப்படுகிறது. இந்த நடுத்தர வகை மொழியை 1979ம் ஆண்டு Bjarhe Stroustrup என்பவர் Bell நிறுவனத்தில் உருவாக்கினார். இம்மொழியைப் பயன்படுத்தி எழுதப்படுகின்ற திட்டங்கள் மூலம் வன்பொருட்கள், இயங்கு தளங்கள் போன்றவற்றை கட்டுப்படுத்தவும் உருவாக்கவும் முடியும்.

11. C# - C Sharp

பன்முகத் திறன் கொண்ட C மொழியை அடிப்படையாக வைத்து மைக்ரோ சாப்ட் (micro soft) நிறுவனத்தால் 2000ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

12. JAVA

1995இல் James Gosling என்பவரால் sum micro system நிறுவனத்தில் உருவாக்கப்பட்ட இம்மொழியில் எழுதப்பட்ட திட்டங்களை அனைத்து வகை கணினிகளிலும் நேரடியாக நாம் பயன்படுத்தலாம்.

13. Python

பல்நோக்கு, பொதுவகையைச் சார்ந்த திறந்த மூலநிலை மொழியான இது 1991 ஆம் ஆண்டு Guido Van Rossum என்பவரால் உருவாக்கப்பட்டது.

14. Microsoft Office

Micro Soft நிறுவனத்தின் இவ்வகை மென்பொருள் windows மற்றும் Apple மக்கின் டோஷ் கணினிகளுக்காக உருவாக்கப்பட்ட ஓர் அலுவலக மென் பொருளாகும்.


ஜெ.ஜெசான்
தரம் -09


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எது முதலீடு

உங்கள் தனிப்பட்ட மற்றும் தொழில் முறை வளர்ச்சிக்கான திறன்களை மேம்படுத்திக் கொள்வது, இன்றைய வேகமான உலகில் பலதரப்பட்ட திறன்களை வளர்த்துக் கொள்வது தனிப்பட்ட மற்றும் தொழில்முறை வெற்றிக்கு முக்கியமாகும். முதலீடு என்ற உடனே அனைவருக்கும் நினைவில் வருவது பணம் மட்டும் தான். நானும் அவ்வாறு தான் நினைத்திருந்தேன். குறிப்பிட்ட காலம் எனக்கு கிடைத்த அனுபவத்தின் மூலம் விளங்கிக் கொண்டேன். எம்முடைய முதலீடு எமது தனித்திறமை மட்டுமே.

எதை நாம் முதலீடு செய்கிறோமோ அதில் இருந்துதான் எமக்கு நன்மை கிடைக்கும். குறிப்பாக ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தனிப்பட்ட வெவ்வேறான திறமைகள் இருக்கும். உதாரணமாக ஒருவருக்கு வரைதல் திறமை இருக்கும். மற்றையவர்களுக்கு வாகனம் ஓட்டுவதற்கு திறமை இருக்கும். மற்றும் ஆர்வமும் இருக்கும். இவ்வாறு பல்வேறு திறமைகள் காணப்படும் போது இந்த சமூகத்தில் தலைநிமிர்ந்து வாழும் ஆற்றலை எமக்கு எம்முடைய திறமை ஏற்படுத்திக் கொடுக்கும்.



சிறந்த கல்வி என நான் நினைப்பது விவேகானந்தர் கூறுவது போல மனிதனுடைய தனித்திறமையை வெளிக்கொண்டு வருவதே உண்மையான கல்வி. அதைத்தான் நானும் நம்புகிறேன். நாம் செய்கின்ற எந்த வேலையாக இருந்தாலும் அதனால் எமக்கு என்ன இலாபம் கிடைக்கின்றது என நாம் எதிர்பார்க்க வேண்டும். உதாரணமாக முன்னர் கூறியது போல ஓவியம் வரையும் திறன் இருந்தது என்றால் அதனை விருத்தி செய்வது எவ்வாறு, இதற்கான நேரத்தை எவ்வாறு கையாள்வது என சிந்தித்துச் செயற்பட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஓவியம் வரைதல் முறையாக ஆரம்பித்த பின் இதற்கான முதலீடாக அர்ப்பணிக்க வேண்டும். அதாவது எம்மை விட வரையவே வேறுரொருவர் இல்லை எனும் அளவிற்கு சிறப்பாக எமது செயலை செய்ய வேண்டும்.

இறுதியாக உண்மை கூற விரும்புகிறேன். எந்த வேலை செய்தாலும் எங்கே எவ்வாறு செய்கிறோம் என்பதுதான் முக்கியம். தற்போதைய நவீனமயமான உலகில் தற்போதைய நிலைக்கு ஏற்றால் போல் எமது திறன்களை விருத்தி செய்து தற்போதைய நிலைக்கு ஏற்றால் போல் புத்திசாலிகளாக சிந்தித்து செயல்பட வேண்டும்.

இந்த திறன்களை மேம்படுத்துவதால் உங்கள் தனிப்பட்ட மற்றும் தொழில்முறை வாழ்க்கையில் பெரிதும் தாக்கம் ஏற்படும். நீங்கள் ஒரு திறனில் அல்லது பல திறன்களில் கவனம் செலுத்தி சக மேம்பாட்டுக்கான உறுதிப்பாடு உங்கள் எதிர்காலத்தில் ஒரு மதிப்பு மிக்க முதலீடாக இருக்கும். எனவே வாய்ப்புகளை ஏற்றுக்கொண்டு வளங்களை தேடுங்கள் அப்போதே நாளைய சவால்களை நீங்கள் எளிதாக சமாளிக்கலாம்.

முடிந்தவரை உங்களிடம் இருக்கும் திறமையை முதலீடாக எடுத்துக் கொள்ளுங்கள். வாழ்க்கை செம்மையாகும்.

"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்"

க.கதீஸ்
பழைய மாணவர்
(2017 O/L Batch)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



2022ம் ஆண்டு முப்பெரும் விழா வரவேற்பின் போதான கோலாட்டம்.



2023ம் ஆண்டு இடம்பெற்ற முப்பெரும் விழாவின் போது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தாய் தந்தையின் சிறப்பு



தாய் இன்றி சேய் இல்லை கடல் இன்றி புனல் இல்லை
தந்தை இன்றி கந்தை இல்லை பார் இன்றி உயிர் இல்லை
வயல் இன்றி நெல் இல்லை குரு இன்றி கல்வி இல்லை
பொன் முத்துக்களை என் சொத்தாக வழங்கிய பதிக்கு
என் கவி வணக்கம்

குருதியால் பாலூட்டி சுருதியால் தாலாட்டி
நதியிலே நீராட்டி மதிகாட்டி உணவூட்டி
வியர்வையைக் கயிறாக்கி தொட்டிலில் உறக்கமூட்டி
என்னை பூவாக வளர்த்த தாய் தந்தையே வாழ்க.

கஷ்டத்தால் நொந்தாலும் நஸ்டத்தால் வெந்தாலும்
நோயென்று மொழிந்தால் தாங்குவாள் முன்நின்று
தாயிடம் இருந்து வந்ததே பாடும் திறன்
தந்தையிடம் இருந்து வந்ததே தேடும் திறன்

முத்தமிழிலும் விளங்குவாள் சிறந்து
தண்மதிபோல் துலங்குவாள் நிறைந்து
செழித்திருக்கும் பிதாமுகம் நெற்பயிர்போல்
வெளித்திருக்கும் அவர் அகம் வெண் தயிர் போல்

ஊரும் ஆறும் தூங்கினாலும் கண் விழித்திருந்து காப்பாள் தாய் ஒருத்தி
பேரும் புகழும் ஓங்கினாலும் மேல் ஊக்கமூட்டுவாள் தாய் இருத்தி
பாரும் விண்ணும் தூற்றினாலும் தளராமல் தேற்றுவார் நலன் கருதி
கல்விக்கு வித்திடும் தாய் தந்தைப் பரம் பொருளை வாழ்த்துவேன் சிரம் தாழ்த்தி

த. ஜதர்ஷனா
தரம் - 08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# நீதான் உனக்கு எதிரி

உலகிலுள்ள நம் அனைவரின் வாழ்க்கையில் பல சவால்கள் தடைகள் மற்றும் போராட்டங்கள் உள்ளன. அதனால் பல நேரங்களில் நம் எதிரிகள் வெளியிலே இருக்கிறார்கள் என்று நம்புகின்றோம். ஆனால் உண்மையில் நமக்குள்ளேயே ஒரு மிகப்பெரிய எதிரி உள்ளது அதுதான் நமது மனம். அதாவது நம் மனதிலேயே அனைத்துப் போராட்டங்களும் நடக்கின்றன. எனவே நம்முடைய எண்ணங்கள் உணர்வுகள் மற்றும் தேவையைப் புரிந்து கொள்ளாவிட்டால் நம் வாழ்வில் எப்பொழுதும் போராட்டம் தான்.

நாம் தன்னைத்தான் பல நேரங்களில் அடக்கிக்கொள்கின்றோம் நம்முடைய ஆழமான பயம், தன்நம்பிக்கையின்மை, சந்தேகம் மற்றும் சோம்பல் போன்றவை நம்மை முன்னேற விடாமல் தடுத்துக் கொள்கின்றன. இதற்காகவே ஒருவர் தன்னுடைய உள்ளார்வத்தை மதிக்காமல், குறைகளை மட்டும் நம்பும்போது அவன் தன்னைத்தான் எதிரியாக மாற்றிக் கொள்கின்றான்.

உதாரணமாக ஏதாவது புதிய முற்சியில் தோல்வி அடைந்தால் “இதைப்போல் தான் என்னால் முடியாது” என்று நாமே நமது திறமைகளை குறைத்து மதிப்பிடுகின்றோம். இது நமக்குள் நம்மை நாம் வீழ்த்துகிற ஒரு விடயமாகும். அதுபோல் நாம் எதையாவது முயற்சி செய்ய நினைத்தால் முயற்சிக்குள் தோல்வி வரும் என்பதால் முயற்சிக்கவே தயங்கி அதற்குள் பயத்தை வளர்த்து நம்மை நாமே


Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

பின்னோக்கி இழுக்கின்றோம்.

அது மட்டுமல்ல, நமது திறமைகளை வளர்த்துக் கொள்வதில் சோம்பல் தனத்தைக் காட்டுகின்றோம். ஆகவே, நம்முடைய தனித்தன்மையை உணராமல் பிறரின் கருத்துக்களை நம்பி, நம்முடைய வளர்ச்சிக்கு தடையாக நாமே இருக்கின்றோம். எனவே இந்நிலையை மாற்ற நாமே நமக்குள் மாற்றம் கொண்டுவர வேண்டும்.

அதாவது, நமக்குள் உள்ள எதிரியை வெல்வதற்கான முதற்படி தன்னம்பிக்கை. ஆகவே நாம் நமது திறன்கள், சிந்தனைகள் மற்றும் திறமைகள்மேல் நம்பிக்கையுடன் இருத்தல் வேண்டும்.

தோல்விகள் நம்மை நெகிழாமல் அதை ஒரு பாடமாகவே எடுத்துக் கொள்ள வேண்டும். அடுத்து பயத்தை எதிர்கொள்ள வேண்டும். நாம் ஏதாவது செய்ய பயப்படுகின்றோம் என்றால் அதை எதிர்கொண்டு அதற்கு தீர்வுகளை தேட வேண்டும். மற்றும் முயற்சி நம் சோம்பலை



வெல்வதற்கான முக்கியமான ஆயுதமாகும். எதையும் முயன்று பார்த்தால் மட்டுமே அதன் முடிவை நம்மால் உணரமுடியும்.

எனவே நம்மையே நம் எதிரியாக எண்ணாமல் நமது எண்ணங்கள் உணர்வுகள் மற்றும் தேவைகளைப் புரிந்து சிறந்த வாழ்வை வாழ்ந்திடுங்கள்.

பழைய மாணவர்
By : கிருசனா K.
(2016 O/L BATCH)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அவனுக்கே அவன் அந்நியமானவன்

**வ**குப்பறையின் புழுக்கத்தில்
புழுங்கிப் புழுங்கிப் பாடசாலை
மாணவர்களின் நுரையீரல்
வெந்து விட்டது.

பாடசாலை செல்லும் சிறுவன்
ஒவ்வொரு விடியலிலும் தான்
நாடு கடத்தப்படுவதாய்
நசிந்து போகிறான்.

பாலகர்கள் சிலேட்டின்
ஒரு பக்கத்தை எச்சிலாலும்
மறுபக்கத்தை கண்ணீராலும்
துடைத்தழிக்கிறார்கள்

அந்தச் சிறு பறவைகளின்
இறகுகளை கொள்ளிக்
கட்டைகளாலா கோதி
விடுவது?

எழுத்துக்களின் ஊர்வலத்தில்
அவர்கள் காணாமல்
போனார்கள்

அவர்களோடு சேர்ந்து
துக்கம் கொண்டாடத்தான்
வகுப்பறைகளின் சுவர்கள்
கரும்பலகையை நெஞ்சில்
நிரந்தரமாய் அணிந்தனவோ?

அவர்கள் மூளையில்
விதையைப்போல்
தூவப்பட வேண்டிய அறிவு
ஆணியைப்போல்
அறையப் படுகிறது.

இந்த இள மூங்கில்களை
ஐந்திலேயே வளைக்க
ஆசைப்பட்டார்கள்

பல்கலைக் கழகமோ
பள்ளிக் கூடங்கள் தயாரித்துத் தரும்
சல்லடைகளில்
ஓடங்கள் செய்வதால்
உத்தரவாதம் செய்கிறது

பட்டதாரி ஒருவன்
கேட்கிறான்
“ஆயிரம் அட்சரங்கள் கற்று
ஆவதென்ன?”
வாழ்க்கைப் புத்தகத்தை
படிக்கமுடியவில்லையே...

இவ்வாறே அவனுக்கே
அவன் அந்நியமாகிறான்
அவனது மாணவப் பருவம்
ஒரு கடன் வாங்கிய
வசந்தம்

படை வீரர்களைப்
படைக்க வேண்டிய கல்வி
நடை நோயாளிகளைத்
தயாரித்தது

“பிச்சை புகினும் கற்கை நன்றாம்
கற்ற பின்னும்பிச்சை புகலும் நன்றோ....?”

ஆடம்பர அவசரத்தில்
புல்லாங்குழலைப் பொன்னில்
செய்து விடாதீர்கள்
அது மூங்கிலாகவே இருக்கட்டும்

ப. கபிஷன்
தரம் - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தாய்மையின் உயர்வு



ஓர் பசுமை நிறைந்த அடர்ந்த காடு அக்காட்டிலே பல மிருகங்கள் இருந்தன. அங்கே பிறந்த இந்த முயற்குட்டி தாயின் அன்பை புரியாமல் இருந்தது.

ஒரு நாள் தாய் முயல், குட்டி முயலை அழைத்துக் கொண்டு காட்டை சுற்றிக்காட்டி இங்குள்ள ஆபத்துக்கள் பற்றி கூறி வந்தது. வரும் பொழுது அந்த குறும்பான குட்டி முயல் அந்தக் காட்டில் ஓட நினைத்தது, ஓடியது. ஆனால் அந்த முயல் குட்டி ஓடத்தான் ஆசைப் பட்டதே தவிர அதற்கு வரும் ஆபத்துக்களை அறிந்திருக்க முடியவில்லை. பாவம் அந்தக் குட்டி முயல் ஒரு பெரிய பள்ளத்தாக்குள் விழுந்து விட்டது. அங்கே இருந்த தாயின் நெஞ்சு பதை பதைத்துப் போனது. உடனே தன் குட்டியை வெளியே எடுக்க அங்கேயும் இங்கேயும் ஓடியது. அதன் பின் ஒரு உயிருள்ள கொடி ஒன்றை எடுத்து வந்து முயல் குட்டியிடம் போட்டது. முயல் குட்டியும் அதை மிகவும் பத்திரமாக பிடித்துக் கொண்டது. ஆனால் அந்தோ பரிதாபம்.....! அந்த தாய் முயலின் கொடி அறுந்து விடவே, தாய் முயலுக்குப் பின்னே இருந்த மரத்தில் அதன் முழு உடலும் மோதுப்பட்டது. அதற்கு வலி பொறுக்க முடியவில்லை. ஆனாலும் அது தன் வலியை பொறுத்துக் கொண்டு குட்டியை வந்து பார்த்தது. குட்டியோ வேதனையால் துடித்துக் கொண்டிருந்தது. அதைப் பார்க்க பொறுக்காத தாய் முயல் ஈரவிழி சொரிய மனதில் பொறுக்க முடியாத வேதனையுடன் மீண்டும் மீண்டும் முயற்சி செய்தது. முடியவில்லை. மனம் பொறுக்காமல் 'ஓ'வென்று வாய்விட்டு அழத்தொடங்கவிட்டது. பாவம் அது என்ன செய்யும். பின் முயற்சியை கைவிடாமல் தொடர்ந்தது.

கடைசியில் தான் இறந்தாலும் பரவாயில்லை தன் குட்டியை காப்பாற்ற வேண்டுமென்று முடிவு செய்தது. பள்ளத்தாக்கின் தொடக்கத்தில் தன் கூர்மையான நகங்களால் பிடித்துக் கொண்டு உடலை உள்ளே விட்டு குட்டியை மேலேற சொன்னது. தனது உடம்பினால் குட்டியும் எப்படியோ அரும் பாடுபட்டு ஏறியது. அடுத்த நிமிடமே அந்தோ பரிதாபத்தில் குட்டியை காப்பாற்ற தன் உயிரை விட்டது போல குட்டி மேலே ஏற மண்ணில் இருந்த கைகள் வழுக்கி மண்ணையும் இழுத்துக் கொண்டு பள்ளத் தாக்குக்குள் விழுந்தது. தாயின் குறிக்கோள் என்னவென்றால் தனது இருப்பிடத்திற்கு குட்டியை அனுப்பிவிட வேண்டும் என்பதே ஆகும். அப்பொழுது கூட தன் உயிரைப் பற்றிக் கவலைப்படாமல் தன் குட்டியை பெரிதாக நினைத்தது இதுதான் உண்மையான தாய். அது அதன் குட்டியிடம் சொன்னது நீ இங்கே இருப்பது உனக்கு ஆபத்தை ஏற்படுத்தும். அதனால் நீ நம் இருப்பிடத்திற்கு சென்று விடு என்று கூறியது. ஆனால் அந்த முயல் குட்டியோ தன்னைக் காப்பாற்ற உயிரைப் பணயம் வைத்த தாயை நான் காப்பாற்ற மாட்டேனா என்று ஒரு கணம் யோசித்தது. தன் தாயை வெளியே எடுக்க வேண்டும் என்பதை ஒரு சவாலாக எடுத்துக் கொண்டது. உடனே அதற்குத் தெரிந்த நண்பர்கள் பலரிடம் ஓடியது. ஒருவரும் உதவிக்கு வரவில்லை. ஆனால் மனம் தளராமல் தானே முடிவு செய்து நான் சாதிப்பேன் என்ற திடமான முடிவுடன் தாயை வெளியே எடுக்க அழுது அழுது வேதனைப்பட்டு ஓடியது. அதில் வெற்றியும் கண்டது. அன்றே அது தாய்மையின் உயர்வைப்பற்றி அறிந்து கொண்டது. நானும் எனது தாய் எனக்காக எவ்வளவு கஷ்டப்படுகின்றாள் என்பதை அறிந்து மனம் மகிழ்ந்து வாழுகின்றேன். அப்படியென்றால் நீங்கள்.......

த. ஸஜிமிதன்

தரம் - 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




கிராமப்புறத்தை பொறுத்தவரையில் பல்கலைக்கழகம் என்ற பதம் ஒரு தனிப்பட்ட நபரை மட்டுமல்ல ஒரு குடும்பத்தையும் கூட தலைநிமிர வைக்க செய்யும். இதற்கான காரணம் பல்கலைக்கழகத்தின் மதிப்பு அறிந்ததாலோ, அல்லது எளிதில் நுழைவுக்கான அனுமதி கிடைப்பதில்லை என்பதாலோ தெரியவில்லை. எவ்வாறாக இருந்தாலும் இவை இரண்டுமே ஏற்றுக்கொள்ளத்தக்க காரணங்கள் தான்.

நகர்ப்புறங்களில் பயிலும் மாணவர்கள் கூட தான் பல்கலைக்கழகங்களுக்குச் செல்கிறார்கள். இருப்பினும் கிராமப் புறங்களில் இருந்து செல்லும் மாணவர்களுக்கு பெருமை கொஞ்சம் அதிகம்தான். இந்த மதிப்பு கிராமத்திற்கும் நகரத்திற்கும் உள்ள இடைவெளிகளை குறைப்பதோடு சமூகமொன்றின் வளர்ச்சிக்கும் அடித்தளமிடுகின்றது.மேலும் எந்தவொரு சமூகமும் மரியாதை மற்றும் தன்னடக்கமுள்ளதாகவும் உருவாகின்றது.

பல்கலைக்கழக வாழ்க்கை என்பது ஒரு மாணவரின் கல்விப் பயணத்தில் மட்டுமல்லாது வாழ்க்கைப் பயணத்திலும் முக்கிய கட்டமொன்றாகும். இது தனிமனிதரின் எதிர்கால தொழில் மற்றும் இலக்கை அடையவும் கல்வி சுயமேம்பாட்டிற்கான ஒரு மேடையாகவும் தனித்திறன்களை துல்லியமாக அடையாளம் கண்டு சுய நம்பிக்கையை வலுப்படுத்தும் ஒரு இடமாகவும் உள்ளது.

பல்கலைக்கழக வாழ்க்கையின் சிறப்பில் ஒன்று பல்வேறு பின்புல மற்றும் பல்கலாசாரங்களையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பின்பற்றும் மாணவர்களுடன் பழகும் வாய்ப்பு கிடைப்பது. இது பிற கலாசாரத்தை மதிக்கவும், விளங்கிக் கொள்ளவும், சக மனிதர்களின் உணர்வுகளை புரிந்து கொள்ளவும், விதவிதமான செயல்களை பகிர்ந்து கொள்ளவும் வாய்பாக அமையும். பல்கலைக்கழக நண்பர்கள் வாழ்நாட்களில் பல தருணங்களில் துணையாக அமைகிறார்கள். அனுபவம் வரும் வயதில் கிடைக்கும் நண்பர்களே சிக்கலான தருணங்களில் கூட துணைநிற்பவர்களாக இருப்பார்கள் என்பது சிறப்பம்சமாகும்.

இக்கலைக்கழகத்தில் உணர்த்தும் பொறுப்புணர்ச்சி என்பது மாணவர்களின் தனிப்பட்ட மற்றும் சமூக வளர்ச்சிக்கு முக்கியமானது. இது பல்வேறு சமூக அறிவியல் விளக்கங்களை வழங்கி சமூகத்துடன் எவ்வாறு ஒத்து செயற்பட வேண்டும் என்பதற்கான தைரியத்தை வழங்குகிறது. அத்துடன் திட்டமிட்டு பணிபுரிவது எவ்வளவு முக்கியம் என்பதை நன்கு உணர செய்கிறது. இவ்வாறான தைரியம் மற்றும் பொறுப்புணர்ச்சி உள்ள மனிதர்களை முன்னோடியாக கொண்ட சமூகம் ஒரு போதும் தாழ்ந்து போவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழகங்கள் மாணவர்களின் தேடுதல் பொறியாகவும் செயற்படுகின்றன. மாணவர்கள் தங்கள் கற்றலில் மென்மேலும் நிபுணத்துவம் பெற பல்வேறு வகையான ஆய்வாராய்ச்சிகளை மேற்கொள்கிறார்கள். பல்வேறு கேள்விகளை எழுப்புகிறார்கள் இதற்கான பதில்களையும் அங்கிருந்தே பெற்றுக் கொள்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் பல்கலைக்கழகங்கள் தேடுதல் பொறியாகின்றன. இதற்கு துணையாக அமைவது தொழிநுட்பமாகும். இத்தொழிநுட்ப பிரயோகத்தினால் உலகளாவிய ரீதியில் மாணவர்கள் அனுபவ சாலியாகிறார்கள்.

இறுதியாக பன்னிரண்டு வருட பாடசாலை கல்வியும் சிலவருடங்களான பல்கலைக்கழக அனுபவ கல்வியும் நிறைவு பெற்றதன் அடையாளமாக களிப்புடன் பட்டமொன்றை கையில் பெற்றுக் கொள்கிறோம். இது இத்தனை வருட கல்விக்கும் ஆதாரமாக அமைகிறது. இந்த பட்டமளிப்பு. மொத்தத்தில் வாழ்க்கையின் அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளும் முதல் களமாக காணப்படும். எனவே பல்கலைக்கழகம் ஒரு அனுபவத் தொகுப்பாகும்.

பல்கலைக்கழக வாழ்க்கையில் ஒவ்வொரு கட்டமும் மாணவர்களுக்கு அனுபவம், பொறுப்புணர்ச்சி, அறிவு, நட்பு, தொழிநுட்ப பிரயோகம் மற்றும் சமூக உறவுகளை பெருக்கி கொடுப்பது மட்டுமல்லாது, ஒரு முழுமையான மனிதனாகவும் உணரச் செய்கிறது. இது மாணவர்களின் அறிவாற்றல் மற்றும் வாழ்க்கைத் திறன்களையும் மேம்படுத்தும் அரிய வாய்ப்பொன்றாகும்.

கு. அனுஷாயினி
பழைய மாணவர்.
(2020 O/L BATCH)



Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media



# சர்வதேச கிரிக்கெட்

01) கிரிக்கெட் முதன்முதலாக விளையாடப்பட்ட நாடு எது?
இங்கிலாந்து

02) கிரிக்கெட்போட்டியில் ஒரு அணியில் எத்தனை வீரர்கள் விளையாடுவார்கள்?
பதினொரு வீரர்கள்

03) கிரிக்கெட்டினை தேசிய விளையாட்டாக கொண்ட நாடு எது?
இங்கிலாந்து

04) சர்வதேசரீதியில் கிரிக்கெட் விளையாட்டினை நெறிப்படுத்துவதற்காக உள்ள அமைப்பு எது?
பன்நாட்டுதுடுப்பாட்ட அவை (ICC)

05) பன்நாட்டு துடுப்பாட்ட அவையின் தலைமையகம் எங்கு அமைந்துள்ளது?
துபாய் (ஐக்கிய அரபு அமிரகம்)

06) சர்வதேச அளவில் கிரிக்கெட் விளையாடப்படும் மூன்று பிரதான வடிவங்கள் எவை?
டெஸ்ட் போட்டிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஒருநாள் சர்வேதச போட்டிகள்
இருபதுக்கு இருபது போட்டிகள்

07) ஒருநாள் சர்வதேச உலகக்கிண்ணப் போட்டிகள் எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை இடம்பெறும்?

நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை

08) ஆடவருக்கான முதலாவது ஒருநாள் சர்வதேச (ODI) உலகக்கிண்ணத்தை கைப்பற்றிய அணி எது?

மேற்கிந்திய தீவுகள் (1975)

09) 2023ம் ஆண்டு இடம்பெற்ற ஆடவருக்கான ஒருநாள் சர்வதேச உலகக்கிண்ணத்தை கைப்பற்றிய அணி எது?

அவுஸ்ரேலியா

10) ஆடவருக்கான முதலாவது இருபதுக்கு இருபது உலகக்கிண்ணத்தை கைப்பற்றிய அணி எது? அப்போதைய அந்த அணித்தலைவர் யார்?

இந்தியா
மஹேந்திர சிங் தோனி

11) 2024ம் ஆண்டு இடம்பெற்ற ஆடவருக்கான இருபதுக்குஇருபது உலகக்கிண்ணத்தை சுவீகரித்த அணி எது?

இந்தியா

12) ஒருநாள் சர்வதேச கிரிக்கெட்டில் ஒரு போட்டியில் துடுப்பாட்ட வீரரொருவர் பெற்றுக்கொண்ட அதிகபட்ச தனிநபர் ஓட்டங்கள் எத்தனை? அச்சாதனையை நிலைநாட்டிய வீரர் யார்?

264 ஓட்டங்கள்
ரோஹித் சர்மா (இந்தியா)

13) டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்திய வீரர் யார்?

முத்தையா முரளிதரன் 800 விக்கெட்டுக்கள் (இலங்கை)

14) சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் நூறு சதங்களை கடந்த முதல் வீரர் யார்?

சச்சின் டெண்டுல்கர் (இந்தியா)

15) சர்வதேச ஒருநாள் (ODI) போட்டிகளில் அதிகபடியான நூறு ஓட்டங்களை (சதம்) கடந்த வீரர் யார்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

விராட் கோலி (இந்தியா)

16) இலங்கை அணி ஒருநாள் சர்வதேச (ODI) உலகக்கிண்ணத்தை கைப்பற்றிய ஆண்டு எது? அப்போதைய அணித்தலைவர் யார்?

1996ம் ஆண்டு

அர்ஜீன ரனதுங்க

17) 2014ம் ஆண்டு இருபதுக்குஇருபது உலகக்கிண்ணத்தை கைப்பற்றிய அணி எது? அப்போதைய அந்த அணித்தலைவர் யார்?

இலங்கை

லசித் மலிங்க

18) சர்வதேச உலகக்கிண்ணப்போட்டிகளில் அதிகளவான உலகக்கிண்ணங்களை தன்வசப்படுத்தியுள்ள நாடு எது?

அவுஸ்ரேலியா

19) 2026ம் ஆண்டு இடம்பெறவுள்ள ஆடவருக்கான இருபதுக்குஇருபது உலகக்கிண்ணப்போட்டிகள் நடைபெறவுள்ள நாடுகள் எவை?

இந்தியா

இலங்கை

20) ஆண்களுக்கான ஏசஸ் (Asses) டெஸ்ட் கிறிக்கெட் தொடர் எந்த அணிகளுக்கிடையில் நடாத்தப்படுகிறது?

அவுஸ்ரேலியாவிற்கும் இங்கிலாந்திற்கும்

ஆக்கம் - T. Lakshmapriyan
தி. லக்ஷ்மபிரியன்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



2023ம் ஆண்டு இடம்பெற்ற முப்பெரும் விழாவின் போது.



2024ம் ஆண்டு கல்வி நிலைய 13வது பிறந்த நாள் கொண்டாட்டத்தின் போது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# லைசியத்தின் கனவுக் கவிகள்



காக்காச்சிவட்டையின் கனவுகள் மன்றம்
லைசியம் கல்வி நிலையம் வளர்ந்திருக்கும் சிகரம்
அறிவின் சுகம் இங்கு நம்மைச் சூழ்கின்ற ஒளி
கற்பித்தல் மூலம் மணம் பரப்பும் அழகிய கவி

காக்காச்சிவட்டையின் மண்ணில் பூத்த செல்வம்
கலையிலும் அறிவிலும் இளம் மனங்கள் தழைக்கும்
சிந்தனை ஒளிரும் கனவுகள் இங்கு மலர்கின்றன
எழுத்தின் உயிரில் நம் மண் புதுப்பூமியாக மாறும்

புது அனுபவங்கள் தோழமையின் இசையில்
சிரித்துப் பேசிக்கொண்டு நம் உறவுகள் சூழ்ந்துள்ள வேளை
புத்தி பரவசமாக உயரம் நோக்கி செல்கின்றோம்
வெற்றியின் பாதையில் லைசியம் நம் அடையாளம்

ஒவ்வொரு தருணமும் ஒரு புதிய அத்தியாயம்
அறிவின் அலைகள் நம்மை முன்னேற்றுகின்றன
லைசியம் கல்வி நிலையம் நம் வாழ்வின்
கனவுகளின் நிலவே

இன்னும் உயரங்களைக் காண உறுதியுடன் நாமே
எண்ணங்களை விளக்கேற்றி வெற்றியை தொட்டுப்பார்ப்போம்
கற்கும் பயணத்தில் நம் கனவுகள் கலைநயமாய்
உயரம் கொண்டு எங்கும் விளங்க லைசியம் வெற்றிப்படியாக அமையட்டும்

ச.டிலக்சன்
பழைய மாணவர்
(2017 O/L Batch)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# என் இளமை பொற்காலம்

தாயின் கருவறை மாளிகையில் – நான்
வசித்து வந்தேன் – அங்கே
தொப்பிள் கொடி மூலம் உதிரத்தை
பாலாய் குடித்து வந்தேன் – பின்
புதிய உலகைக் கண்டு மழலை
மொழி பேசி வளர்ந்து
பாலர் பாடசாலை சென்று
பாடல்கள் பல படித்து மகிழ்ந்து
துள்ளி விளையாடியதும் – ஓர் பொற்காலம்
பாடசாலை சென்று பண்புடன் பயின்று
நண்பர்களுடன் குறும்புத் தனம் செய்வது ஓர் பொற்காலம்
மீண்டும் மீண்டும் கிடைக்காத காலந்தான் பள்ளிக் காலம்

அன்னையிடம் இருந்து அன்பு பெற்று
தந்தையிடம் இருந்து அறிவு பெற்று
ஆசிரியரிடம் இருந்து கல்வி பயின்று
முதியோரிடமிருந்து ஆசி பெற்று
பரீட்சையில் சித்தி பெற்று
போட்டியில் வெற்றி பெற்று
இறைவனிடம் இருந்து அருள் பெற்று
மேற்கல்வியை தொடர மீண்டும் கிடைக்கட்டும்
என் இளமைப் பொற்காலம்.........

சுப்பிரமணியம் - டஷாந்
தரம் - 5
மட்/ பட்/ஆனைகட்டியவெளி
நாமகள் வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக மற்றும் குடும்ப சீர்கேடுகளால் மாணவர் மனநிலையின் சீரழிவுகள் மற்றும் எதிர் கொள்ளும் சவால்கள்

மாணவர்களின் வாழ்க்கையில் சமூக மற்றும் குடும்ப சூழல்கள் முக்கியமான பங்கு வகிக்கின்றன. சமூக பாதிப்புகளும் குடும்ப சீர்கேடுகளும் மாணவர்களின் வளர்ச்சிக்கும் மனநிலைக்கும் பெரும் சவால்களை உருவாக்குகின்றன. இந்த பிரச்சினைகள் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தையும் மன நலத்தையும் பாதிக்கின்றன. சீர்கேடுகளின் தாக்கங்கள் பலருக்கும் ஆழமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. மேலும் இது ஒரு நுட்பமான பிரச்சினையாக மாறியுள்ளது.



## சமூக சீர்கேடுகள் மற்றும் மாணவர்களின் சவால்கள்

### 1. பட்டினியுடன் வாழும் சமூகம்

பல மாணவர்கள் பொருளாதார பின்னடைவுடன் கூடிய குடும்பங்களில் வாழ்கின்றனர். இந்த குடும்பங்களின் பொருளாதார நிலை மாணவர்களுக்கு கல்விக்கான ஆதரவை வழங்குவதில் சிக்கல்களை உருவாக்குகின்றது. உதாரணமாக ஒவ்வொரு நாளும் தக்க உணவின்மையால் பாதிக்கப்படும் மாணவர்கள் தங்கள் கல்வியில் கவனம் செலுத்துவதில் சிரமப்படுகின்றனர்.

### 2. சமூகத்தில் நிலவும் வன்முறைகள்

சமுதாயங்களில் நடந்துவரும் வன்முறைச்சம்பவங்கள் மாணவர்களின் மனநிலையை பெரிதும் பாதிக்கின்றன. மாணவர்கள் சமூகத்திடம் நம்பிக்கை இழப்பதற்கான சூழல் உருவாகின்றது. மேலும் இது அவர்களின் ஆற்றல் மற்றும் உற்சாகத்தை குறைக்கின்றது. சமுதாயத்தில் நிலவும் கும்பல் கலாசாரம், வன்முறைத்தாக்கங்கள் மாணவர்களை பயத்திலும் அமைதியின்மையிலும் ஆழ்த்துகின்றன.

### 3. போதைப்பொருள் பாதிப்பு

சமுதாயத்தில் போதைப் பொருளின் பரவல் மாணவர்களிடையே விபரீதத் தாக்கங்களை ஏற்படுத்துகிறது. இந்த பொருட்களின் பயன்பாடு மாணவர்களை கல்வியில் இருந்து விலகச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

செய்கின்றது. மேலும் மனநல பிரச்சினைகளையும் உடல்நலக்குறைகளையும் உருவாக்குவதுடன் சமூக அசம்பாவிதங்கள் மற்றும் சட்டப்பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றது.

## குடும்ப சீர்கேடுகள் மற்றும் மாணவர்களின் மனநிலைச் சவால்கள்

### 1. குடும்பம் - வறுமை, பிளவுகள், விவாகரத்து

குடும்பத்தில் நடந்துவரும் பொருளாதாரப் பின்னடைவுகள் மற்றும் விவாகரத்து போன்ற பிரச்சினைகள் மாணவர்களின் மனநிலையை ஆழமாக பாதிக்கின்றன. பெற்றோர்கள் விவாகரத்துச் செய்யும் சூழலில், குழந்தைகள் மன உளைச்சலில் ஆழ்கின்றனர். இந்த மனநிலைக் குழப்பம் அவர்களின் கல்வி செயற்பாட்டில் பின்வாங்கல்களை உருவாக்குகிறது. குடும்பத்தில் நிகழும் பொருளாதார நெருக்கடியும் இதே போன்ற சவால்களை ஏற்படுத்துகின்றது.

### 2. ஆசையற்ற பெற்றோர்கள் அல்லது ஆதரவு இன்மை

பெற்றோர்களின் ஆதரவு இல்லாத சூழலில் மாணவர்கள் தனிமையில் ஆழ்கின்றனர். பெற்றோர்கள் அல்லது கவனதாரர்கள் மனநல ஆதரவை வழங்காத போது மாணவர்கள் தங்களுடைய மனஉறுதியை இழந்து விடுகின்றனர். இதனால் கல்வியில் ஆர்வம் குறைவதோடு தங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள் குறித்து யாரிடமும் பகிர முடியாமல் தனிமையில் வாடுகிறார்கள்.

### 3. குடும்பத்தில் வன்முறைகள்

குடும்பத்தில் சொல் வன்முறையோ அல்லது உடல் வன்முறையோ நடைபெறும் போது மாணவர்கள் மனஉளச்சலுக்குள்ளாகின்றனர். இது மாணவர்களின் உளவியல் ஆரோக்கியத்தை பாதித்து, தன்னம்பிக்கையின்மையுடன் வாழ்ந்து கல்வியில் பின்தங்க வைக்கிறது.

## மாணவர்களின் கல்வி மற்றும் மனநிலையில் ஏற்படும் தாக்கங்கள்

### 1. மனநலச்சிக்கல்கள்

சமூக மற்றும் குடும்ப சீர்கேடுகளின் தாக்கம் மாணவர்களின் மனநலத்தில் விரைவான மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. மனஅழுத்தம், கவலையுணர்வு, மனமுடைவு போன்ற உளவியல் சிக்கல்கள் அதிகரிக்கின்றன. இதனால் அவர்கள் கல்வியில் எதிர்பார்த்த படியான முன்னேற்றத்தை அடைய முடியாத சூழல் உருவாகின்றது.

### 2. கல்வியில் பின்தங்கல்

சமூக அல்லது குடும்ப சீர்கேடுகளால் மாணவர்கள் தங்கள் கல்வியில் கவனம் செலுத்த முடியாத நிலைமை உருவாகிறது. பரீட்சைகளில் குறைந்த மதிப்பெண்கள் பெறுதல், பாடசாலையை தவிர்ப்பது போன்ற செயல்கள் இதனால் ஏற்படுகின்றன.

### 3. சமூக ஒதுக்கல்

மனநிலையை பாதிக்கும் சீர்கேடுகள் காரணமாக மாணவர்கள் சமூகத்தில் தனிமையில் இருக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

விரும்புகிறார்கள். இது அவர்களின் சமூக உறவுகளைப் பாதிக்கிறது. மேலும் தனிமை, நம்பிக்கை இழப்பு போன்ற பிரச்சினைகளுக்கு வழிவகுக்கிறது.

## பரிந்துரைகளாக

### 1. மனநல ஆதரவு மையங்கள்

பள்ளிகளிலும் சமூக மையங்களிலும் மாணவர்களுக்கு மனநல ஆலோசனைகளை வழங்கும் மையங்களை உருவாக்குவது அவசியம். இங்கு மாணவர்கள் தங்கள் உணர்வுகளை பகிர்ந்து அவர்களுக்கு ஏற்படும் மன உளைச்சல்களுக்கு தீர்வுகளைப் பெறலாம்.

### 2. குடும்பத்திலும் சமுதாயத்திலும் விழிப்புணர்வு

சமூகத்திலும் குடும்பத்திலும் சீர் கேடுகளை சரி செய்வதற்காக விழிப்புணர்வை அதிகரிக்க வேண்டும். வன்முறை, விவாகரத்து, பொருளாதார சிக்கல்களை திறம்பட சமாளிக்க குடும்பம் மற்றும் சமூகத்தில் உரிய ஆலோசனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 3. கல்வி பயிற்சிகள்

மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் மட்டுமல்லாமல் மனநிலை மேன்பாட்டிலும் உதவும் வகையில் மனநல பொறுமை மற்றும் தன்னம்பிக்கை பயிற்சிகளை பள்ளிகளில் மற்றும் கல்லூரிகளில் கொண்டு வருதல் அவசியமாகும்.

சமூக மற்றும் குடும்பச் சீர்கேடுகளால் மாணவர்களின் வாழ்க்கையில் ஏற்படும் தாக்கங்கள், அவர்களின் கல்வியிலும் மனநலத்திலும் ஆழமான மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. இந்த பிரச்சினைகளுக்கு மாணவர்களுக்கான உளவியல் ஆதரவு குடும்பத்தில் உரிய அறிவியல் நடைமுறைகள் மற்றும் சமூக ஒத்துழைப்புக்கள் மட்டுமே தீர்வாக அமைய முடியும்.

ர. ஜகதீஸ்
பழைய மாணவர்
(2016 O/L Batch)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



## வெற்றியின் அடிக்கல்

**து**ணிவே துணையென ஆக்கி - வரும்
தோல்வி தனையும் தூக்கி
நினைத்ததைச் செய்வாய் நீயும் -வெற்றி
நேரில் வந்தே சாயும்!

பற்றிய ஏழ்மை மாய்த்து - லிங்கன்
பற்றிய பதவி கண்டோம்
வெற்றியை அடைய என்றும் மண்ணில்
முயற்சியே அடிக்கல்லாகும்

சு. பரனிகா
தரம் - 02

## நன்மையை நாடுங்கள் !!!

**உ**ண்மையாளராய் இருங்கள்
நேர்மையாளராய் இருங்கள்
நேருக்கு நேர் பேசுங்கள்
தெளிவாக பேசுங்கள்
பொறுமையாளராய் இருங்கள்!


பொறாமை வேண்டாம்
பகைமை வேண்டாம்
கேலி செய்யாதீர்கள்
பெருமை பேசாதீர்கள்
வசைபாடதீர்கள்
பிறரை தாழ்வாக எண்ணாதீர்கள்!

பிறர் குறையை மறைத்திடுங்கள்
இரட்டை வேடம் போடாதீர்கள்
கண்ணியம் காத்துக் கொள்ளுங்கள்
குற்றத்தை ஒப்புக் கொள்ளுங்கள்
குற்றத்திற்காக வருந்துங்கள்! திருந்துங்கள்!
நன்மையை நாடுங்கள்!

செ. அதுமிஷா
தரம் - 03



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



பழைய மாணவர் சங்கத்தினால் மாணவர் முன்னேற்றம் கருதி பரீட்சை நடாத்தப்பட்டபோது.



2024ம் ஆண்டு வாணி விழா நடைபெற்ற போது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# காகமும் அன்னப்பறவையும்

அந்த காகம் மிகவும் அகங்காரம் பிடித்தது. அது எப்பொழுதும் எல்லோரிடமும் கர்வமாக பேசிக் கொண்டு இருக்கும். ஒருநாள் அந்த கடற்கரையில் சில அன்னப்பறவைகள் நிற்பதை பார்த்த காகம், அந்த அன்னப் பறவைகளிடம் சென்று "நீங்கள் பார்ப்பதற்குத் தான் அழகாக இருக்கிறீர்கள் ஆனால் என்னைப்போல் உங்களால் பறக்க முடியாது" என்று கர்வமாக சொன்னது.

அப்போது ஒரு அன்னப்பறவை சொன்னது, "நண்பா! நாங்கள் இங்கு சிறிது நேரம் ஓய்வெடுக்கத்தான் வந்துள்ளோம், உன்னுடன் எந்த வாய்வாதமும் செய்வதற்கு எங்களுக்கு நேரமில்லை'' என்றது. உடனே அந்த காகம், இல்லை, "உங்களுக்கு தைரியம் இருந்தால் என்னுடன் போட்டி போடுங்கள்" என்றது.

அதற்கு ஒரு அன்னப்பறவை சரி என்ன போட்டி என்று கேட்டது. அதற்கு காகம் சொன்னது, " நாம் இருவருமே இந்த கடற்கரையில் இருந்து சில மைல்கள் பறந்து செல்வோம், யார் முதலில் செல்கிறார்களோ அவர்கள் தான் சிறந்தவர்கள்'' என்று சொன்னது. உடனே அந்த அன்னப்பறவை சரி என்றது. அந்த காகம் பருத்து இருப்பதை மறந்து விட்டு வேகமாக பறந்து சென்றது. அன்னப்பறவை அதனால் முடிந்த அளவிற்கு வேகமாக பறந்து சென்று கொண்டிருந்தது.

சிறிது தூரம் சென்ற பிறகு காகம் சோர்வடைந்தது. அதனால் இப்போது எதுவும் செய்ய முடியவில்லை. கீழே சென்றால் கடலில் மூழ்கி இறந்து விடுவோம் என்று அதற்கு நன்றாகவே தெரியும் காகம் என்ன செய்வதென்று தெரியாமல் மிகவும் களைப்பாக பறந்து கொண்டிருந்தது.

அதைப் பார்த்த அன்ன பறவை ''நண்பா, நான் உன்னை கவனித்து கொண்டுதான் இருக்கின்றேன். உனக்கு என்ன ஆயிற்று மிகவும் களைப்படைந்து விட்டாயே" என்றது. அதற்கு காகம் சொன்னது, " என்னால் முடியவில்லை இன்னும் சிறிது தூரம் சென்றால் நான் நிச்சயமாக இந்த கடலில் விழுந்து இறந்து விடுவேன்" என்றது.

உடனே அன்னப்பறவை, "சரி நீ கவலை படாதே என் முதுகில் ஏறிக்கொள் நான் உன்னை கடலில் கொண்டு சேர்க்கிறேன்" என்றது. உடனே காகமும் அன்னப்பறவை முதுகில் ஏறி கரைக்கு பத்திரமாகச் சென்றது. கரைக்குச் சென்ற காகம் அன்னப்பறவையிடம் "நண்பா என்னை மன்னித்துவிடு நான் மிகவும் அகங்காரம் பிடித்து உன்னிடம் பேசிவிட்டேன், நான் அவ்வாறு உன்னிடம் பேசி இருக்கக் கூடாது. நீ மட்டும் எனக்கு உதவி செய்யவில்லை என்றால் நான் நிச்சயமாக இன்று இறந்து இருப்பேன், என்று அன்னப் பறவையிடம் மன்னிப்புக் கேட்டது.

வி. நிலுஷ்ரிகா
தரம் - 09


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# විශ්වාසය හා උත්සාහය

කවදාවත් උත්සාහය අතහරින්න එපා
ඒ වෙනුවෙන් තවත් වැඩ කරන්න
බලාපොරොත්තු අතහැර ගන්න එපා
ඉර බැස ගිය පසුව
කළුවර පැමිණියත් පසුව
තාරකා දැල්වේවි
අපිත් විශ්වාසයෙන් යහ මඟ බලා ගමන් කළහොත්
කළුවර නොමැති ආලෝකමත් මඟ ලැබෙයි

කුරුල්ලන් අහසේ ඉගිලෙන විට එකට
සුළං වැනි බාධාවන් ගොඩක් ඇතිවෙයි
එහෙත් කුරුල්ලන් තම ගමන නවත්වන්නේ නැ
නව නවත් විශ්වාසයෙන් ඉගිළී යයි
කුරුල්ලන් තම ගමන සාර්ථකව නිම කරයි
එසේම අපිත් උත්සාහයෙන් වැඩ කළොත්
අපගේ අරමුණ දිනා ගන්න පුළුවන්

ඔබ කාගේ කවුරු වුනත්
කෙසේ කොතැන සිටියත්
කුමන කෙනෙක් වුනත්
මොන තනතුරේ හිටියත්
කෙසේ හිටියත්
ඔබටත් සාර්ථක පුද්ගලයෙක් විය හැකිය
ඒ සඳහා අවශ්‍යවන්නේ
ආත්ම විශ්වාසය හා උත්සාහය පමණි .

ර.විතුර්ෂනා
10 ශ්‍රේණිය
කවිය


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சவால்களை முறியடித்து சரித்திரம் படைப்போம்



பல மோசமான சவால்களையும் வேதனைகளையும் துன்பங்களையும் அவமானங்களையும் கடந்தே சாதனைகளை சரித்திரங்களாக்க முடியும். அந்த வகையில் ஒவ்வொரு சாதனை யாளர்களின் வாழ்வின் பின்புலத்தை மிகவும் உன்னிப்பாக உற்று நோக்கினால் அவர்களது மீளாத்துயர்கள் வெளிப்படக்கூடிய வகையில் அமையப் பெற்றிருக்கும். வாழ்வின் வெற்றிக்காக எந்தவொரு தடைகளையும் தாண்ட தயாராக வேண்டும். ஒருவன் வெற்றிக்காகப் போராடும் போது வீண் முயற்சி என்று சொல்லும் ஒரு சமூகம் வெற்றி பெற்ற பின் விடா முயற்சி என்று புகழும்.

எந்தவொரு விடயமாக இருந்தாலும் விட்டுக்கொடுத்து பிறரை அனுசரித்து வாழ்வின் வெற்றிக்காக உழைப்பவனே எதிர்கால சாதனையாளனாக மிளிர்வான். எப்போதும் சிறந்த பிரஜையாகத் திகழ்ந்து சிறந்ததை வைத்திருந்து சிறந்ததையே செய்ய வேண்டும். உதாரணமாக மகாத்மா காந்தி, அப்துல்கலாம் முதலிய பெரியார்களை உற்று நோக்கின் அவர்களது சவால்மிகு சாதனைகளை வெளிப் படுத்தக்கூடிய வகையில் வாழ்வு அமைந் திருக்கும்.

முதலில் ஒவ்வொருவரும் தத்தமது மனங்களை நம்ப வேண்டும். மனங்கள் தெளிவானால்தான் மாறுபாடு இன்றி சவால் களை சரித்திரங்களாக்க முடியும். நமது சொல் அல்லது செயலுக்கு மூலகாரணியாக இருப்பது தத்தமது எண்ணங்களே. நாம் எதையும் சொல்லும் முன்போ அல்லது எதையும் செய்யும் முன்போ அதற்கான உந்துதல் முதலில் நம் எண்ணத்தில்தான் உருவாகின்றது.

சாதனைகளை வெளிக்கொணர வேண்டும் என்றால் சோதனைகளையும் துன்பத்தையும் மனதிலே வெளிப்படுத்தாது வெற்றியை நோக்கி முன்னோக்கிப் பயணிக்க வேண்டும். ஏழ்மையிலும் நேர்மையாக கோபத்திலும் பொறுமையாக தோல்வியிலும் விடாமுயற்சியாக துன்பத்திலும் துணிவாக விளங்க வேண்டும். நாம் சாதனைகளைப் படைக்கும் போது பகைவர்களால் எத்தகைய துன்பங்கள் வந்தாலும் அவற்றை அன்பாலே முறியடித்து வெற்றி வாகை சூட வேண்டும் என்று காந்திஜி கூறியதற்கிணங்க வாழ்வில் துன்பங் களுக்கு இடையில் மறைந்துள்ள வாய்ப்புக்களை உலகிற்கு வெளிக்கொணர்ந்து சரித்திரம் படைக்க வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஒவ்வொருவர் வாழ்விலும் பொதிந்துள்ள வாய்ப்புக்களே அவரவர் வாழ்வின் முதல் வெற்றிப்படி. வாய்ப்புக்களை நிராகரித்து வாழ்வில் வீழ்ச்சியைக் காணாது வாய்ப்புக்களை சவால்களாக்கி அதனை வென்றுகாட்ட வேண்டும். சரித்திரங்கள் படைக்க வேண்டுமாக இருந்தால் அனைவரும் பல தியாகங்களை மேற்கொள்ள வேண்டும். வாழ்வில் குறிக்கோள் என்பது மிக உச்சகட்டமான செயற்பாடாகும்.

ஒரு குறிக்கோள் இல்லாமல் எந்தவொரு சவாலையும் முறியடிக்க முடியாது. சிறுவயதிலிருந்தே இலட்சிய நோக்கு அனைவரதும் மனதில் ஆழமாகப் பதியப்பட வேண்டியதொன்று. தடைகளைத் தாண்டுவதற்குத் தேவையான வலிமையும் நம்பிக்கையும் இருந்தால் மாத்திரமே வாழ்வின் வெற்றி எனும் எட்டாக் கனியைப் பற்றிப்பிடிக்க முடியும். வாழ்விலே இளமையில் பல சுகங்களை அடைபவனை விட எளிமையாகத் தன் வாழ்க்கையை கொண்டு செல்பவனே எதிர்கால சாதனையாளனாக துலங்குவான். எனவே வாழ்வின் துயர்மிகு சவால்களை முறியடித்து சாதனை, சரித்திரங்கள் படைக்க விழித்தெழுவோம்.

தடை உடை சரித்திரம் படை!

த. நிதுர்ஷனா
பழைய மாணவி (2020 O/L Batch)
லைசியம் கல்வி நிலையம்,
காக்காச்சிவட்டை.





Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media



# கல்வியின் சிறப்பு

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு மாடல்ல மற்றையவை'' என்கிறார் திருவள்ளுவர்.

அதாவது இந்த உலகத்தில், மற்ற செல்வங்களை விட மனிதர்களுக்கு கல்வி தான் சிறந்த செல்வம் ஆகும். வாழ்க்கையில் எவ்வளவு வறுமை நிலை வந்தாலும் கல்வி கற்பதை மட்டும் நிறுத்தி விடக்கூடாது. தமிழர்கள் பண்டைய காலத்தில் இருந்தே பல இலக்கியங்களையும், காப்பியங்களையும் படைக்கும் அளவிற்கு சிறந்த கல்விய றிவுடையவர்களாக காணப்பட்டனர். இதற்கு அக்காலத்தில் எழுந்த புகழ்பெற்ற இலக்கி யங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களே சாட்சியாகும்.

நம் வாழ்க்கையை முன்னேற்றும் சக்திவாய்ந்த கருவி கல்வியாகும். கல்வி நமது அறிவையும், ஆற்றலையும் உயர்த்தி சமூகத்தில் நல்ல மதிப்பைத் தரும். கல்வி ஒழுக்கம் மற்றும் நேரத்தின் மதிப்பை நமக்கு உணர்த்துகிறது. "படிக்காமல் இருப்பதை விட பிறக்காமல் இருப்பதே மேல்'' என்கிறார் பேராசிரியர் பிளேட்டோ. ஒரு மனிதன் கல்வியைக் கற்காமல் இருப்பானானால் அவனது பிறப்பிற்கே எந்தவித அர்த்தமும் இல்லை. கல்வியின் சிறப்பாக மற்றவர்களிடம் இருக்கும் பணம், பொருள், செல்வம் ஆகியன காலத்தால் அழியக்கூடியவை. என்றும் கல்விச் செல்வம் மட்டுமே காலத்தால் அழியாது மற்ற அனைத்துச் செல்வங்களும் கள்வர்களால் திருடு போகக் கூடியது. ஆனால் கல்விச் செல்வத்தை மட்டுமே யாராலும் திருடமுடியாது.

கல்வியின் அவசியமாக, ஒருவன் தான் கற்ற கல்வியின் இன்பத்தை உணர்ந்தானாயின் அவன் மீண்டும் கற்பதையே விரும்புவான். இது கல்வியின் பண்பாக கருதப்படும். இப்பொழுது கற்கின்ற கல்வி எமது எதிர்கால தொழிலுக்கு வழிகாட்டுகின்றது. கல்வி என்பது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையை வாழ்வதற்கான ஒரு உதவும் கருவியாக விளங்குகிறது. அறிவியலும் சமூகமும் எமது வாழ்க்கையை நெறிப்படுத் தவும் உதவுகிறது. எமது வாழ்க்கையின் நோக்கம் என்ன என்பதை இனங்கண்டு அதற் கேற்ப கற்க வேண்டும்.

கல்வி கற்றவரிடம் ஒழுக்கம், பண்பு, நேர்மை இவைகள் அனைத்தும் ஒருங்கே அமைந்து காணப்படும். எனவே கல்வியானது ஒரு மனிதனின் முக்கிய தேவையாக இருக்கிறது. நாம் பெற்றுக் கொள்கின்ற பயன் எமக்கு மட்டும் பயன் தருவதாய் இருக்கக்கூடாது. அந்தக் கல்வி சமூகத்திற்கும் நாட்டிற்கும் பயன்படும் வகையில் நாம் சேவை ஆற்ற வேண்டும். அறியாமையில் இருப்பவர்களுக்கு நாம் எமது கல்வி அறிவினால் உதவி செய்ய முடியும். நல்ல எண்ணங்களும் சிறந்த செயல் களையும் செய்ய வேண்டும். அதுவே கல்வி யின் பயனாகும். இதனை திருவள்ளுவர். "கற்றவை கற்றபின் நிற்க அதற்கு தக" என்று வலியுறுத்துகிறார். கற்ற கல்வியின்படி நாம் நடப்பதே கற்ற கல்வியின் பயனாகும்.

மற்ற உயிரினங்களை விட மனிதனை உயர்த்துவது ஆறாம் அறிவாகிய பகுத்தறிவு. அந்த அறிவு வளருவதற்குத் துணைபுரிவது கல்வி. அத்தகைய கல்வியைப் பெறுவது அதையும் இளமையில் பெறுவது இனிமை பயக்கும். ஒருவன் கற்ற கல்வி, அவனுக்கு ஊன்றுகோல் போல உதவும். அழிவைத் தடுக்கும் அரனாகவும் விளங்கும். கல்வி கற்றுச் சிறந்தவனாக இருப்பின் எங்கும் போற்றப்படுவான். கல்வி ஏழு பிறவிகளுக்கும் இன்பம் தரும். உயிரின் ஒப்பற்ற துணையாக இருக்கும். இப்படி கல்வியின் உயர்வை அழகாக திருவள்ளுவர் கூறியுள்ளார்.

வாழ்வை வளப்படுத்தவும், சமுதாய ஒப்புரவு ஓங்கவும், பண்பாடு சிறக்கவும் கல்வி வழிவகுக்க வேண்டும். இத்தகைய கல்வியைக் கற்பதுடன் கற்ற கல்வி உணர்த்தும் நெறியின் வழிநடப்பதே நற்பயன் தருவதாகும். அத்துடன் இளையோரை காத்தலும், முதியோரைப் போற்றலும், பெற்றோரை வணங்குவதும் உற்றார் சொல் கேட்டலும் கல்வி கற்றலின் பயன்களாக அமைதல் வேண்டும். படித்து விட்டதால் எல்லாம் எனக்குத் தெரியும் என்ற தற்பெருமையும் இருக்கக்கூடாது.

ஆயிரக்கணக்கான ஆலயங்களை நிறுவுவதை விட ஒரு பாடசாலையை நிறுவுவது சாலச்சிறந்ததாகும். மனிதன் உயிர் வாழ்வதற்கு நீர், உணவு எவ்வளவு அவசியமே அதே போன்று நம் அறிவை வளர்ப்பதற்கு, சரி எது, தவறு எது என்பதை புரிந்து கொள்ள கல்வி அவசியமாகும். கல்வி ஓர் ஒளிவிளக்கு. விளக்கானது தன்னைச் சுற்றியுள்ள விளக்கை ஒளி வீசச் செய்யும். அது போல் ஒருவர் கற்ற கல்வியானது பலருக்கும் பயன்தரும். கல்விதான் ஒருவனை அறிவாளி ஆக்குகிறது. நல்ல புத்தகங்களைப் படித்து அறிவுக் கண்களைத் திறக்கும் திறவுகோல் கல்வியாகும்.

கல்வி கற்றவர் எந்த இடத்திற்குச் சென்றாலும் அவர் பிறரால் மதிக்கப்படுவார். கற்ற வனுக்குத் தனது நாடும் ஊருமே அல்லாமல் எந்த நாடும் ஊரும் தன்னுடைய ஊராகும். கல்வியறிவு பெற்றவர் எல்லா மக்களிடமும் நன்றாக பழகிச் சேர்ந்து வாழ்வதையே விரும்புவர்.

ஆகவே கல்வியை நாம் உயிரிற்கு மேலாகப் போற்றி கல்வி கற்று நாட்டை வளப்படுத்த வேண்டும். கல்வியே எமது வாழ்வாகும். கல்வி யைக் கற்று நாட்டிற்கு ஒரு நற்பிரஜையாக திகழ வேண்டும்.

து. பதுர்ஷிகா
தரம் - 11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



2024ம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவின் போது.



லைசியம் கல்வி நிலைய நிர்வாக உறுப்பினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எமது உடல் பற்றிச் சிறிது அறிந்து கொள்வோம்

1. எமது உடலில் உள்ள வியர்வைச் சுரப்பிகளின் எண்ணிக்கை :- சுமார் 20 இலட்சம்
2. எமது கண்ணில் ஒளிக்கதிர்களைக் கட்டுப்படுத்தும் அங்கம் :- கதிராளி
3. எயிட்ஸ் நோய்க்கான காரணியாக அமைவது :- HIV வைரஸ்
4. எமது உடலில் உள்ள நீரின் சதவீதம் :- 65%
5. எமது உடலில் உள்ள விலா எலும்புகள் :- 33
6. மனிதனின் மார்பில் உள்ள விலா எலும்புகள் :- 24
7. மனித மண்டை ஓட்டில் உள்ள எலும்புகள் :- 08
8. பெருமூளையில் உள்ள நரம்பணுக்கள் :- 20 இலட்சம் கோடி
9. அதிக வலுவான தசை உள்ள இடம் :- நாக்கு
10. பித்த நீரை உருவாக்கும் சுரப்பி :- ஈரல்

# ஆண்டு நிறைவு விழாக்கள்

1. முதலாவது வருட நிறைவு விழா - காகித விழா
2. இரண்டாவது வருட நிறைவு விழா - பருத்தி விழா
3. பத்து வருட நிறைவு விழா - தசாப்த விழா
4. பதினைந்தாவது ஆண்டு நிறைவு விழா - பளிங்கு விழா
5. இருபதாவது ஆண்டு நிறைவு விழா - பீங்கான் விழா
6. இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழா - வெள்ளிவிழா
7. முப்பதாவது ஆண்டு நிறைவு விழா - முத்து விழா
8. நாற்பதாவது ஆண்டு நிறைவு விழா - மாணிக்க விழா
9. ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழா - பொன்விழா
10. அறுபதாவது ஆண்டு நிறைவு விழா - வைரவிழா / மணிவிழா
11. எழுபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழா - பவள விழா
12. எண்பதாவது ஆண்டு நிறைவு விழா - அமுத விழா
13. நூறாவது ஆண்டு நிறைவு விழா - நூற்றாண்டு விழா

| | மாகாணங்கள் | அமையப்பெற்றுள்ள மாவட்டங்கள் |
|---|---|---|
| 1. | வடமாகாணம் | யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு |
| 2. | வடமத்திய மாகாணம் | அனுராதபுரம், பொலன்னறுவை |
| 3. | வடமேல் மாகாணம் | குருநாகல், புத்தளம் |
| 4. | மத்திய மாகாணம் | கண்டி, நுவரெலியா, மாத்தளை |
| 5. | மேல் மாகாணம் | கொழும்பு, களுத்துறை, கம்பஹா |
| 6. | சப்ரகமுக மாகாணம் | இரத்தினபுரி, கேகாலை |
| 7. | ஊவா மாகாணம் | பதுளை, மொனராகலை |
| 8. | தென்மாகாணம் | காலி, அம்பாந்தோட்டை, மாத்தறை |
| 9. | கிழக்கு மாகாணம் | திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை |

ர. டஜிதன்
தரம் - 09



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஒரு கல்லூரியின் கல்வி




கல்வி என்பது மூன்று எழுத்து
அதில் கற்க வேண்டிய பல எழுத்து
பள்ளிக் காலங்கள் சில
அந்த காலங்களில் கற்பது பல
பள்ளி ஒரு கோயில் - அதில்
கடவுள் ஓர் ஆசிரியர்
பக்தன் ஓர் மாணவர்
கடவுளிடம் கேட்பது வரம்
ஆசிரியரிடம் கேட்பது பாடம்
கடவுள் தருவது வரம்
ஆசிரியர் தருவது கல்வி
பள்ளிக் காலங்கள் என்றும் அழியாதது
கல்வியும் என்றும் அழியாது!



# வானிலை சொல்லும் எறும்புகள்

வானிலை சாதாரணமாக இருந்தால் எறும்புகள்
நேர்கோட்டில் வரிசையாகச்
சென்று கொண்டிருக்கும்.

கனத்த மழை வரும் என்று தெரிந்தால் அவை வளைந்து
வட்டமான பாதையில் வரிசையாகச் செல்லும்
அவை தங்கள் முட்டைகளை வேறொரு இடத்திற்குக்
கொண்டு சென்றால் மழை வரும்.



த. பிலோமிதன்
தரம் - 05, மட்/ பட்/ காக்காச்சிவட்டை
விஷ்ணு மகா வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பெற்றோர் தியாகம்

விலை மதிப்பற்ற பொருளாக விளங்கிய
அரியாசனமே - என் தாயின் கருவறை

எதை கொடுத்தும் வாங்க முடியாத
அரியாசனம் தான் தந்தையின் தோள்
யாருமே இழக்க விரும்பாத - தொட்டில்
பெற்றோர் மடிதானே



என்தாய் பத்து மாதம் வாழ்க்கையை
தியாகம் செய்தாள்
என் தந்தையானவர் - தன்
குழந்தைக்காக தியாகம் செய்தார்

பெற்றோர்கள் குழந்தைகளை
வளர்ப்பதற்காக அவர்களின் ஆசைகளை
புதைத்துக் கொண்டு வாழ்கின்றார்கள் - நாம்
ஆசான் அடிபணிந்து கல்வி எனும்
விதையை விதைத்து உலகறிய செய்வோமே......

**சுப்பிரமணியம் - ரோமிஷா**
தரம் - 03
மட்/பட்/ஆனைகட்டியவெளி நாமகள்
வித்தியாலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ගුරුවරයා

ඉගැන්වීම නම් විශිෂ්ටත්වය
අප නොදන්නා කරුණකි

අද ශිෂ්‍යයන් හොට
මහා වෘක්ෂයන් කරන්නේ
ගුරුවරයාය

බ්‍රහ්මයන් යනු ඔවුන්ගේ රතු
තීන්ත පෑනෙන්
අප අත් අකුරු නිවරදි කරන
ගුරුවරයාය

අපිව කැටයම් කරපු අම්මා
ලොවට පෙන්වන්න අපිව කැපුවේ
ගුරුවරයාය

දාහක් මිනිසුන් මගේ පිටුපස සිට
ඔයාට බෑ කිව්වට
මගේ ගුරුතුමිය පමණක් මා පිටුපස සිට
ඔයාට පුළුවන් කීවාය

මට දැනුම හා ශක්තිය ලබා
දුන් ගුරුවරයාට මගේ අවංක
ස්තූතිය.......................

**කේ.සතුස්ටිකා**
**08 ශ්‍රේණිය**
**L.E. C**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# பள்ளிக்கூட கல்வியின் இழையோடல்

சின்னஞ்சிறு கனவுகளுடன் சிறுசிறு குறும்புகளுடன் தொடங்குவதே பள்ளிக்கூட வாழ்க்கை. பள்ளிக்கூடம் என்பது ஓர் நீங்கா நினைவுகள் சொல்லித் தந்தது பல தடவைகள் எமக்கு. முதல் நாள் அழுது என்னவோ நரகவாசலில் நுழைவதுபோல சென்று உயிர்கொடுத்து உயிர் எழுத்து கற்பிக்கும் ஆசானின் கையில் உள்ள தடியைக்கண்டு அஞ்சி ஒழிவதும் ஓர் நினைவுதான். மான் பிடிக்கும் கனவு வரும் வயதில் மாணவனாய் பள்ளிக்கூடத்தில் திருதிருவென முழித்த திருநாள் பாடசாலை நாள். என்னவோ உலகப்போரில் பதுகுழி தேடுவது போல எமக்கான ஒரு நண்பனை அந்த பரபரப்பிலும் நிதானமாய் தேடும் நம் கண்கள். படிப்பு தலையில் ஏறாவிட்டாலும் தலையாட்டும் பருவம்.

கத்தியின்றி இரத்தமின்றி பேனையுடனும், படிப்புடனும் யுத்தம் செய்ய ஓர் வீரனாய் திகழ்ந்த நாள் அது. மழலைகளாய் ஓடி ஆடி விளையாடிய நினைவுகள் அது. நட்பு எனும் பூஞ்சோலை வனத்தில் மகிழ்ச்சி சாரல்கள் புதிய நண்பர்களுடன் தூறும் பருவம். ஆசான் ஊட்டும் தன்னம்பிக்கையில் இறக்கை முளைத்த குதிரை போல் வானுயர பறக்கும் இதம் தரும் அடுத்த நாளே சோதனை காகிதத்தை பார்க்கும் போது இதழ் தரும் அடுத்த நொடி வாழ்வே சோதனையாக விளங்குவது போல் இருக்கும்.

கோயிலும் பாடசாலையும் ஒன்றுதான் என்றால் கோயிலில் இறைவன் இருப்பார். பாடசாலையில் ஆசான் இருப்பார். சுயநலமில்லாத நட்பு சுதந்திரமாக பழக தடையில்லாத வயதில் பள்ளிக்குறும்புகளும் தலைமுறையாய் தொடரும். போட்டிக்குப் படித்த பாடங்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நாடகத்திற்காக போட்ட வேடங்கள் எல்லாம் ஓர் மறக்க முடியாத பொன் நினைவுகள் தான். துன்பங்கள் வந்த வேளையும் மாணவப் பருவ இன்பங்களுக்கு முடிவில்லை. ஆசானை கடவுளுக்கு இணங்க பார்த்து வாழ்த்திய பக்குவம் இதெல்லாம் மீண்டும் பிறந்தாலும் கிடைக்குமோ என்னவோ. ஆசான் பக்குவமாக சொல்லித்தரும் பாடங்களை கரும்பலகையில் வெண்கட்டி தேயும் வரை பார்த்து படிப்போம். நட்பினுள் சிறுசிறு சண்டைகள் ஏற்பட்டாலும் சிறிது நேரத்தில் சரியாகிவிடும் பண்பு. உடைந்த கண்ணாடியைக் கூட ஒட்ட வைக்கும் அளவிற்கு இருக்கும் ஆண் பிள்ளைகளின் நட்பு. எவ்வளவு பணம் கொடுத்து உண்டாலும் பள்ளிக்கூட சிற்றுண்டியிலே குறைந்த பணத்தில் வாங்கிய உணவை ஐந்து, ஆறு பங்கிட்டு வயிறு நிறையாவிட்டாலும் மனம் நிறைய உண்ணும் நட்பு வேறு எங்கு கிடைக்குமோ! பள்ளிக்கூடம் ஓர் சொர்க்கவாசல். வீட்டில் கூட பழகாத நற்பழக்கங்களை, ஒழுக்கத்தை பள்ளிக்கூடம் சொல்லித்தருகின்றது. சில நேரங்களில் புத்தகப்பையை சுமந்து சுமந்து மாணவப் பருவம் வெறுப்பயடையும். அப்போதெல்லாம் ஆசிரியர் பொறுப்பை எமக்கு உரைப்பார். தெரியாத கேள்விக்கு தெரிந்தது போல நடிப்பது, தெரிந்த போதும் விடையளிக்காமல் நிற்பதும் பள்ளியின் நீங்கா நினைவுகள்.

கணக்குப்பாடமும் கணக்குப்போடும் நாங்கள் வாங்கிய கொட்டுக்களை. 12 வருடப் புத்தகத்தில் திருப்பிய இடம் எல்லாம் நண்பனின் கால்தடமே வகுப்பறையில் பாடப்படும் வாழ்த்து, முழுமையாக முடிக்கப்படாத வீட்டுப்பாடம், தண்டனை என்று வந்தால் அதில் நண்பனை இழுத்துவிடும் அன்பு. பள்ளி முடிந்தவுடன் அடிக்கப்படும் மணிச்சத்தத்திற்கு என்னவோ மழைக்காக ஏங்கும் விவசாயி போல் ஏங்கியதெல்லாம் மறக்க முடியாத நினைவு. யதார்த்தமான அன்பாய் இருந்தது எப்பொழுதும் மகிழ்ச்சியாய் மாறியது. பள்ளிக்கூடத்தில் அறிவுப் புதையலை அகழ்ந்தெடுக்க ஆசிரியரின் துணை இருக்கும். இனிதே சூழலில் கற்பதற்கு கற்றல் இனித்திருக்கும்.


என்றும் நீங்கா நினைவுகளாய் தங்களுடைய பள்ளிப் பருவத்தை நெஞ்சில் சுமக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் இது சமர்ப்பணம்.

நன்றி

ப.தஷேந்
தரம் - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# என் அப்பா

பத்து மாதங்கள்தான் அம்மா கருவில் சுமந்தார்
என் வாழ்நாள் முழுவதும் எம்மை
சுமையென்று பாராமல் தோளிலும் நெஞ்சிலுமாய்
சுமந்தாயே - என் அப்பா

நாம் பசி பட்டினியில் வாடிடுவோம் என்று
எண்ணி உன் துயரம் மறைத்து
இரத்தத்தை வியர்வையாய் சிந்தினாயே
- என் அப்பா

நீ பள்ளிக்கூடம் சென்று படிக்கவில்லையே!
நீ படும்துயரம் மறைத்து எம்மை
பள்ளிக்கூடம் அனுப்பி வைத்து பணத்திற்காக
பகல் இரவு என்று பாராமல் காட்டிலும்
வயலிலும் பனி மழை தெரியாது
உழைத்தாயே - என் அப்பா

ம. பர்மிகா
தரம் - 2


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நான் யாருமற்ற தீவில் விடப்பட்டபோது

அவுஸ்திரேலியாவுக்கு செல்லும் கப்பல் துறைமுகத்திலிருந்து புறப்பட்டது. நான் எனது தாய்நாட்டை விட்டுப் பிரியும் போது, என்னருமைத் தாயை விட்டு பிரிவதைப் போலக் கலக்கமடைந்தேன். கப்பலில் ஏறி நின்று என் தாயகம் கண் பார்வையில் மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்தேன். என் மனதினுள் ஆறுதல் கூறினேன். அதன் பின்னரே, பிரயாணத்தில் கவர்ச்சியும் மலர்ச்சியும் உண்டயாயிற்று.

அப்போது காலை பத்து மணியிருக்கும். கப்பல் எல்லையறியாத கடலை கிழித்துக் கொண்டு விரைந்து சென்றது. கரையிலே தன் பல்லாயிரக் கணக்கான அலைகளை மோதி ஆர்ப்பரித்த கடற்கன்னி, நடுக்கடலிலே அமைதி நிலவ அன்னை வடிவமாய் நிலவினாள். சிறிது நேரம் சென்றது தினகரன் உச்சி வானை யடைந்தான். அவன் கதிர்களிலே வெம்மை மிகுதியாயிற்று. வெண் முகில்களெல்லாம் திடீரென கார் முகில்களாகின. இடிமுழக்கம் காதைக்கிழித்தது. அதனையடுத்து பெருமழை யோடு புயல்காற்று மிகுந்த வேகத்தோடு கப்பலைத் தாக்கியது. அடுத்தகணம் 'படீர்' என்ற பேரோசை கேட்டது. கப்பல் உடைந்து மூழ்கத் தொடங்கியது.

நானும் கடலில் மூழ்கியும் மிதந்தும் தத்தளித்தேன். 'இறைவா இது உன் செயலா" என ஏங்கினேன் அப்போது ஏதோ என் கையில் பட்டது. அதனைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டேன்.காற்றடிக்கும் திசையிலே அலை களுக்கும் சுறா மீன்களுக்கும் மத்தியில் வளையத்தின் உதவியோடு மிதந்து ஈற்றில் ஒரு கரையில் ஒதுக்கப்பட்டேன்.

இறைவன் பெருங்கருணையுள்ளவன் என நினைத்து வியந்தேன். மறைந்திருந்த பசியும் தாகமும் என்னைச் சித்திரவதை செய்தன. வெகுதொலைவில் தெரிந்த காட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நோக்கி நடந்தேன். வழியில் மண்லினுள் புதையுண்ட ஒரு தேங்காயைக் கண்டேன். அந்தத் தேங்காயை கூரிய கல்லில் குற்றி இளநீர் பருகினேன். அது அமிர்தம் போல் இனித்தது என்னுடலில் மாண்டுபோன வலிமை மீண்டது. மெல்ல மெல்லக் காட்டையடைந்தேன். அங்கு மரமொன்றில் ஏறி நாலாபுறமும் நோக்கினேன். அப்போதுதான் அது ஒரு மனித இனமே வாழாத சிறிய தீவு என்பது எனக்குப் புரிந்தது. காட்டு விலங்குகளை எண்ணி அஞ்சினேன். அங்கு கண்ணுக்குத் தெரிந்த காய்களையெல்லாம் பறித்து உண்டேன். அவை நல்லனவோ நஞ்சு உடையனவோ எனக்கூடத் தெரியவில்லை. சிறிது நேரத்தில் மேற்கு வானம் குங்குமம் போலச் சிவந்தது. படிப்படியாக வானம் இருண்டது.

காரிருளிலே காட்டு விலங்குளிடையே தப்பி வாழ்வதை நினைத்துப் பயந்தேன். சில தடி, கொடிகளை சேகரித்து பரண் அமைத்து அதில் இரவுப் பொழுதைக் கழித்தேன். இரவானதும் காட்டு விலங்குகளின் அட்டகாசம் தொடர்ந்தது. நான் பயத்தால் நடுங்கினேன். ஈற்றில் ஒருவாறு கண்ணயர்ந்தேன். மறுநாள் கண் விழித்துப் பார்த்தேன் சூரியன் ஒளிமயமாய் வெளிவந்தான். பின்னர் கீழிறங்கி காட்டைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டேன். வழியில் பசி மிகுதியால் ஒரு முயலை வேட்டையாடி உண்டேன்.

இவ்வாறு இருபது நாட்கள் மனிதசஞ்சாரமற்ற அத்தீவில் கற்கால மனிதனாய் வாழ்ந்தேன். ஒரு நாள் காலை தீவின் அருகே ஒரு கப்பல் செல்வதை கண்டேன். போன உயிர் மீண்டது. கூக்குரலிட்டேன், உடுத்திய துணியை அசைத்து சைகை காட்டினேன். இறைவன் கருணையால் கப்பல் என்னை நோக்கி திரும்பியது. மாலுமி என் கதையை கேட்டு பரிதாபப்பட்டான். அவனது உதவியால் மேற்படிப்பு படித்து பட்டத்துடன் திரும்ப வேண்டிய நான் அவை எவையுமின்றி தாயகமடைந்தேன்.

லி.ஜிகான்
தரம் - 10






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி

இலட்சிய பாதையை
நோக்கிச் செல்
எந்த இடையூறு நேர்ந்தாலும்
அதைத் தாண்டிச் செல்
கற்றுத்தந்த ஆசானுக்கு
நன்றி கூறு
முயற்சியோடு கல்வியை கற்றிடு
வெற்றி நிச்சயமாக வரும்.





# அன்னை

தன்னையே முழுமையாய்
எனக்காக அர்ப்பணித்தவள்
தரணியில் நிகரேதுமில்லா கலைமகள்
என்னுயிர் உள்ளவரை
உன்னை துதித்திடுவேன்
தன் உதிரத்தை பாலாகத் தந்து
பொக்கிசமாய் என்னை காத்தவள்
நீதான் அம்மா என்னுயிர்

ர. சஷ்வின்
தரம் - 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



லைசியம் கல்வி நிலைய ஆசிரியர்கள்.




லைசியம் கல்வி நிலைய பழைய மாணவர் சங்கத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# செய்வன திருந்தச் செய்



“செய்வன திருந்தச் செய்” என்பது ஔவையார் வாக்கு. செயலால் சிறப்புடையவன் மனிதன் ஆவான். அவனுக்கு உண்டாகும் நன்மை, தீமை எல்லாம் அவனது செயல்களால் வருபவையாகும்.

செய்யும் செயல் செம்மையாக இருந்தால் அதனுடைய பயனும் சிறப்புடையதாக இருக்கும் இவ்வாறு அமையும் போதுதான் வாழ்வும் சீரானதாக அமையும்.

சிறுவர்களாகிய நாம் எழுதும் போது எழுத்துக்களை உறுப்பமைய முறையாக எழுதிப் பழகுதல் வேண்டும்.

“தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்” என்பது பழமொழி இளமையில் பிடிபடும் பழக்கம் இறுதிக்காலம் வரையில் மாறாது. எனவே எதையும் திருத்தமாகச் செய்து பழகுதல் அவசியமாகும்.

எழுதுவதில் மட்டுமன்றி எழுத்துக்களை உச்சரிப்பதிலும் நாம் கவனம் செலுத்த வேண்டும். சொற்களை சொல்லும் போது சரியாகவும், திருத்தமாகவும் சொல்லிப் பழகுதல் வேண்டும்.

நமது செயல்கள் ஒவ்வொன்றும் ஒழுங்கு முறையானதாக இருத்தல் வேண்டும். உணவு உண்பது முதல் உடை அணிவது வரை அனைத்திலும் ஒழுங்கு பேணப்படல் வேண்டும்.

சிற்பியின் கைபடும் கருங்கல் கூட அழகான சிலை வடிவம் பெறுகிறது. அதற்கு காரணம் அவனது ஒழுங்கு முறையான செயல்திறனேயாகும். அறிவின் வளர்ச்சியால் முறையான பயிற்சியால் அனுபவ அறிவால் அமைவதே திருத்தமான செயலாகும்.

மாணவர்களாகிய நாம் இவற்றைக் கருத்திற் கொள்ள வேண்டும். செய்யும் செயல் எல்லாம் திருத்தமானதாக அமைதல் வேண்டும்.

“செய்வன திருந்தச் செய்வோம்” என்ற இலட்சியத்துடன் செயற்பட வேண்டும்.

கி. அனாத்திகா
தரம் - 01
லைசியம் கல்வி நிலையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எண்ணெய்ச் சிந்து பாடலும் கல்வியில் அதன் தாக்கமும்

போர்த்துக்கீசர் இந்நாட்டை 1505 இல் கைப்பற்றியதன் பின்னர் றோமன் கத்தோலிக்கப் பாடசாலைகள் தோற்றம் பெற்று வேகமாக வளரத் தொடங்கின. இக்காலகட்டத்தில் 1813 காலப்பகுதியில் கிராமப்புற பாமர மக்களின் கல்வியை வளர்க்கும் நோக்குடன் திண்ணைப் பள்ளிமுறை தோற்றம் பெற்றது. அங்கு மாணாக்கருக்கு கல்வி போதிப்போர் பெரும்பாலும் பண்டிதர் என அழைக்கப்பட்டனர். இங்கு கல்வியில் சிறந்து விளங்கும் மாணாக்கருக்கு பாலபண்டிதர் எனும் பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இத்திண்ணைப் பள்ளியில் போதனை செய்யும் குருவுக்கு (ஆசிரியருக்கு) எவ்வித சம்பளமோ, கொடுப்பனவோ வழங்கப்படாது காணப்பட்ட நிலையில் அவ்வாசிரியரின் வாழ்வாதாரத்திற்காகவும் திண்ணைப் பள்ளியின் தொடர்ச்சியின் விடியலுக்காகவும் அங்கு பயின்ற மாணாக்கர் குழாம் அக்கிராமத்திலுள்ள குடிசை வீடுகளுக்குச் சென்று ஒரு பிள்ளை கருவில் உருவாகி வயதளவில் வளர்ந்து கலைகள் பலவும் கற்பதற்கு கால்கோளாய் அமையும் இத்திண்ணைப் பள்ளியின் தொடர்ச்சிக்கும் தம்மோடு தியாகத் தீக்குச்சியாய் இருக்கின்ற ஆசிரியரது வாழ்வாதாரத்திற்கு வழிசெய்யும் நோக்கோடும் பின்வரும் அம்மானை மெட்டில் அமைந்த எண்ணெய்ச் சிந்தை வருடமொருமுறை சித்திரை வருடப் பிறப்பின் பின்னர் வரும் இரண்டாம் வாரமளவில் மனமுருகிப் பாடுவதனூடாக (அக்காலத்திலிருந்த அநேகமான மரபுவழி கிராமியச் சடங்குகளில் பாடப்பட்டவை, பெரும்பாலும் அம்மானை மெட்டிலேயே அமைந்திருந்தமையும் மக்களின் மனங்களில் இலகுவாகப் பதியக்கூடிய தன்மையும் இப்பாடலும் அம்மானை மெட்டில் பாடப்பட காரணமாயிருந்திருக்கலாம். உதாரணமாக சிவராத்திரி அம்மானை , வள்ளியம்மானை, வைகுந்த அம்மானை, கம்சனம்மானை– போன்றன.) அங்கு பெற்றோரால் வழங்கப்படும் தேங்காயெண்ணெய், அரிசி, காய்கறி, வஸ்திரம் என்பவற்றை அக்குருவானவரிடம் ஒப்படைக்க, அதனை அவ்வாசிரியர் சாதமாகச் சமைத்து அல்லது பொங்கலிட்டு அம்மாணாக்கருடன் பகிர்ந்துண்டு ஆசிரியர்–மாணவர் உறவை வலுப்படுத்துவார்.

அந்தி மயங்கியதும் அவ்வெண்ணெயைப் பயன்படுத்தி (தேங்காயெண்ணெய்) விளக்கேற்றி அந்த வெளிச்சத்திலும் நிலா வெளிச்சத்திலும் இருந்து மாணாக்கருக்கு இசைவோடு கல்வி போதித்தார். இதனை தற்போதும் சில கிராம வளக்காறுகளில் நடைமுறையில் காணக்கூடியதாகவுள்ளது. இருப்பினும் இதன் வரலாறும் நோக்கமும் அறிந்து கொள்ளப்படாது எண்ணெய்ச் சிந்துப் பாடலை ஏதோ ஒரு தேவையின் பொருட்டு நிதி அறவிடும் நோக்கோடு செயற்படுவதும் தற்கால மாணவர்களுக்கு அது தொடர்பான போதிய விளக்கமளிக்கப் படாதிருப்பதும் வேதனைக்குரியதே.

திரு மு. கோவிந்தராசா
பொறுப்பாசிரியர்
லைசியம் கல்வி நிலையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எண்ணெய்ச் சிந்து

## காப்பு

ஆனை முகனே யரனார் திருமகனே
கானமதம் பாயுமொரு கையோனே - ஞானமுற
வித்தை கற்கும் பிள்ளைகட்கு விக்கினங்கள் வாராமல்
நித்தநித்தம் நீ துணையாய் நில்.

பூமாது நாளும் புகழுமெண்ணைச் சிந்துதனைப்
பாமாது தன்னருளாற் பாடவே - யாமோது
செம்பொற் கதிரைநகர்ச் செல்வனுக்கு முன்பிறந்த
கம்பக் கரிமுகத்தோன் காப்பு.

செந்திருவைச் சேரலாஞ் செந்தமிழைப் பாடலாம்
இந்திரனைப் போல்வாழ்ந் திருக்கலாம் - சுந்தரஞ்சேர்
வெட்பகத்தை யூடறுத்த வேலவர்க்கு முன்பிறந்த
கற்பகத்தைக் கைதொழுதக் கால்.

## கணபதி துதி

சீரார் கனியெண்ணெய்ச் சிந்துதனை யான்பாடக்
காரானை மேனிக் கணபதியே முன்னடவாய்
அந்தி மதிசூடும் அரனார் திருமகனே
கந்தருக்கு முன்பிறந்த கணபதியே காப்பாமே.

## சிவன்

முன்னாளி லாகமத்தில் மூதுணர்ந்தோர் சொன்னபடி
இன்னாளி லெண்ணெய்ச் சிந்துதனை யான்பாட
வண்ணத் தமிழ்ப்புலவர் வரைந்து குற்றம் பேசாமல்
பெண்ணை யிடம் வைத்த பிஞ்ஞகனார் தாள்துணையே.

## பரமேஸ்வரி

சோதி யெண்ணைச் சிந்துதனைத் தொல்புவியில் யான்பாட
ஆதிபர மேசுவரி யம்மையிரு தாள் துணையே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

### சுப்பிரமணியர்

எத்தி யெருதேறும் ஈசனார் தாம்பயந்த
அத்திக் கிளைய அறுமுகவன் தாள்துணையே
பற்றி யசுரர் தம்மைப் பணிவாக வேரறுத்து
வெற்றி மயிலேறும் வேலவனார் தாள்துணையே.

### சரஸ்வதி

சால நமஸ்கரித்தேன் சரஸ்வதியே யுந்தனையும்
வால சரஸ்வதியே வந்துகவி செய்யுமம்மா
பால சரஸ்வதியே நாவதனில் வந்திரம்மா
ஞால சரஸ்வதியே வாக்கருள வேணுமம்மா
வாணி சரஸ்வதியே வரமருள்வாய் என் தாயே
பேணி யுனைநடப்பேன் பெற்றவளே காருமம்மா
நாவு தவறாமல் நல்லவரந் தந்தருள்வாய்
பாவிலே நீயிருந்து பண்பாய் நடத்துமம்மா

### நூல்

ஏடு தவறாமல் எழுத்தாணி சாயாமல்
கோடு தவறாமல் குற்றமொன்றும் வாராமல்
அத்தி முகத்தோனே அரனார் திருமகனே
சித்திக் கணபதியே சண்முகனே காத்திடுவீர்
எண்ணைச் சிந்துதனை எளியேனுரைத்திடவே
அன்னையரே தந்தையரே ஆதரவாய்க் கேட்டிடுவீர்
வண்ணத் தமிழ்ப்புலவர் வரைந்து குற்றம் பேசாமல்
இந்நாளில் சிறியேன் எண்ணெய்த் தமிழ்ப் பாடல்
பாட வறியேன் பயனறியேன் பாருலகில்
நாடி யுரைக்கலுற்றேன் நல்லகவி வாணர்முன்பு
இந்த எண்ணைச் சிந்தையெல் லோரும்கேட் டிருந்தால்
கன்ம வினையகன்று காசினியில் வாழ்ந்திடுவார்
தன்ம மிகப்பெருகும் சந்ததிக ளீடேறும்
பொன்னனைய மாதாவே போதவே கேட்டிடுவீர்
அன்னையொடு தந்தை யரிய பிறவிகளே
பெற்ற வரலாற்றைப் பெருமையுடன் பேசுகின்றோம்.
சற்று மனதிரங்கித் தயவாக நீர்கேளும்
முன்னாளிலே பயனும் முக்கணனு மனமகிழ்ந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இந்நாளிலே சென்ம மீடேற வேணுமென்று
பூமிதனை வகுத்துப் பிறப்பித்தார் சீவசெந்து
ஆமிது மெய்யென் றறிந்துநீர் மாதாவே
இந்தப் பிரகாரம் இருக்குமந்த நாளையிலே
மைந்தரில்லையென்று மனதுமிகச் சோர்வடைந்து
எத்தனை செல்வ மிருந்தாலு மிப்புவியில்
புத்திரச் செல்வம் புவிமீதில் வேணுமென்று
எந்தை பரமேசுவரி யிரக்கம் புரிந்தருளத்
தந்தையரும் நீரும் தயவுகொண்ட நாளையிலே
மைந்தர்பெற வேண்டுமென்று விரும்பித் தபசுபண்ணி
அந்தமுட னெங்களுக்காய் அரிய தபசுபண்ணிச்
சிந்தை மகிழ்ந்து பெற்ற செய்திகளைச் சொல்லுகிறோம்
நன்மையுள்ள மாதாவே நாடிநீர் கேளுமெல்லாம்
தன்மையுட னெங்களை நீர் தயவாய் பெறவேண்டி
ஆராயும் வேதமுட னைந்தெழுத்தை யும்நினைத்து
நேராத கோயிலெல்லாம் நேர்ந்து தவசுபண்ணிக்
கும்பிடாக் கோயிலெல்லாம் கும்பிட்டுத் தென்டனிட்டு
நம்பிடாக் கோயிலெல்லாம் நயந்துமே செப்பனிட்டு
அன்னம் வழங்கி யரிய தவசுபண்ணிப்
பொன்னுடனே வஸ்திரமும் போதவே தானளித்துச்
சோகம் பெரிதாய்த் துயரடைந்தீ ராதலினால்
தாகமுட னெங்கள் தம்பிரான் கண்டருளிச்
சித்த மிரங்கிச் சிவனுமுமை யாளும்
மெத்த மகிழ்ந்து விடையோனுமக்கருளக்
கும்பியினில் வந்துதித்த கொள்கைகேள் மாதாவே
அம்புவியின் மீதெழுந்த அறுகுநுனிப் பனிபோலச்
சிறந்தைந்தாம் நாளில் சிறுபுன்னைப் பூப்போல
நிறைந்தபதி னைந்தாம் நாள் நீர்க்குமிழி போலாகி
ஐயாறு முப்பது நாள் அடைவுடனே சென்றபின்பு
பொய்யாமற் கோழிமுட்டை போற்றலையு முண்டாகித்
திங்கள் அணிந்த சிவனார் கிருபையினால்
உங்கள் வயிற்றில் உற்பவித்தோம் மாதாவே
உற்பவித்த நாள்முதலாய் உங்கள் வருத்தமது
கெற்பச் சுழற்சி கிறுகிறுப்பு முண்டாகிப்
பித்தமது கக்கிப் பெரிய துயரடைந்து
சத்தி யருவருப்புத் தாங்க முடியாமல்
புத்தி மயங்கிப் புவிதனில் தான்வீழ்ந்து
நித்திரை கலைந்து நினைவு தடுமாறி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வெற்றிலை பாக்கு விரும்பியருந்தாமல்
பற்றிலையோ வென்று பரனேயென வழுதீர்
சோறு மறந்தீர் சுகிர்தம் பலமறந்தீர்
வேறு வினைகளின்றி மெத்த மனஞ்சலித்த
திங்கள் நுதலாளே செப்பரிய மாதாவே
சங்கரன் தன்னருளாற் தாரணியோர் தாமறிய
மற்ற மாதத்தில் மாதவிடாய் வராமல்
சுற்றமுடன் நீங்கள் சூழ்ந்திருக்கு மந்நாளில்
ஆலிலை போலே யமர்ந்த வயிறதுவும்
சாலமுட னோங்கித் தளிர்த்து வளர்ச்சியதாய்
ஆக வொருமாதம் அனைவோரு மங்கறியப்
போகமுடன் நீங்கள் புகழ்ந்திருக்கு மந்நாளில்
மாத மிரண்டு வளமாய் நிரம்பியபின்
வேதனைகளாகி மெத்த வருத்த முற்றீர்
மூன்று மாசத்தில் முறைமையுள்ள மாதாவே
தோன்றுஞ் சுடர்காய்த்து சொகுசாய்ப் புளியருந்தி
நாலு மாசத்தில் நஞ்சுண்ட கெண்டையைப் போல்
பாலுஞ்சுரக்கப் பகற்பொழுது தூக்கமதாய்
அஞ்சு மாசத்தில் அரைவயிறு விள்ளையதாய்
விஞ்ச முலைகறுத்து விம்மியே பால்சுரக்க
ஆறு மாசத்தில் அருமையுள்ள மாதாவே
கூறு பிணிகள் கொண்டே மயக்கமுற்றீர்
ஏழு மாசத்தில் எங்களுடைய மாதாவே
தோளும் இடப்புறமும் தொப்பூளும் தான்வீங்கி
எட்டு மாசத்தில் எடுத்தடி வைக்கொணாமற்
திட்டி தனி லிடறிச் சிவனேயென வழுதும்
ஒன்பதாந் திங்களில் மேலுவமயில் மாதாவே
துன்ப மிகவாகித் தூங்கி யெழுந்து நின்றும்
வாசற் படிகடக்க மாட்டாமனீ ரிந்தும்
பேசப் பெலன்குறைந்து பெரிய துயரமுற்று
வாயு மிகுந்தே வயிறுநோ வுண்டதாகித்
தூய வுடம்புதனில் துயரடைந்தீ ராதலினால்
எண்ணை குளிகை இதமான சூரணமும்
வெண்ணையொடு நீங்கள் பரிகாரஞ் செய்த பின்பு
பத்து மாதத்திற் பரிவுடைய மாதாவே
மெத்த வயிறுநொந்து மெய்யு நடுக்கமுற்றீர்
நாதன் அருளாலே நல்லதிரு நாளதனில்
வேதன் அருளாலே மென்மேலும் நோக்காடாய்க்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கூடும் புவியுதிக்கக் குறிகண்டு நோகுதென்று
ஓடி மருத்துவத்தை யொருநொடியிற் றானழைத்துக்
கூடி வருகையிலே கூவென்று தானழுதீர்
தாயும் தமரும் சகோதரியுந் தற்சூழ
ஆயும் மருத்துவிச்சி யஞ்சாதே யென்றுரைக்க
காலுக்கு நிற்பாரும் கைதாங்கி நிற்பாரும்
மேலுக்கு நிற்பாரும் வேதனையோ வென்பாரும்
தேவதைக்கு நேர்வாரும் தெய்வமே யென்பாரும்
நோவதைக்கு தென்று நுவன்று சலிப்பாரும்
மந்திரங்களாலே வலாற்காரஞ் செய்வாரும்
தந்திரங்களாலே தளர்வாற்றி நிற்பாரும்
இந்தப்படியாக இவர்களெல்லாம் நிற்கையிலே
அந்தப் பேர்மாயன் மழுவினாற் றள்ளிவிடப்
பன்னீர்க் குடமுடைந்து பாலன் பிறந்திடவே
நன்னீர்மை கொண்டு நயந்துநயந் தெல்லோரும்
பெண்பிள்ளை யல்லவிது பேருலகில் எங்களுக்கு
ஆண்பிள்ளை யென்றே யகமகிழ்ந்து கூரைதட்டி
வாயார வாழ்த்தி வரிசையுடன் கோலெறிந்து
தாயார் மருந்துநங்கை தவிடுகொண்டு தான்புரட்டி
மஞ்சன நீராட்டி மணிமூக்குத் தான்பிடித்து
அஞ்சனந் தீட்டி அலங்காரப் பொட்டுமிட்டுச்
சடுதியுட னெடுத்துத் தாயார் மடியில் வைத்து
உடுபுடவை தன்னாலே உள்ளீரந் தான்துடைத்துக்
காட்டில் மருந்துங் கடைச்சரக்கும் தானெடுத்து
ஊட்டிநோய் தீர உவப்பாக வேபருக்கி
எங்கெங்கு மோடி இரக்கமுடன் பால்வாங்கிச்
சங்குதனில் வார்த்துக் தயவாய்ப் பருக்கியதும்
கண்ணூறு நாவூறு அத்தனையும் வாராமல்
வெண்ணீறு கொண்டு மெய்யில் மிகப்பூசி
வேப்பிலையினாலே மிகுபுகையும் தான் காட்டிக்
காப்பணிந்தே அஞ்சாங் கணக்கில் மருங்கை செய்து
பன்னிருநாட் சென்றே பலபேருந் தான்கூடி
இன்னிதமா யெங்களுக் கேற்றமருங்கை செய்து
சாணை யுதறித் தயவாய் மடியில் வைத்துப்
பேணிவளர்த்தீரே பிரியமுள்ள மாதாவே
முப்பது நாளெண்ணி முடிந்தமறு நாளையிலே
செப்பமுட னெங்கள் சிரசின்மயிர் களைந்தும்
வெற்றிலை பாக்கும் மிகவருந்தல் தான்மறந்தும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நித்திரையு மற்றே நினைவுந் தடுமாறி
ஓராட்டிச் சீராட்டி யுள்ளம் மிகமகிழ்ந்து
தாலாட்டுஞ் சொன்னீரே தாயாரே எங்களுக்கு
அங்கையி லேந்தி யணைத்து மடியில் வைத்து
மங்காமல் முத்தமிட்டு மகனே யெனப்புகழ்ந்து
மெச்சி மடியில் வைத்து மென்மேலும் முத்தமிட்டு
உச்சியுல ராமல் உகந்துநீ ரெண்ணெய் தப்பிக்
கட்டெறும்பு சிற்றெறும்பு கடியதேள் மூட்டையிவை
திட்டமுட னென்றும் தீண்டா தெமைவளர்த்தே
குடிவிளங்கவந்த குமாரனெனத் தாமகிழ்ந்து
விடிவிளக்கும் வைத்தீரே விளங்கிரண்டு மாதமதாய்
உடும்பு பிடிக்குதென்று உவந்து கந்து கொண்டாடிக்
குப்புற வீழ்ந்து குலாவித் தவழ்ந்துவந்து
செப்பமா யுன்மடியிற் சேருகின்ற வேளையிலே
ஏந்தியே தானெடுத்து என்மகனே யென்று சொல்லி
பெற்றெடுத்த வுங்கள்மனம் பெருகத் தனிமகிழ்ந்து
அன்னமு மூட்டி அரைவயதானபின்பு
தன்னையறிந்து தவழ்ந்து விளையாடிச்
சப்பாணி கொட்டுவித்துச் சாஞ்சாடத்தான்பயிற்றி
வைப்பாக நாங்கள் வளர்கின்ற நாளையிலே
தத்தடி வைத்துத் தடக்கி நடந்தோடி
மெத்த விரும்பி விளையாடி மந்நாளில்
ஆண்டொன்று சென்று அடியூன்றிக் கால்மிதித்துத்
தூண்டி நடைபயிற்றிச் சொற்பழக்கி எங்களையும்
சிற்றாடை சாத்திச் சிறுசதங்கை தானணிந்து
முத்தாரம் பூட்டி முழுவயிரத் தண்டையிட்டு
காறை யணிந்து கைக்கு வெள்ளிக் காப்புமிட்டு
வேறு சிறுவருடன் விளையாட்டுப் பார்த்திருந்து
மதலை மொழிகேட்டு வாவென்று தானழைத்துக்
குதலை மொழிகேட்டுக் கோலமது கண்டிருந்து
கண்ணூறு நாவூறு காற்றணவு வராமல்
வெண்ணீற்றினாலே வினைதீர்த்தாய் மாதாவே
அஞ்சுவய தானமட்டும் அன்னையரே எங்களைநீர்
கொஞ்சி வளர்த்தீரே குறையொன்றும் வாராமல்
கற்றோர் பெரியோர் கலையறிந்த மாமறையோர்
உற்றாரும் மற்றோரும் உறவுமுறை யானவரும்
எல்லாருங் கூடி யெங்களை மூடரென்று
சொல்லாமல் நீங்கள் கலைபயிற்றவே நினைந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பள்ளிக்கு வைக்கும் பருவமிது வென்றறிந்து
பிள்ளைக்குக் கல்வி பிரியமுடன் பயிற்ற
உள்ளம் மகிழ்ந்து உவப்பாய் மனமகிழ்ந்து
வெள்ளிக் கிழமையிலே வேளையுள்ள நாழிகையில்
இன்பம தான இரேவதி நட்சத்திரத்தில்
ஒன்பது கோளும் உறவுசெய்யும் வேளையிலே
தெள்ளதமி ழறிந்த தேசிகரைத் தானழைத்து
உள்ள முறையாக உபாத்தியாய ரைத்தொழுது
எங்கள் பிள்ளைதனை இணக்கமுடன் நீருகந்து
பங்கமில்லாக் கல்வி படிப்பிக்க வேணுமையா
நல்லதென் றுபாத்தியாயர் நயப்புடனே எங்களுக்குத்
தொல்லையில் லாக்கல்வி தோன்றுவிக்க வேணுமென்று
பட்டைப் புனைந்து பரிவாய் அலங்கரித்து
சட்டையுமிட்டுத் தலைப்பாவும் தானணிந்து
செம்பொன் னரைஞாண் சிறப்பாய் இடுப்பிலிட்டு
பைம்பொன் மயிர்கோதி அழகாய் முடித்த பின்பு
பக்தியுடனே பரிவாய்த் தரைமெழுகி
சித்திக் கணபதியைச் சரசுவதியையும் நிறுத்தி
பிள்ளையார் செய்து பெரியவிளக் கேற்றிவைத்து
வெள்ளித் தைலாவில் வெற்றிலையும் பொற்பணமும்
அள்ளிக் குவியல் செய்து அன்பாயரி செடுத்து
பிள்ளையாருக் கென்றே பெருத்த நிறைகுடமும்
வெற்றிலையும் பாக்கும் விரும்பிய பூகரும்பும்
தெள்ளிய மோதகமும் சீனிகண்டு சர்க்கரையும்
வாழைப் பழமும் மாங்கனியுந் தீஞ்சுளையும்
வேழ முகத்து விநாயகர்க்கு முன்குவித்து
ஐங்கரற்குப் பூசை யன்பாய் முடித்தபின்பு
அரிச்சுவடி தானெழுதி யரிநமோ வென்றுரைத்து
ஓதினார் பாடம் உபாத்தியாய ரெங்களுக்கு
நீதி முறையாய் நிலவெழுத்துந் தான் பழக்கி
அரிவரி யிலக்கணம் ஆனவெழுத் தத்தனையும்
பரிவாக நாங்கள் பயின்றுவரு மந்நாளில்
சாயும் பொழுது தரையிலே பேரெழுதி
நேய முடனே நிதமும் மனமகிழ்ந்து
வாயிற் கணக்கும் வகையான பெயர்க்கணக்கும்
தேசக் கணக்கும் சிறப்பான நாட்கணக்கும்
எண்ணற் கணக்கும் எழுத்துப் பிரிவுகளும்
உண்மைப்படியே உபாத்தியாய ரெங்களுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆத்திசூடி கொன்றைவேந்தன் அன்பான மூதுரையும்
நேர்த்தியாய் நன்னெறியும் நல்வழியும் நாம்படித்தோம்
உரிச்சொல் திவாகரமும் உண்டான நன்னிகண்டும்
மாடேறு மீசுரனார் மாலைகளுந் தான் படித்தோம்
அன்றுதொடுத் தின்றளவும் அன்பாக வெங்களையவர்
நேசித் திருந்து நிதமுமது தொழிலாய்
உள்ளபடி யெல்லாம் உவந்துதந்தார் மாதாவே
பாடாயிரம் பட்டார் பார்க்க வொண்ணா மாதாவே
எங்களுக்காக இப்பாடு பட்டதினால்
திட்டமுடன் ஐயர்மனம் தேற்றவே வேணுமென்று
ஆன புது வருடம் அடுத்த விடுதலைக்கு
மானமுள்ள தேசிகர்க்கு வருங்கூலி வாங்கவந்தோம்
அரிசிபணம் சீலை அடைவுடனே தான்வாங்க
பரிசினுடன் நீர்வாழும் பதிக்குவந்தோம் மாதாவே
வாசித்துத் தந்தகடன் வைத்திருத்த லாகாதெ
ஓதுவித்தகாசில் ஒருகாசு சிக்கிநின்றால்
பாதிவித்தை தானும் பலியாது மாதாவே
ஏட்டுச் செலவுதன்னை இல்லையென்ற பிள்ளைகள்தான்
மோட்டுத் தனப்படுவார் முறைமையிது மாதாவே
மாதப் பணமும் வயிற்றுப் படியரிசும்
போதக் கொடுத்தாற் புகழுண்டு மாதாவே
ஆன சனிக்கிழமை யரிசியெண்ணெய் தண்டவந்தோம்
சனியெண்யெண்க் கென்றவந்தோம் தாயே சலியாதே
இனி யெண்ணெய் இல்லையென் றேதும் உரையாதே
வருத்திப் படிப்பித்த வாத்தியார் தன்கூலி
பொருத்த முடனிருந்தாற் புண்ணியமுண் டுங்களுக்கு
செல்வப் பொருள்தான் சிலவேளை யழிந்துவிடும்
கல்விக் கிணங்கியதோர் கைப்பொருளு மில்லையம்மா
செல்வக் குமாரரெல்லாஞ் சேரவே வந்து நிற்க
முத்துக் குமாரரெல்லாம் முற்றத்தே வந்து நிற்க
பவளக் குமாரரெல்லாம் பந்தலின்கீழ் வந்துநிற்க
அருமைக் குமாரரெல்லாம் அருகிலே வந்துநிற்க
பார்த்து மிருக்கிறீரோ பாலகனார் தன்சிறப்பை
உச்சி துடிக்குதம்மா உள்ளங்கால் வேகுதம்மா
பிச்சிகளோ நீங்கள் பின்னிரக்க மில்லையம்மா
கால்கை கடுக்குதம்மா கமலமுகம் வாடுதம்மா
மேல்கள் வலிக்குதம்மா வெயிலில் உருகுதம்மா
மேனிநடுங்குதம்மா வெகுசோக மாகுதம்மா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வேர்த்துச் சொரியுதம்மா வெந்நீர் குளித்தாற்போல்
பார்த்து நிற்கலாமோ பாலர் படுந்துயரம்
தண்ணீர்விடா யாகுதம்மா தாகமிகத் தோணுதம்மா
கண்ணீர் சொரியுதம்மா கரங்கள் கடுக்குதம்மா
வயிறு பசிக்குதம்மா வாயாவி கொள்ளுதம்மா
தயிரு மிளநீரும் தாருமம்மா தாயாரே
ஈனா மலடிகளோ இரக்கமில்லாப் பாவிகளோ
தானாயிரங்காமல் தாட்சணிய மற்றீரோ
மாணிக்கம் முத்து வைரம் வைடூரியம்
காணிக்கை யிட்டுக் கதிரவனைப் போற்றிசெய்து
பேணி வளர்த்துப் பேறுபெற வேணுமென்று
வாணிபங்கள் செய்து மருங்கு குறையாமல்
கூலிக்குச் செய்யாமல் கொள்ளையிட்டுத் தின்னாமல்
வேலிக்கு முள்ளுவெட்டி வீணனாய்ப் போகாமல்
கள்ளனாய்ப் போகாமல் காவாலி யாகாமல்
சுள்ளி விறகெடுத்துச் சுமைதலைமேல் வையாமல்
பள்ளிக் கொளித்துப் பரதேசம் போகாமல்
உள்ளபொருளழிக்க உகந்து குடியாமல்
ஆடுகள் மேய்த்து அலைந்து திரியாமல்
மாடுகள் மேய்த்து மடையனாய்ப் போகாமல்
கப்பலி லேறி கலாபசுபற்றி யுண்ணாமல்
இப்புவியில் எங்களை ஏனையோ ரேசாமல்
சூது விளையாடிச் சுகமிழந்து போகாமல்
மாதர்பின்னே சென்று மயங்கித் திரியாமல்
ஓடு தனையெடுத்து யாசகியாப் போகாமல்
கூடுஞ் சபையைக் குலைக்க நினையாமல்
வெய்யிலிலே நின்று வெகுவேலை செய்யாமல்
பொய்க ளுரைக்காமல் பெரியோரை யேசாமல்
வம்பனென்று கேளாமல் வகைமோசஞ் செய்யாமல்
நம்பின பேருக்கு நான்துரோகஞ் செய்யாமல்
அண்டின பேரை யடுத்தடுத்துக் கெடுக்காமல்
என்றுஞ் சபை தனிலே யேமாந்து நில்லாமல்
சும்மா திரிந்து சுணங்கனாய்ப் போகாமல்
இம்மாத்திரமு மில்லாமல் எங்களைநீர்
பள்ளிக்கு வைத்துப் பலகலைக ளோதுவிக்க
அள்ளிக் கொடுத்தோ அநேகஞ் செலவழித்தீர்
ஆகையால் நாங்கள் அறிவுநூல் கற்றதனால்
பாகனைய தாயாரே பரிவுடைய மாதாவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈனமிகப் பேசாமல் எங்களுடை மாதாவே
பச்சரிசி தேங்காய் பணமோடு வெள்ளிலையும்
இச்சையுடன் நீங்கள் இதமாய் மனமகிழ்ந்து
இஞ்சி மிளகுடனே ஈருள்ளி வெங்காயம்
மஞ்சளிரு சீரகமும் மணக்கும் பெருங்காயம்
பாகற்காய் தேங்காய் பயத்தங்காய் கத்தரிக்காய்
ஆக விவைமுதலாய் அன்பான பூசணிக்காய்
உப்பு மிளகாயும் ஊறுகாய் தன்னுடனே
குப்பியில் எண்ணெய் கொண்டு வந்து வார்த்துவிடீர்
வேட்டி சவுக்கம் விதமான வஸ்திரங்கள்
நாட்டமுடன் ஈந்தால் நயமுண்டு மாதாவே
நாடி நடந்து நலிந்து துயரமுற்று
வாடி மிகநொந்து வருந்துகிறோம் மாதாவே
பாலர் படுந்துயரம் பார்க்கிலையோ மாதாவே
வால இளங்குமரர் வருந்துகிறோம் ஆச்சியரே
பாடம் படித்துப் பழம்பாட மொப்புவிக்க
ஓடிவரச் சொன்னார் உபாத்தியாயருக் கென்னசொல்வோம்
பொன்னும் பொருளும் மிகும்போ தழிந்துவிடும்
அன்னையரே கல்வி யழியா தொருநாளும்
கல்விக் கிணையாகக் கனதேட்ட மில்லையம்மா
செல்வமென்னுங் கல்வி மிகச்சேரத் தாருமம்மா
வீட்டிலெண்ணை யில்லாட்டால் விடுகாசு மில்லாட்டால்
கேட்டுக் கடன் வாங்கி கிருபையுடன் தாருமம்மா
வந்தும் வெகுநேரம் வருந்தா தனுப்புமம்மா
எங்கள்குரு வானவர்தா னிந்நேரம் பாரத்திருந்து
வெங்கண் சிவந்து வெகுகோபம் கொண்டிருப்பார்
இன்னுஞ் சற்றுநேரம் இவ்விடத்தில் நின்றுவிட்டால்
பழம் பாடம் சொல்கிறதும் பாங்காய் எழுதிறதும்
அன்னையரே கல்வி யடைவுடனே சொல்கிறதும்
தவறில் எங்களுக்குத் தான்செய்யும் ஆக்கினைகேள்
காதிற் பிடித்துக் கடுகெனவே கிள்ளிடுவார்
மோதிப்பிடித்து முதுகின்மேற் போட்டிடுவார்
கொட்டான் பிரம்பாலே கூப்பிட் டடித்திடுவார்
நெடிய பிரம்பாலே நீட்டி யடித்திடுவார்
கட்டி யுருட்டிக் கடுவெயிலிற் போட்டிடுவார்
கட்டி யடித்துக் கனதண்டஞ் செய்திடுவார்
கூட்டோடு பொல்லாக் கொடிய முசுறுதனைப்
போட்டடுவா ரெங்கள் பொன்னான மேனியிலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பாட்டைப் படித்துப் பழம்பாடம் சொல்லாட்டால்
சாட்டையெடுத்துச் சடசடென வீசிடுவார்
பாடங் கொடாதிருந்தால் பாராமல் எங்கள்முகம்
வாடாநீ யென்று வலுவாய்ப் பிடித்திழுத்து
நெற்றியிலே கல்லுவைத்து நேர்கதிரோன் முன்பாக
ஒற்றைக்காலில் நில்லென்று உறுக்கி யடித்திடுவார்
துரும்பெடுத்து நீங்கள் தொட்டிடா மேனியிலே
அறிவைப் புகட்டுதற்கு ஆக்கினைகள் செய்திடுவார்
பள்ளிக் கொளித்தாற் பதறப் பிடித்துவந்து
கொல்லுவே னென்று கோபித் தடித்திடுவார்
கட்டளை யிட்டபடி கருத்தாய்ச் செய்யாக்கால்
திட்டமுடன் எங்களைச் சினந்துறுக்கி யேயடிப்பார்
நேரமது சென்றாக்கால் நெற்றிதனிற் கல்லேற்றி
வாரிச் சவுக்கெடுத்து வளமாகத் தான் பிடித்து
வீசியடித்திடுவார் மெய்யுதிரங் கொப்புளிக்க
கூசி நடுங்கிக் கூவென் றழுதிடுவோம்
அன்றியே யத்துயரம் ஆற்றாது மாதாவே
பன்றிச் சுருக்கிட்டுப் பதைபதைக்கப் போட்டிடுவார்
சிரந்தனிலே யெண்ணெயிட்டுச் சீவி முடிதரித்து
சேறணிந்த கையாற் றிருமுகங்கள் சுத்திபண்ணி
நீறணிய வில்லையென்று நிட்டூரம் செய்திடுவார்
நாவழித்துப் பல்விளக்கி நாளும் வராதிருந்தால்
கூவென்று நாங்கள் கூச்சிலிடத் தானடிப்பார்
பள்ளியில் நாங்கள் படுந்துயரம் மாதாவே
உள்ளபடி உரைக்க உள்ளம் கரைந்தழுவீர்
மாதண்டம் பண்ணி மகாகொடுமை செய்திடுவார்
கோதண்டம் தன்னில் கொண்டுபோய்த் தூக்கிடுவார்
ஆதண்டம் என்னுயிரும் ஆகாசம் போயிடுமே
ஏதென்று கேட்பவர் யார் எமையீன்ற மாதாவே
அல்லும் பகலும் அனுதினமும் நம்வீட்டில்
பாடம் படியா திருந்தால் பள்ளிக் கொருநாளும்
வரவேண்டா மென்று வசைசொல்வார் மாதாவே
படிக்கும் பொழுது பார்வையிட்டு எங்களையும்
நடுக்க மெடுக்க நயந்தடிப்பார் மாதாவே
கணக்குப் பிழையிருந்தால் கதறவே தானடிப்பார்
முற்றும்பொய் தானுரைத்தால் முதுகிற்றோல் வாங்கிடுவார்
உபாத்தியாயர் சற்றே மனமிளகி விட்டாலும்
சட்டம்பி யென்னும் சண்டாள மாபாவி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சற்று மிரக்கமின்றி சாடைகள் சொல்லிடுவான்
குற்றங்கள் கூறிக் கொடுமைகள் செய்திடுவான்
வழியில் விளையாடி வகைமோசஞ் செய்திடுவான்
பழிகள் மிகக்கூறி பங்கங்கள் செய்திடுவான்
தலையிலே குட்டிடுவான் தழும்புபெற நுள்ளிடுவான்
அம்மாவே தாயாரே அரிய பிறவிகளே
சும்மா நாம்நின்று சுணங்குவது நீதமன்று
மலடியறிவாளோ மக்கள் அருமைகளை
ஈதல்லா லுங்களுக்கு இன்னமும் சொல்வோம்கேள்
பூதலத்தை நம்பிப் புகழ்ந்து மனமகிழ்ந்து
தீதற்ற செல்வம் சிறப்பாய் மிகப் பெறினும்
காதற்ற வூசி கடைவழிக்கு மாகாது
வண்ணான் தன்கூலி மருத்துவிச்சி தன்கூலி
அண்ணாவியின் கூலி ஆனபண் டிதன்கூலி
உற்றகலை யோதுவிக்கும் உபாத்தியாயர் தன்கூலி
நற்றிறமாய் வேலைசெய்யும் நாவிதன் தன்கூலி
இத்தனைபேர் கூலிகளை இல்லையென்றால் மாதாவே
மெத்த நரகுதன்னில் வீழ்த்திடுவார் மாதாவே
ஆகாது நீங்கள் அநியாயம் செய்தாக்கால்
போகாது தோஷம் பூதலத்தில் மாதாவே
ஆகையா லெங்கள் அறிவுடைய மாதாவே
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள பழமொழிகாண் மாதாவே
வெண்ணீறு மைந்தெழுத்தும் வேதா கமமுறையும்
கண்ணீறு மில்லாக் காசினியில் வாழ்ந்திடுவீர்
மாரி பொழிந்து மகிதலமுந் தான் வாழி
ஊரிலுள்ள பெரியோர்கள் உயர்ந்து நிதம்வாழி
அன்னம் பெறுவீ ரரியதவம் பெறுவீர்
சொர்ன்னம் பெறுவீர் சுகங்களெல்லாம் நீர்பெறுவீர்
இன்னம் பெறுவீர் எங்களைப்போல் மைந்தர்களை
எந்தன் குருவாழி ஈன்றெடுத்த தாய்வாழி
தந்தை மிகவாழி சான்றோர் மிகவாழி
எந்தை கிளைவாழி ஈன்றோர் மிகவாழி
பாடினோர் வாழி படித்தோர் மிகவாழி
ஏடுபிடித்து எழுதினோர் தான்வாழி
மாதமும் மாரி மழைபொழிய மானிலத்தில்
ஆல்போற் றழைத்து அறுகதுபோல் வேரூன்றி
மூங்கில்போற் கூட்டம் முசியாமல் வாழியவே.

– முற்றிற்று –


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## எமது கல்வி நிலையத்தில் கல்வி கற்று தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்றோர், பாரட்டுப் பெற்றவர் விபரம்

| வருடம் | மாணவர் பெயர் | மாணவர் பெற்ற புள்ளி | மாவட்ட வெட்டுப் புள்ளி |
|---|---|---|---|
| 2011 | தி. டிலக்சன் | 184 | 151 |
| 2012 | த.விதுர்ஷனா | 149 | 147 |
| 2013 | பா.கிருஸ்ணரூபன் | 155 | 155 |
| 2014 | சு.ஜனிஸ்ரன் | 160 | 150 |
| | கு.அனுசாயினி | 160 | 150 |
| | வி.விதுசன் | 152 | 150 |
| 2015 | - | - | - |
| 2016 | - | - | - |
| 2017 | - | - | - |
| 2018 | கே.விதுசன் | 183 | 164 |
| | கு.கபிலக்ஷன் | 172 | 164 |
| 2019 | ச.டிதர்ஷன் | 179 | 152 |
| | லி.ஜிகான் | 179 | 152 |
| | அ.அபிநயா | 171 | 152 |
| | ப.கபிஷன் | 161 | 152 |
| 2020 | தி.லக்ஸ்மபிரியன் | 170 | 160 |
| | பு.விதுர்சன் | 167 | 160 |
| | ஜெ.ஜெசான் | 166 | 160 |
| 2021 | கி.ஸதுஸ்ரிக்கா | 158 | 147 |
| | ர.துர்ஷீன் | 155 | 147 |
